வெளிநாட்டு இதழாகப் பதிவு பெற்றது.

# சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

. CHINTAMANI இல. 690 1983 பெப்ரவரி 6 ஞாயிற்றுக்கிழமை ★ ★ சிந்தாமணி

SRI LANKA - JAFFNA RECEIVED 1983-2-07 PERIODICALS DIVISION LIBRARY

# ஜனாதிபதி தமிழ்நாடு செல்கிறார்

# எம். ஜி. ஆருடன் பேச்சுவார்த்தை



## நாடாளுமன்ற கூட்டம் புதனன்று

கொழும்பு, பெப். 6

நாடாளுமன்ற மூன்றாவது கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை

(2 ஆம் பக்கம் பார்க்க)



காலமகள் கற்பனையில் கவிதை வடித்தாள் — அதில்
கார் கூந்தல் காற்றசைய கன்னி பிறந்தாள்!
கோலஎழில் குளிர்முகத்தில் வண்டு வளர்த்தாள் — அதைக்
குமாரி மலர் ஏன்விழியின் கூட்டில் அடைத்தாள்?

## தமிழர் பிரச்சினைகளை தீர்க்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை சென்னைத் தலைவர்களுக்கு விளக்குவார்

கொழும்பு, பெப். 6

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அடுத்த மாத முற்பகுதியில் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்வார் என்று தெரிய வந்துள்ளது.

• அங்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையும், மற்றைய தமிழகத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளை ஜனாதிபதி தமிழக தலைவர்களுக்கு நேரடியாக விளக்கிக் கூறுவார்.

ஜனாதிபதியின் தமிழக விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கான, இரா... தீவுப் பேச்சுவார்த்தைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. என்று சிந்தாமணிக்குத் தெரிய வந்திருக்கிறது.

ஜனாதிபதியின் தமிழக விஜயம் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான கசப்புணர்வுகளை நீக்கி, நல்லுறவை ஏற்படுத்த வழிகோலும் என அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

அண்... நாட்டில் இல... கையின் தமிழ் பகுதிகளில் நடைபெற்று வரும் சம்பவங்கள் குறித்து தமிழகத் தலைவர்களுக்கு தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் கருதுகிறது.

இதனால் இலங்கை அரசாங்கத்தின் மீது தமிழக மக்களும், அரசியல்வாதிகளும் அதிருப்தி கொண்டிருப்பதாக அரசாங்கத்திற்கு தெரிய வந்திருக்கிறது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீப் தாக்குதலுக்கு அதி சக்தி வாய்ந்த துப்பாக்கிகள்!

கொழும்பு, பெப். 6

உரும்பராய் கற்பக விநாயகர் கோயிலடியில் வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஜீப் மீது நடத்தப்பட்ட கோரத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிச் சன்னங்கள் இலங்கையில் கிடைக்காத அதிசக்தி வாய்ந்த சன்னங்கள் என அறியவந்துள்ளது.

இச் சன்னங்கள் இலங்கை பாதுகாப்பு படையினரிடம் கூட கிடையாது என்று வட பிராந்திய உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் சிந்தாமணிக்குத் தெரிவித்தார்.

ஜீப்பின் மீது சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் குழு குழுவாக பிரிந்து எதிரும் புதிருமாக நின்று துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி உள்ளனர்.

பெருந் தொகையான துப்பாக்கிச் சூடுகள் விமர்சனம் ஜீப்பை தொடர்ந்து செலுத்திய சாரதி பாராட்டுக்குரியவர் என யாழ். பொலீஸார் தெரிவிக்கின்றனர். (த—மு)

## இறக்குமதி முத்திரை வரிகள் அ...லாம்!

கொழும்பு, பெப். 6

இறக்குமதிப் பொருள் மீதான வரியும், எல்லாத் துறைகளுக்கும் பொருந்தக் கூடியதாக முத்திரை வரியும் அதிகரிக்கப்படலாம்.

எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அரசாங்கத்தின் ஆறாவது பட்ஜெட்டில் இந்த இரண்டு அதிகரிப்புகளும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய முத்திரைச் சட்டத்தில் மேற்படி முத்திரை வரித் தொகை அதிகரிக்கப்படும் என்றும், இதன் மூலம் மேலதிகமாக இருநூறு கோடி ரூபா வருமானத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ளும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## க...டியில் பெரு வரவேற்பு நகரம் விழாக் கோலம்

— சிந்தாமணி நிருபர் ஐ. ஏ. ந...க் —

கண்டி, பெப். 5

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின் ... ஊர் இன்று (சனி) காலை ஹெலிக்கொப்டர் மூலம் கண்டியை வந்தடைந்த ஜனாதிபதிக்கும் அவரது பாரியாருக்கும், பிரதமர் தம்பதியருக்கும் கண்டி மாநகரில் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பயணம் செய்த ஹெலிக்கொப்டர்கள் இன்று காலை 8.45

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி இன்று உரை நிகழ்த்துவார்

### கண்டி எண்கோண மண்டபத்திலிருந்து

கண்டி, பெப். 6

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.35 மணிக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டி எண்கோண மண்டபத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார்.

இன்று காலை 9.00 மணிக்கு ஜனாதிபதி கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் விவசாய, கைத்தொழில் பொருட் காட்சியைக் கண்டு களிப்பார்.

பிற்பகல் 2.45 மணிக்கு தலதா மாளிகையின் நுழை வாயிலை வந்தடையும் ஜனாதிபதியை தியவதன நிலமேயும், நீதி அமைச்சருமான கலாநிதி நிஸ்ஸங்க விஜயரத்னவும் மற்றும் பல நாயக்க நிலமேக்களும் வரவேற்பார்கள்.

அஸ்கிரிய மல்வத்தை, அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகள் செத்பிரித் ஓதுவார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு விசேஷ தந்த சின்ன வழிபாட்டில் ஜனாதிபதியும், பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள்.

இதன் பின்னரே எண்கோண மண்டபத்தில் இருந்து பிற்பகல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தீ வைப்பு முயற்சி தோல்வி

வவுனியா, பெப். 5

சுதந்திர தினமான நேற்று (வெள்ளிக்கிழமை) நண்பகல் வவுனியாவில் அரசாங்க லொறி ஒன்றுக்கு இனந்தெரியாதவர்கள் தீ வைக்க எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

வவுனியா நிவ அனைத்து ஊழியர்கள் அலுவலகத்தில் அருகில் வாகன ... லொறி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த லொறி

(2 ஆம் பக்கம் பார்க்க)

★ புலேந்திரன் கொலை விசாரணை

## ரகசியப் பொலிஸ் வவுனியா விரைவு

ஓமந்தை, பெப். 5

வவுனியா ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கொழும்பில் இருந்து விசேஷ இரகசியப் பொலீஸ் கோஷ்டி வவுனியா வந்துள்ளது.

விசாரணை நடத்திய வவுனியா பொலீஸார் மேல் விசாரணையை நடத்தும்படி இரகசியப் பொலீஸாரைக் கேட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

புலேந்திரன் கொலை தொடர்பாக சந்தேகத்தில் ஐவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தேவராஜா, தில்லை, சரத், பொடிட்., குமாரசிங்கம் ஆகியோரே இந்த சந்தேக நபர்களும் ஆவர்.

வவுனியா மாவட்ட நீதிபதி திரு. கே. பெத்தியாகொட முன்னிலையில் இந்த விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது 1 ஆம், 4 ஆம், 5 ஆம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. எம். சிற்றம்பலமும், 2 ஆம், 3 ஆம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. எக்ஸ். எம். சொர்ணபாலவும் ஆஜரானார்கள்.

நீதிபதி மேல் விசாரணையை இம் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (த– 237)

## குருநகர் இராணுவ முகாம் வீரர் காயம்

கோப்பாய், பெப். 5

குருநகர் இராணுவ முகாமில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்தது. அதனால் அவர் காயமுற்றார்.

இன்று (சனிக்கிழமை) நண்பகல் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

எம். ஏ. சோமரத்ன என்ற இராணுவ வீரரே காயமுற்றவராவார். அவர் உடனடியாக யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

குருநகர் இராணுவ முகாம் உயர் அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (த–மு–142)

## ஐவர் கொலை!

கொழும்பு, பெப். 6

வெல்லவாய பம்பரகல காட்டுப் பிரதேசத்தில் இரு கோஷ்டிகளுக்கு இடையில் நிகழ்ந்த மோதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

வெட்டிக் கொல்லப்பட்ட ஐவரும் வாடியுடன் வைத்து எரிக்கப்பட்டனர்.

சேனைப் பயிர் செய்யச் சென்ற இரு ஊரவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு இப் பயங்கர சம்பவத்தில் முடிந்தது.

காட்டுப் பகுதியில் உள்ள காணி ஒன்றை உரிமையாக்கிக் கொள்வதில் ஏற்பட்ட மோதலே இக் கொலைகளுக்குக் காரணம்.

சம்பவம் பற்றி கேள்வியுற்ற பிறக்குப் பிராந்திய

(2 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் யாழ். நூல் நிலையத்துக்கு ரூ. 5 லட்சம் பெறுமதியான புத்தகங்களை வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் இந்த நூல் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இந்த அன்பளிப்புக்கான அடையாள பொதியை சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதுவர் திரு. நியூட்டன் சமரசிங்க தமிழ்நாடு முதல்வரிடம் இருந்து பெறுகிறார். அருகில் தமிழ்நாடு மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார், இலங்கை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை ஆகியோரும் காணப்படுகின்றனர். (த)

## வவுனியா அபி. சபை நிறைவேற்றுக் குழுவுக்கு ஐ. தே. க. உறுப்பினர் நியமனம்

— சிந்தாமணி வவுனியா நிருபர் வி. ஆர். சுகுமார்

வவுனியா, பெப். 5

வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுக் குழுவுக்கு ஐ. தே. க. உறுப்பினரான திரு. த. பரமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பரமநாதன் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான திரு. கே. சி. லோகேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திச் சபை நிறைவேற்றுக் குழுக்களுக்கு ஐ. தே. க. ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியை தினபதி ஏற்கனவே வெளியிட்டிருந்தது.

"வட பகுதி மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் நிறைவேற்றுக் குழுக்களுக்கு ஐ. தே. க. ஆதரவாளர்கள் நியமனம் வவுனியாவில் ஆரம்பம். அடுத்து முல்லைத்தீவு, மன்னார்" என்ற தலைப்புடன் பிரஸ்தாப செய்தி 29.1.1983 ஆம் திகதிய தினபதியில் வெளியிடப்பட்டிருந்தது.

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

கொழும்பைச் சேர்ந்த சொந்த வீட்டு வசதியுள்ள மார்க்கப் பற்றும், நற்குணமும் வீட்டு வேலைகளில் திறமையுள்ள 28 வயது முஸ்லிம் மணமகளுக்கு அவரது சகோதரன், தகுந்த ஒரு மணமகனை எதிர்பார்க்கிறார். இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் திருமணம் செய்ய விரும்புவோர்கள் விண்ணப்பிக்கவும். இல: 018903 மே/பா, சிந்தாமணி, த. பெ. 1257, கொழும்பு. 018903

## பேனா நண்பர்

இலங்கை மற்றும் சகல உலக நாடுகளெங்கும் உள்ள பேனா நண்பர்களுடன் தொடர்புகொள்ள சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க!
"Penpal Centre" P.O. Box 1898, Colombo.
019570

பேனா நண்பர்கள் தொடர்பு, விபரப் புத்தகத்திற்கு பிரதான தபாற் காரியாலயங்களில் கிடைக்கும் International Reply Couponவுடன் விண்ணப்பிக்கவும்.
"MOONRISE" (Govt. Regd.) Puthaneri, Nanguneri 627108 Tamil Nadu, (India)
019247

## தேவை

சப்பாத்து வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற சேல்ஸ்மன் தேவை. அடையாள அட்டையுடன் நேரில் வரவும். ஜெம் ஷூ பெலஸ், 399, பிரதான வீதி, இரத்தினபுரி.

## டிக்ஷனரி

ஆங்கில - ஆங்[illegible] "லிப்கோ டிக்ஷனரி[illegible] கள் 73000 சொற்க[illegible] விளக்கம் உள்ளது[illegible] வி. பி. பி. யில் பெறுவதற்கு ரூபா 4/-க்கு முத்திரை அனுப்பவும்.
Broocklyn Sole Agent, 284, Modera Street, Colombo 15
019252

லிப்கோவின் ஆங்கில - தமிழ் அகராதி விற்பனைக்கு உண்டு. 300 பக்கங்கள்! விலை 17/50 வி. பி. பி. உண்டு.
"Book Sellers", 189, Central Road, Colombo 12.
026149

## தமிழ் மூலம் ஆங்கிலம்

"லிப்கோவின் 30 நாட்களில் ஆங்கிலம்" ஒவ்வொரு சொல்லுக்கும் தமிழில் விளக்கமுள்ளது. 604 பக்கங்கள் விலை 44.80. மிக நிச்சயமான பலன். வி. பி. பி. இல் பெறுவதற்கு ரூபா 4/-க்கு முத்திரை அனுப்பவும்.
Broocklyn Sole Agent, 284, Modera Street, Colombo 15
019252

## ஜோதிடம்

ஆயுள் ஜாதகக் கணிப்பு — வருஷம் 55/- என் முறைப்படி வாழ்க்கை தேவைக் குறிப்பு 27 அம்சங்களை எழுதி அனுப்பு (9 வருட பலன் மட்டும்) 40/-. (வசிய ரக்ஷிகை — பாதுகாப்பு யந்திரம். / கல்வியில் சித்தி பெற), 72/- வியாபார விருத்திக்குரிய ஸ்ரீ கணபதி, குமரகுரு, கருமாரியம்மன், மகாலட்சுமி, சிவபார்வதி அம்பதி ஒன்று யந்திரங்கள் இருவருடன் 9" X 9" அளவில் தலா 270/-. சகல ஆடர்களுக்கும் இலவச தந்தர் சக்தி கவசம். பாலசுப்பிரமணியம் தாதி அனுப்பப்படும். சோதிட தத்துவ ஞானி, பி. கே. சாமி, 33, இளச்சந்தை, நுவரெலியா.

## மருந்து

இதோ இரகசிய மருந்து மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஆடவர்களுக்கு மட்டும்) ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்ய விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, அரசாங்க பதிவு பெற்ற பி. எம். திசாநாயக்கா குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை, புதுக்கோட்டை.
019159

## "விலாசங்கள்"

ஏராளமான, சர்வதேச பேனா நண்பர்களின் விலாசங்கள் கொண்டது — "கோவை பேனா நண்பர் சஞ்சிகை". தபாலில் பெற விரும்புவோர், ரூ. 3/-க்கான போஸ்டல் ஓடர் அனுப்புக!
M. Dhanmalinkgam, (Edi-Koval), 189, Central Road, Colombo-12.
026150

## ஆங்கிலம் கற்க

தபால் மூலம் ஆங்கிலம் கற்க விரும்புவோர் சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
Brilliant Institute, P.O. Box 1898, Colombo.
019591

ஆரம்பம் முதல் இலகு வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள "Easy English" விலை ரூ. 14/- வி. பி. பியிலும் பெறலாம்.
St. Anthony's, 59, Mayfield Road, Colombo 13.
019680

## அகராதி

English — Tamil — Dictionary விற்பனைக்கு உண்டு. 325 பக்கங்கள் விலை 18/50 வி. பி. பியிலும் பெறலாம். (இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது)
St. Anthony's, 59, Mayfield Road, Colombo 13.
019680

Tamil - English Dictionary விற்பனைக்கு உள்ளது. 16,000 சொற்களுக்கு மேலுள்ளது. விலை: 19/50 வி. பி. பியிலும் பெறலாம். (இறக்குமதியானர்கள்)
City Training Centre, 128/34 Gintupitiya Street, Colombo-13.
019682

[illegible]

உவர்மலை திருகோணமலை கடற்கரை, துறைமுகத்தை நோக்கிய படி 590.5 பட்சஸ் காணி உடன் விற்பனைக்கு உண்டு. பிரிவிடுதல் வழக்கில் உறுதிப்படுத்தப்பட்ட உறுதி, மின்சாரம், நீர் வசதியுடன் உடனடி விற்பனைக்கு முழுமையாக அல்லது துண்டுகளாக. தொடர்பு கொள்ளவும் சி. சச்சிதானந்தம், சட்டத்தரணி, 125, தபால்கந்தோர் வீதி, திருகோணமலை.
019225

## யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத சொப்பனங்களும் பலன் கிடைக்காத மனக் கஷ்டங்களா? காதலர்களுடைய பாசம் மாறாமல் இருக்க வேண்டுமா? தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா? கிரக தோஷமா? செய்வினை தவியமா? ஆகியவற்றிற்கு நிவாரணம் அளிக்கப்படும். விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அரசாங்க பதிவு பெற்ற பி. எம். திசாநாயக்கா, குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை புதுக்கோட்டை. போன்: 33955

## பெண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் சம்பந்தமான கர்ப்பமுடமாவதும் உடன் சுயாதீனம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தியுங்கள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் இவைசர் இருந்திருக்கும். சிற்றாம் வீனித் மாதுகடையை
218469

## வருடமலன்

நடப்பு வருட பலன், சகலருக்கும் தெளிவாக தரப்பட்டுள்ள பிறருக்கு மகத்தான வெளியீடு. சொந்த பிரதிகளை உள்ள தபால் கட்டணம், ரூபாய் 4/- மட்டுமே. "எண்கள்" புதிய அணுகு முறை சரியான அதிர்ஷ்ட வழி. மாத வெளியீடு ரூபாய் 3/- மட்டுமே. வியாபாரிகளுக்கு 15% கழிவு உண்டு. தொடர்பு கொள்ள, உங்கள் அதிர்ஷ்டத்தைத் தெரிந்து கொள்ள முழு விபரமும், விரும்பும் கட்டணமும் அனுப்பவும். எம். டி. நவரத்தினசிங்கம், ஆ ம ர கோட்டம், கோண்டாவில்.
018902

## மணமகன் தேவை

ஜீ. சி. ஈ. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்து, மௌலவியா பரீட்சையிலும் அல் ஆலிம் பரீட்சையிலும் பூரண சித்தியடைந்த, நல்ல ஒழுக்கமும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவருமான 26 வயது மணமகளுக்கு மார்க்கப்பற்று மிக்க மணமகன் தேவை. முழுவிபரமும் முதல் கடிதத்தில் எழுதவும். இல. 026121 மே/பா சிந்தாமணி, த. பெ. 1257, கொழும்பு.
026121

## ஆங்கிலம், சிங்களம் கற்க

குறுகிய காலத்தில் தமிழ் மூலம் ஆங்கில / சிங்கள மொழிகளை ஒரே நூலில் கற்றுப் பேசவும் எழுதவும் (பட்டதாரி விரிவுரையாளர்களால் தொகுக்கப்பட்டது) "English-Sinhala Instructor" விலை: 18/50 வி. பி. பியிலும் பெறலாம்.
City Training Centre, 128/34 Gintupitiya Street, Colombo 13
019683

## சிங்கள நூல்

தமிழின் உதவியுடன் சிங்களம் பயின்று உரையாடவும், எழுதவும் உதவும் நூலான Sinhala Course விலை 14/- வி. பி. பியிலும் பெறலாம்.
'Bond Institute', 89/15, Jampettah Street, Colombo 13
019681

## சாரதி தேவை

[illegible]
218451

## மாந்திரீகம்

மெய்மலாஷ மாந்திரீகம் மூலம் சுவீப் அதிர்ஷ்டம் மாணிக்கம் கிடைக்க, ஆண், பெண்ணை வசியமாக்கிக் கொள்ள மற்றும் சகல காரியங்களும் வெற்றிபெற பிறந்த திகதியை எழுதி அனுப்பி இலவச விபரம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ஏ. வேல்ஆ, 98, நேபொட ரோட், மத்துகம.
019644

## ஜோதிட ஞானி

உங்களின் சகல எண் ஞான, சோதிட, மாந்திரீக தேவைகளுக்கும், கிரக சாந்தி, செய்தொழில் விருத்தி, கல்வி விருத்தி, நினைத்ததை நிறைவேற்ற எம்மை நாடுங்கள். சோதிட தத்துவஞானி பி. கே. சாமி, 33, இளச்சந்தை, நுவரெலியா.

## சட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்து நலிந்து போன பெண்களுக்கு அழகான பருமனை மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற திரும்பவும் தைலம் தயாரிக்கப்பட்டுள்ளது. விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:— அரசாங்க பதிவு பெற்ற, சிகாமணி அத்தநாயக்க, 55, மிருந்து மாவத்தை புதுக்கோட்டை
019159

எப்பொருள் விற்பனையாக வேண்டுமோ அப்பொருளுக்கு விளம்பரம் தேவை

## விசேஷ பூஜையில் தொண்டமான்

கண்டி, பெப். 6

கிராம கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இன்று 6 ஆம் திகதி கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் சுதந்திர தின விசேஷ பூஜை வழிபாட்டில் கலந்து கொள்கிறார். (த- 105)

## இறக்குமதி முத்திரை...


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் தெரிவிக்கப்பட்டது.

தனியார் துறையினருக்கான வருமான வரி நீக்கப்பட்டாலும் செல்வ வரியும் வியாபார மொத்த வரியும் தொடர்ந்து நீடிக்கும்.

ஏற்றுமதிப் பொருள்கள் மீதான வரி நீக்கப்பட வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்ட போதிலும் பட்ஜெட் பிரிவு அதனை ஏற்கவில்லை.

இறக்குமதியில் லைசென்ஸுக்கு முத்திரை வழங்கும் முறை முற்றாக நீக்கப்படலாம் என்றும் அறிய வந்திருக்கிறது.

பட்ஜெட்டுடன் பெற்றோல் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுவதும் தெரிந்ததே. (த-6)



கடந்த வியாழக்கிழமை இரவு யாழ். பிரதான வீதியில், பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான "டவுன் ஷொப்" ஸ்டோர் மர்மமான முறையில் தீப்பிடித்துக் கொண்டது. எரிந்த பகுதியின் கூரை பலத்த சேதம் அடைந்திருப்பதை படத்தில் காணலாம். (த)

[படம்: கே. எஸ். என்.]

## தீ வைப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யின் மேல் தாங்கியின் கீழ் பெற்றோல் (பிளாஸ்டிக்) தாங்கி ஒன்று வைக்கப்பட்டுத் தீ மூட்டப்பட்டது.

எனினும், அருகில் உள்ள நிலையத்தில் இதனை அவதானித்த விடுதியில் வசிப்போர் ஒன்று சேர்ந்து தீ பரவி பொருள்களைச் சேதப்படுத்தாது தடுத்தனர்.

தீ வைக்கப்பட்ட போது அலுவலக காவலாளர் வெளியே தேநீர் அருந்தச் சென்றார் எனச் சொல்லப்படுகிறது.

இது சம்பந்தமாக வவுனியா பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (கு- 321)

## அக்குபங்சர்

தபால் மூலம் அக்குபங்சர் போதனையும் பயிற்சியும் பெற தபால் தலையுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

அமைப்பாளர்
ஸ்ரீ லங்கா
அக்குபங்சர் சங்கம்,
வசாவிளான்.

## ரேடியோ/டிவி வகுப்புகள்

1983-ல் ஆரம்பமாகும் வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கப்படுவர். வெளியூர்களுக்கு தபால் கல்வி சான்றிதழுடன் வானொலிப் பெட்டியும் மாணவருக்கு வழங்கப்படும். 9 x 4 அளவுள்ள முத்திரை ஒட்டப்பட்ட உறையை அனுப்பி விபரங்களைப் பெறுங்கள்.

அதிபர்
டெக்னிகல் ட்ரெயினிங் சென்டர்,
235, 2 ஆவது மாடி,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு-11.

என். எம். எக்ஸ். சொர்ணபாலா, எல். எல். பி. (இலங்கை) சட்டத்தரணி.
இறம்பைக்குளம்,
வவுனியா

## நீதிமன்றக் கட்டளை

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற தேவசகாயம் வில்லியம் அந்தோனிப்பிள்ளை ராசரட்ணம் என்பவரின் மரண சொத்துக்கள் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்

வவுனியா நெளுக்குளம் ராசரட்ணம் யூலின் மேரி அருள்ராஜா பாலேந்திரா.

விண்ணப்பதாரர்

மரண வழக்கு
இல. 522

மேலே குறிப்பிடப்பட்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரண சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 9 திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி
பதிவாளர்
வவுனியா மாவட்ட நீதிமன்றம்
வவுனியா

1982 ஆண்டு மார்கழி மாதம் 15ந் திகதி.

## ஜனாதிபதி தமிழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவை சீர்படுத்தவும், அரசாங்கத்தின் [illegible]

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை தூதுக் குழுவிற்கு தலைமை வகித்து, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன [illegible] செல்லவிருக் [illegible] செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

[illegible] அடுத்த [illegible] ஆரம்ப[illegible] புதுடில்லியில் நடைபெறு[illegible]

அணிசேரா நாடுகளின் மாநாடு மார்ச் முதலாந் திகதி முதல் 11 ஆந் திகதி வரை நடைபெறுகிறது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொழும்பிலிருந்து மார்ச் மாதம் 5 ஆம் திகதி பயணம் புறப்படுவார். அவர் இந்தியாவில் சுமார் பத்து நாட்கள் தங்கியிருப்பார்.

புதுடில்லியிலிருந்து கொழும்பு திரும்பும் வழியில் அவர் பம்பாய்க்கும், சென்னைக்கும் விஜயம் செய்வார்.

இந்தியாவின் வர்த்தக தலைநகரமான பம்பாயில் ஜனாதிபதி இரண்டு நாட்கள் தங்கியிருப்பார்.

அங்கு இந்திய வர்த்தக பிரமுகர்களை சந்தித்து இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து அவர்களுக்கு விளக்குவார். (ஞ-6)



பாத்திமா சமீலா

திக்குவல்லையைச் சேர்ந்த ஸரீனாதிக் தம்பதியினரின் ஏக புதல்வி பாத்திமா சமீலா தனது முதலாவது பிறந்த நாளை 1983. 02. 08ல் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா சாச்சிமார், மாமாமார், மாமிமார் சாச்சா பெரியும்மா, பெரியப்பா அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.
019660

## நாடாளுமன்றம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூட்டத் தொடரை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார்.

இது சம்பந்தமான ஒழுங்குப் பத்திரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அன்றைய கூட்டத்தின் முதலாவது நிகழ்ச்சியாக, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் சபையில் வாசிப்பார்.

அதையடுத்து ஜனாதிபதியின் உரை இடம்பெறும். அதன்பின் வர் சபை நிகழ்ச்சிகள் இடைநிறுத்தம் செய்யப்படும்.

சபை மீண்டும் கூட்டப்படும். அடுத்த கூட்டம் பற்றிய அறிவித்தலை பிரதமர் சபையில் வாசிப்பார். அதன் பிறகு நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்படும்.

9 ஆம் திகதிய நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமை நடப்பவை போன்று நடக்கும். (த- ர)

## ஐவர் கொலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. எம். மகேந்திரன் அப்பகுதிக்கு விரைந்து சென்று விசாரணைக்கு உத்தரவிட்டார். (த- மு)

## கண்டியில் பெரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மணிக்கு போராதனை தாவரவியல் பூங்கா மைதானத்தில் வந்திறங்கினர்.

ஜனாதிபதியையும், பிரதமரையும் கண்டி எம். பி. திரு. ஈ. எல். சேனநாயக்கா, செங்கடகல எம். பியும், பிரதி நீதி அமைச்சருமான திரு. ஷெல்டன் ரணராஜா கண்டி மாவட்ட அமைச்சர் திரு. டபிள்யூ. பி. பி. திஸாநாயக்கா, கண்டி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. ஆர். எம். வி. இரத்தினவக்கா ஆகியோரும் கண்டி மாவட்ட எம். பிக்கள், நீதிபதிகள், மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் வரவேற்றனர்.

கண்டி மாநகராட்சிமன்றம் போராதனை பூங்கா நுழைவாயிலில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் சிறப்பான வரவேற்பு அளித்தது.

அங்கு கண்டி மேயர் திரு. திலக் இரத்தினவக்கா ஜனாதிபதிக்கு ஓர்கிட் பூக்களால் ஆன மலர்மாலை ஒன்றை அணிவித்தார். திருமதி ஜெயவர்த்தனவுக்கு சிவப்பு நிற ரோசா மலர்ச் செண்டு ஒன்று அளிக்கப்பட்டது.

பிரதமருக்கு மாநகராளுமன்ற சிரேஷ்ட உறுப்பினர் திரு. எம். பி. தொடங்வெலவும், திருமதி பிரேமதாசாவுக்கு கண்டி பிரதி மேயர் திருமதி. ஷெல்டன் ரணராஜாவும் மலர்மாலை அணிவித்தனர்.

போராதனை பூங்காவிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு ஜனாதிபதி காரில் சென்ற போது பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதியில் கூடி நின்று ஜனாதிபதியை வரவேற்று, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

கண்டி மத்திய மாகாண இந்து மன்றத்தில் கலாசார மண்டபத்துக்கு முன்பாக ஜனாதிபதியை வரவேற்கும் பொருட்டு அலங்காரப் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

கண்டி வீதிகள் பச்சைக் கொடிகளினாலும், தேசியக் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (த—105)

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வி ஹாஷா நடராஜ்

113/2 பேராதெனிய வீதி கண்டியைச் சேர்ந்த ஹாஷா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (6-2-83) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மாயி, அப்பாயி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்தி, அக்காமார், அண்ணாமார் ஆகியோர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.
025373

# தர்ம ஒளி ஏற்றுவோம் சமய நிகழ்ச்சிகளுக்கு பொலீஸார் ஒத்துழைப்பு

## சுந்தர் பணிப்புரை

கொழும்பு, பெப். 6
சுயாதீன பத்திரிகா சமாஜத்திஞல் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தர்ம ஒளி ஏற்றுவோம் சமய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறும், அவர்களுக்கு பூரண ஆதரவு வழங்குமாறும் பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான உத்தரவை சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபரும் – குற்றத் தடுப்பு பிரிவு இயக்குநர் நாயகமுமான திரு. ஆர். சுந்தரலிங்கம் சகல பொலீஸ் அத்தியட்சகர்களுக்கும் வழங்கினார்.

தர்ம ஒளி ஏற்றுவோம் நிகழ்ச்சிக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கும்படி தத்தமது பிரிவுக்கு உட்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு வழங்க வேண்டும் என திரு. சுந்தரலிங்கம் பொலீஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

தர்ம ஒளி ஏற்றுவோம் நிகழ்ச்சிகளில் சமாதானம், சுபீட்சம், குற்றத் தடுப்பு தேசிய ஒற்றுமை போன்றவை பற்றிய போதனைகள் அளிக்கப்படுவதால் இது பொலீஸாரின் கடமைகளுக்கும் பெரும் உதவியாக அமைகிறது.

குறிப்பாக குற்றத்தடுப்பு பற்றி போதிக்கப்படுவதால், இதனை பொலீஸார் பயன்படுத்திக் கொண்டு நல்ல சேவை செய்ய முடியும்.

இப்படி திரு. சுந்தரலிங்கம் தெரிவித்திருக்கிறார். (த-மு)

# சென்னையில் மலையக தமிழர் உரிமை பாதுகாப்பு மாநாடு

## இம்மாதம் 19, 20 திகதிகளில் சர்வகட்சி ஆதரவுடன் நடக்கிறது

சென்னை, பெப். 5

இலங்கை மலையகத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக்கான மாநாடு இம் மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் சென்னை பெரியார் திடலில் அனைத்துக் கட்சி ஆதரவுடன் நடைபெற இருக்கிறது.

தமிழ் ஈழத் தோழமைக் கழகத்தின் சார்பில் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.

திரு. மணவைத்தம்பிக்கு உதவியாகத் திருவாளர்கள் அரு. கோபாலனும், தென்மொழி மறை நித்தலின்பனும் மாநாட்டு அமைப்பாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. மணவைத்தம்பி முன்னர் இலங்கையில் வசித்த போது இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக இருந்தவர்.

தமிழ்நாட்டுக்குச் சென்ற பின்னர் அங்கே குடிபெயர்ந்தவர்களின் நலவுரிமைகளைக் கவனிப்பதற்காக குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத்தை ஸ்தாபித்து அதன் பொதுச் செயலாளராக இருந்து பெரும் தொண்டு ஆற்றி வருகிறார்.

இலங்கைத் தமிழர் உரிமைக் கிளர்ச்சிக்கு தமிழ்நாட்டில் உரம் சேர்ப்பவராகவும் அவர் இருந்து வருகிறார்.

இலங்கை மலையகத் தமிழர் உரிமைக் காப்பு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இலங்கை கிராமக் கைத்தொழில் அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோருக்கும்,மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் பலருக்கும் திரு. மணவைத்தம்பி அழைப்பு விடுத்திருக்கிறார்.

இலங்கை மலேசியத் தமிழ்ப் பிரமுகர்களும், சர்வதேச மனித உரிமை இயக்கங்களின் பிரதிநிதிகளும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்த மார்ச் மாதத்தில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் கலந்து கொள்கிறார்.

அவர் தமது இந்திய விஜயத்தின் போது இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் பற்றி இந்திய மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இப்போது சென்னையில் நடத்தப்பட இருக்கும் இலங்கை மலையகத் தமிழர் உரிமைக் காப்பு மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



மணவைத்தம்பி

மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவர் திரு. ப. நெடுமாறன், துணைத் தலைவர்களில் ஒருவர் அண்ணா தி. மு. கவைச் சேர்ந்த டாக்டர் இரா. ஜனார்த்தனம். செயலாளர் பிரபல தி. மு. க. வழக்கறிஞர் டி. பி. இராதாகிருஷ்ணன்.

மற்றும் திராவிடர் கழகம், இந்திரா காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பாரதிய ஜனதா, குடியரசுக் கட்சி, தமிழ் நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சி, தமிழ்நாடு பார்வேட் புளொக் முதலான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும் மாநாட்டு வரவேற்புக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் பலவும் மாநாட்டில் பங்கு கொள்வதாலும் மாநாடு விசேஷ முக்கியத்துவம் பெறுகிறது.

இந்திய வம்சாவளியினர் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படுவதை மாநாடு எதிர்க்கும்.

நாடு கடத்தலுக்கு வழிசெய்யும் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் கடந்த 1964 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட மக்களின் சம்மதத்தைப் பெறாமலும், அந்த மக்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளாமலும் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அப்படியான ஒரு ஒப்பந்தம் இனிமேல் ஏற்படக் கூடாதென்று மாநாடு வலியுறுத்தும்.

இன்றைய நிலையில் இந்திய அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் மாநாடு தெளிவுபடுத்தும்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் இலங்கை அரசாங்கம் இலங்கையருக்கு உள்ள எல்லா உரிமைகளையும் வழங்க வேண்டும். வழங்கச் செய்வதற்கு இந்திய மத்திய அரசு தனது செல்வாக்கை முழுமையாகப் பிரயோகிக்க வேண்டும். இப்படி மாநாடு வற்புறுத்தும்.

தமிழக அரசாங்கமும் இந்த அடிப்படையில் மக்கள் கருத்தைத் திரட்டி மத்திய அரசைச் செயற்படத் தூண்ட வேண்டும் என்றும் மாநாடு கோரும்.

“ஆண்ட தமிழன் அகதியா?| அலைமெங்கும் அவதியா?” இந்தக் கேள்விகளுடனேயே இலங்கை மலையகத் தமிழர் உரிமைக் காப்பு மாநாடு நடத்தப்படுகிறது. (ஸ)

## நாட்டு மக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

3.35 மணிக்கு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து 300 மாணவர்கள் தேசிய கீதம் பாடுவார்கள். பின்னர் விசேஷ மண்டபத்தில் இருந்து ஜனாதிபதி மாணவர்களின் அணிவகுப்பு ஊர்வலத்தைப் பார்வையிடுவார்.

17 அலங்கார ஊர்திகளும் மற்றும் தேசிய கண்டிய நடனங்களும் இந்த ஊர்வலத்தில் இடம்பெறும்.

அதன் பின்னர் இரவு 8 மணிக்கு அரச பெரஹரா நடைபெறும்.

இந்தப் பெரஹரா ஊர்வலம் தலதா வீதி, யட்டிநுவரை வீதி, ராஜ வீதி ஆகியவற்றினூடாக நடைபெறும்.

இரவு 10 மணிக்கு கண்டி வாவியின் மத்தியில் உள்ள சிறிய தீவில் வாண வேடிக்கைக் காட்சிகளும் நடைபெறும். (த- 105)


## பாலியல் பலவீனம்

### ஆண்மைச்சக்திக்கு

திருமணமாகாத, திருமணமான ஆண்களின் ஆண்மைச் சக்தி, நரம்புச் சக்தி பெற்று, நீடிய இன்பத்தைப் பெறவும், பாலியல் பலவீனம், துரித ஸ்கலிதம் ஆகியவற்றை நீக்கி, எத்தகைய வயதினரும் ஆண்மைப் பலத்தைப் பெறவும் சிறந்த ஔடதம்.

**EVENING PARIS CREAM**

மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது

விலை: 39/90 வி. பி. பி. செலவு 3/50

**என். ஸீ. டி. ஏஜன்ஸி,**

இல. 93, ஜயந்த வீரசேகர மாவத்தை கொழும்பு —10.

வி. பி. பி. மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான விற்பனை நிலையங்கள்:—

**கொழும்பு லீலா ஸ்டோர்ஸ்**

அரசமரத்தடிச் சந்தி, புறக்கோட்டை.

**கண்டி மோவத்த மருந்துச்சாலை,**

144, கொழும்பு வீதி.

குருநாகல்: வெஸ்டன் பார்மஸி, மலியதேவ வீதி.

யாழ்நகர்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 4 A, ஆஸ்பத்திரி வீதி, பஸ்தரிப்பு நிலையம்.

சம்மாந்துறை: சமீன் ஸ்டோர்ஸ், 64,பஸார் வீதி.

வியாபாரத் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

வெளியூர்களில் விசேஷ கமிஷன் உண்டு.




## பரத நாட்டிய அரங்கேற்றம்

செல்வி நளினி அரசரத்தினத்தின் மாணவியரான செல்வி சோபனா குகதாசன், செல்வி கவிதா குகதாசன் ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.00 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஐ. கருணைவர்த்தன் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். செல்வி சாந்தா பொன்னுத்துரை தலைமையில் வைபவம் நடைபெறும்.

செல்வி சோபனா குகதாசனும், செல்வி கவிதா குகதாசனும் பிரபல தொழிலதிபர் திரு. அ. குகதாசன், திருமதி குகதாசன் ஆகியோரின் புதல்விகள் ஆவர். அவர்களின் அபிநயத் தோற்றம் ஒன்றைக் காண்க.

## வானொலி

6—2—1983

காலை —

5.30 திருப்பள்ளியெழுச்சி
5.35 தோத்திரமாலை
6.00 சைவ நற்சிந்தனை
6.05 கத்தோலிக்க நற்சிந்தனை
6.10 பௌத்த நற்சிந்தனை
6.15 பாமாலை
6.25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6.30 செய்திகள்
7.00 இங்கிலிஷ் போர் யூ
7.30 மாகாணச் செய்திகள்
7.35 கிறிஸ்தவ கீதங்கள்
8.00 துதிப்பாடற் பயிற்சி 5
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8.45 இசையமுதம்
9.00 நாட்டிய இசை
9.15 மெல்லிசைப் பாடல்கள்
9.45 அரங்கேற்றம்

பகல் —

10.00 கதம்பம்
10.30 நேயர் கடிதம்
10.45 குங்குமம்
11.15 சிறுவர்மலர் – வானொலி மாமா.
2.45 — 5 மணி வரை தலவிச் சேவை அலைவரிசையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஸ்ரீதலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் இருந்து மக்களுக்கு விடுக்கும் உரை தொடர்பான நேர்முகவர்ணனை அஞ்சல்.

மாலை —

6.00 செய்திகள்
6.15 செய்தி மஞ்சரி
6.30 ஞானவிளக்கு
7.00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
7.30 உலகச் செய்திகள்
7.35 வெளிநாட்டுச் செய்தி விமர்சனம்
7.50 மெல்லிசைப் பாடல்

இரவு —

8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.45 சுதந்திர தின வைபவத்தையொட்டி கண்டியில் நடைபெறும் ராஜ பெரஹரா நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனை
9.00 செய்திகள்
9.12 ராஜ பெரஹர நிகழ்ச்சி தொடர்ந்து அஞ்சல்
9.30 உரையாடல்
10.00 கிறிஸ்தவ கீதங்கள்

இரவு —

10.30 வயலின்யாசம்
10.45 கர்நாடக இசை (பழையன)

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

6.01 "லமா ஹௌருவ"
6.20 ஜெர்மன் லங்வேஜ்
6.35 டெனி த ட்ரேகன்
7.00 செய்தி மஞ்சரி – தமிழ்
7.15 "ஜீவித்தயட எளி மஹரெக்" பல்வேலைகல திறந்த வெளிச் சிறைச்சாலை பற்றிய நிகழ்ச்சி
7.45 "அபிவிருத்தியும் நீங்களும்"
8.15 செய்தி மஞ்சரி — சிங்களம்
8.30 "ஜனாதிபதி ஜன ஜய"
9.00 சேர்லைவல்
9.30 செய்தி மஞ்சரி — ஆங்கிலம்
9.45 ஜனாதிபதி மக்களுக்கு விடுக்கும் சுதந்திரதினச் செய்தி
10.15 வெகாஸ்

### ஐ. டி. என்.

5.30 ஆங்கிலத் திரைப்படம் "செய்னா போய்"
7.01 பட் அன்ட் ஜெனி
7.30 செஸ்லின் புரொஜெட்
8.00 டோன்ட் ஜெஸ்ட் சிட் தெயார்
8.30 சீக்ரட் ஆமி
9.30 செய்தி மஞ்சரி — ஆங்கிலம்
9.45 வெகாஸ்.

## ரூ. 100 கோடி அரசு கடன்

கொழும்பு, பெப். 6
1983 ஆம் நிதி ஆண்டின் சேவைச் செலவுகளை சமாளிப்பதற்காக அரசாங்கம் மொத்தம் 100 கோடி ரூபாவைக் கடனாகப் பெற இருக்கிறது.

பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளிலிருந்து இந்தக் கடன் தொகை பெறப்படும்.

இந்தக் கடனுக்கு வருடம் 16 சத வீத வட்டி வழங்கப்படும். மூன்று வருட காலத்தில் கடன் திருப்பிச் செலுத்தப்படும். (சே-ஸ்)


## இலங்கை துறைமுக அதிகார சபை

புறக்கோட்டை 1, 2 & 3 களஞ்சியங்களில் அகற்றப்படாது இருக்கும் பொருள்களின்

### ஏலவிற்பனை 1983–01–29

புறக்கோட்டை 1,2 & 3 களஞ்சியங்களில் அகற்றப்படாமல் கிடக்கும் நீண்டகாலப் பொருள்கள் 1983–02–12 அன்று காலை 9–30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொருள்களை வாங்க விரும்புவோர் 1983–02–11 அன்று அவற்றைப் பார்வையிடலாம். விவரப் பட்டியல், வர்த்தக முகாமையாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

ஏலவிற்பனை முடிவுற்றதும் கொள்முதல் செய்யும் பொருள்களுக்கான முழுத் தொகையையும் ரொக்கமாகச் செலுத்தி, விற்பனைத் தினத்தன்று மாலை 4.00 மணியளவில் பொருள்களை அப்புறப்படுத்தி விட வேண்டும். பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்ட பின் அவற்றின் நிலை பற்றிய எதுவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

விலை மனுக்களில் எதனையாவது அல்லது முழுவதையும் நிராகரிப்பதற்கும், பிரஸ்தாப பொருள்களில் எவற்றினதும் விற்பனையை நிறுத்தி வைப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இருப்பின் அப்பொருள்களின் விற்பனையை நிறுத்திவைப்பதற்கும் துறைமுக அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு. வெற்றி பெற்ற விற்பனை மனுதாரரால், விற்பனைத் தினத்தன்று அகற்றி எடுத்துச் செல்லப்படாத பொருள்கள் மீள விற்கப்படுவதுடன், அவற்றுக்காகச் செலுத்தப்பட்ட பணமும் பறிமுதல் செய்யப்படும்.

இந்த ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் நிரந்தர நுழைவு அனுமதிப் பத்திரமோ புகைப்பட ஆள் அடையாளச் சின்னமோ இல்லாதிருப்பின் துறைமுகத்தில் நடைமுறையில் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அனுசரிக்க வேண்டும்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கை துறைமுக அதிகார சபை.

திகதி: 1983-02-03

### விற்பனைக்குரிய பொருள்களின் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| மின்சாரப் பொருள்கள் | வெல்டிங் ரொட்ஸ் |
| பம்புகள் | போல்ட்ஸ், நட்ஸ் |
| தோரெட்டர்கள், சுவிட்சுகள் | கண்ணாடி சீட்ஸ் |
| மின்சார மணிகள் | பொலிதீன் துகள் மூடைகள் |
| லாம்ப் ஷேட் | இரசாயன பொருள் மூடைகள் |
| கிளாஸ் தம்ளர்கள் | பால் மா மூடைகள் |
| டொய்லட் பேப்பர் | சிகரெட்டுகள் |
| பேப்பர் சுருள்கள் | சுருட்டுகள் |
| பலட்ஸ் பொக்ஸ் போட் | சூட்கேஸ் பூட்டுகள் |
| கம்பிக் கயிறு | மீட்டர் |
| கம்பளிப் மூடைகள் | விளம்பர சாதனங்கள் |
| புத்தகங்கள் | மேற்கத்திய மருந்துகள் |
| விளையாட்டுப் பொருள்கள் | ஆயுர்வேத மருந்து மூடைகள் |
| கிரேயன் மெழுகு | பி. வி. சி. பைப் |
| சைக்கிள் பாகங்கள் | இரும்பு பொதிகள் |
| கார் பம்புகள் | கப்போரன்டம் சில்லுகள் |
| சிக்கின்ஸ் | ஹாண்ட் ரூலிங் |
| உளிகள் | தோட்டாக்கள் |
| கத்திரிக்கள் | மோட்டார் பாகங்கள் |
| கை வாள்கள் | இயந்திர பாகங்கள் |
| மோட்டார் வாகன டியூப் | சுகாதார சாதனங்கள் |
| மோட்டார்கள் | |
| மெசின் கலிச்சகள் | |

மற்றும் வேறு வகைப் பொருள்கள்




பலரசத் திரட்டு

# 50 ஆண்டுகளின் பின் தொடுக்கப்பட்ட வழக்கு



பிச்சைக்காரன்: நீங்க நல்லா இருக்கிறதுக்கு நாங்கதானே காரணம்...

வீட்டுக்காரர்: என்னப்பா சொல்றே...

பிச்சைக்காரன்: எங்களுக்குத் தருமம் செய்யிறதாலதானே நீங்க நல்லா இருக்கிங்கன்னு சொல்றன்...

"என் கணவன் கள்வன் அல்லன்" என வாதாடி, மதுரை மாநகரையே எரித்தாள் கற்புக்கரசி கண்ணகி.

அதே போன்று, "என் கணவர் கொலைஞர் அல்லர். அவருக்கு மரண தண்டனை விதித்து, மின்சாரக் கதிரையில் இருத்தி அவரைச் சாகடித்தது பெரும் அநியாயமாகும். நீதி பொய்த்து விட்டது. என் கணவர் நிரபராதி என்பதை நான் சாகுமுன் நிரூபிப்பேன்" என போர்க்கொடி ஏந்தியுள்ளார் அமெரிக்கப் பெண்மணி ஒருவர்.

84 வயதான அனு ஹாப்ட்மான் எனும் இப் பெண்மணி, அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். தனது கணவரைத் தண்டிக்கக் காரணமாய் இருந்தவர்களிடம் 10 கோடி டாலர் நஷ்டஈடும் கோரியுள்ளார்.

இந்தப் பெண்மணியின் கணவரான ரிச்சார்ட் புருனோ ஹாப்ட்மனுக்கு (36 வயது) எதிராக 50 வருடங்களுக்கு முன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கின் இறுதியில் புருனோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1936ஆம் ஆண்டு, மின்சாரக் கதிரையில் இருத்தி, அவரின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

50 வருடங்களின் பின்னர் அந்த வழக்கின் தஸ்தாவேஜுகள், மீண்டும் இம்மாதம் பரிசீலிக்கப்படும். இவ்வழக்கு அமெரிக்கர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சார்ள்ஸ் லின்போர்க் என்னும் பிரபல விமானியின் மகனைக் கடத்திச் சென்று கொலை செய்ததாகவும், சார்ள்ஸ் லின்போர்க்கைப் பயமுறுத்தி பணயப் பணம் பெற்றதாகவும் புருனோ ஹாப்ட்மனுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

ஆனல் புருனோ ஹாப்ட்மன் தனக்கு இது பற்றி எதுவுமே தெரியாது என்றும், தான் நிரபராதி என்றும் வாதாடினர். ஆனல் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தனது கணவருக்கு எதிராக மேற்படி வழக்கு சோடிக்கப்பட்டது என்றும், அதற்கான ஆதாரங்களைத் தான் திரட்டி வைத்திருப்பதாகவும் திருமதி ஹாப்ட்மன் தெரிவித்துள்ளார்.

நியூ ஜேர்சி அரசாங்கம், ஹேர்ஸ் பத்திரிகை நிறுவனம், ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள், துப்பறியும் இலாகா அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக திருமதி ஹாப்ட்மன் இப்பொழுது வழக்குத் தாக்கல் செய்திருக்கிறர்.

முதன் முதலில் இந்த கொலை வழக்கு விசாரிக்கப்பட்ட போது, எதிரியின் சார்பில் ஆஜரான ஒரு இளம் வழக்கறிஞர், பல வருட அனுபவங்கள் பெற்று, மீண்டும் அவ்வழக்கில் திருமதி ஹாப்ட்மனுக்காக ஆஜராகிறர்.

"என் கணவர் நிரபராதி என்பதை நிரூபித்தால், சாவதற்கு முன் எனக்கு நிம்மதி கிடைக்கும். நஷ்டஈடு கிடைத்தால், அதை தர்மத்துக்காக ஒதுக்குவேன்" என திருமதி ஹாப்ட்மன் நம்பிக்கை தெரிவிக்கிறர். (க)



# டிரெய்லருடன் கூடிய பஸ் சென்னை நகரில் தயாரிப்பு

டிரெய்லருடன் கூடிய நீளமான பஸ் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கரூர் நிறுவனத்தின் தயாரிப்பு இது. இந்தியாவில் கட்டப்பட்ட நீளமான பஸ் இதுதான். நிறைய பயணிகள் பிரயாணம் செய்யலாம்.

நம் நாட்டில் தூர இடங்களுக்குச் செல்லும் ரயில்களில் பெட்டிக்குப் பெட்டி பிரயாணிகள் மாறிச் செல்வதற்கு இரு பெட்டிகளின் நடுவில் இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டிருப்பீர்கள்.

அப்படியான இணைப்புடன் கூடியதுதான் இந்த பஸ். பஸ் ஓடிக் கொண்டிருக்கும் போதே டிரெய்லரிலிருந்து பஸ்ஸுக்கும், பஸ்ஸிலிருந்து டிரெய்லருக்கும் பிரயாணிகள் போய்வரலாம்.

இணைப்பில் பாதுகாப்பாக நின்று பிரயாணம் செய்யவும் வசதியுண்டு. பஸ்ஸின் உறுப்புகள் அலுமினியத்தால் ஆனது. அதனல் வண்டியின் எடை குறைவு.

பஸ்ஸுக்குக் குறைந்த அளவு டீசலே செலவாகிறது. பஸ்ஸில் காற்றழுத்த தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கதவுகளை சாரதி மாத்திரமே இயக்க முடியும்.

45 நிமிடங்களில் பஸ்ஸின் சடிடம் அடிக்கப்பட்டது. சட்டத்துக்கு மட்டும் இரண்டரை லட்சம் ரூபா செலவு.

புதுடில்லியில் நடக்க இருக்கும் ஒரு கண்காட்சியில் இந்த பஸ் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

இந்த பஸ் சென்னையில் சேவைக்கு விடப்படலாம் என்று தெரிகிறது. (ர- 10)



"எங்க ஒபீஸில யாராவது லஞ்சம் வாங்கின "லஞ்சம் வாங்க மாட்டேன்னு" ஆயிரம் தடவை எழுதச் சொல்வார் எங்கட மனேஜர்."

"அடப் பாவமே! கையெல்லாம் வலிக்குமே...!"

"அந்தக் கவலையே வேண்டாம். பத்து ரூபா தந்திட்டா அதையும் எழுதித்தர எங்க ஒபீஸில நிறைய பேர் இருக்கிறங்க."

## செஞ்சீனவில் குதிரைப்பந்தயம்

கம்யூனிஸ்ட் சீனவின் ஆதிக்கத்திலுள்ள ஹைனன் தீவின் குதிரைப் பந்தயம் அறிமுகப் படுத்தப்படும் என அறிவிக்கப் படுகிறது.

ஹைனன் தீவு வெகு விரைவில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்குத் திறந்து விடப்படும்.

உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காக இங்கு குதிரைப் பந்தயம் அறிமுகப்படுத்தப்படும். (க)

# கடவுளின் ஆசி பெற்ற விமானம்

விமானம் ஒன்றின் முன்பாகத்தில் தேங்காய் ஒன்று அடித்து உடைக்கப்பட்டது.

பின்னர் அதன் முகப்பில் குங்குமக் கலவை பூசப்பட்டு, பொன்வண்ண மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அந்த விமானத்துக்கு கடவுளின் ஆசியைப் பெற்றுக்கொடுக்க இந்தச் சடங்கு நடத்தப்பட்டது.

பிரிட்டனில் இந்த வைபவம் இடம்பெற்றது.

யுத்தக் கப்பல் தளத்திலிருந்து செங்குத்தாகக் கிளம்பிச் செல்லக் கூடிய விமானம் ஒன்றை, இந்தியக் கடற்படை விலைக்கு வாங்கியது.

பிரிட்டன் அதனை இந்திய கடற்படையிடம் கையளித்த போது, மேற்கூறப்பட்ட வைபவம் இடம்பெற்றது.

இந்திய கடற்படை ஆலோசகரின் மனைவியான சீதா குப்தா, தேங்காயை உடைத்து, குங்குமக் கலவையைப் பூசினர்.

இந்தியத் தூதுவரின் மனைவியான பேகம் லாரா மூசும்மது, பொன் வண்ண மலர் மாலையை விமானத்துக்கு அணிவித்தார்.

ஆசிய நாட்டு மக்களிடையே நிலவும் மத நம்பிக்கைக்கு இந்த வைபவம் ஒரு எடுத்துக்காட்டு என கூறப்பட்டது. (க)



ஓலையில் வேயப்பட்ட வட்டியை மடியில் வைத்து இங்கே படத்தில் காணப்படுபவர் ஏதேனும் ஒரு காட்டு வாசியென்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. பசுபிக் பிராந்தியத்தில் உள்ள யப் என்னும் தீவின் கவர்னர் ஜோன் ஏ. மெஸ்பெல் என்பவர்தான் இப்படி பாரம்பரிய உடையணிந்து காணப்படுகிறர். தமது இரண்டாம் பதவிக் காலத்தின் போது சத்தியப் பிரமாணம் எடுக்கையிலேயே அவர் இப்படிக் காட்சியளித்தார். (ர- *ச)



படுகொலை செய்யப்பட்ட எகிப்திய முன்னள் ஜனதிபதி அன்வர் சாதாத்தின் மனைவி ஜிஹான் சாதாத்தையும், அவர்களுடைய பேரக் குழந்தை யஸ்மியாவையும் தான் இங்கே படத்தில் காண்கிறீர்கள். வெஸ்ரோவில் அலோனைமியோட்டப் பிரஸ் பத்திரிகை விநாயகத்துக்கு ஜெஹா அன்வர் சாதாத் பேட்டியளித்தபோது இந்தப் படம் எடுக்கப்பட்டது. ஜெஹா சாதாத் தமது பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் அரசியலிலிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் நீக்கியே வைத்திருந்தார். இனிமேல் நிலைமை எப்படியோ? (ர)

★ இங்கிலாந்து ★ தாய்லாந்து ★ தெற்கு ஆபிரிக்கா ★ சிங்கப்பூர்

மேற்குறித்த நாடுகளில் உள்ளோர் எங்கள் மருந்து வகைகளைப் பாவித்து நல்ல பலனைப் பெற்றுள்ளனர்.

**கல்யாணமான ஆண், பெண் ஆகிய**

**இருபாலாரும் எங்கள் மருந்துகளைப் பாவித்து இல்லற வாழ்க்கையில் சம்பூர்ண வெற்றியையும், மகிழ்ச்சியையும் அடைந்துள்ளனர்.**





நீங்கள் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களானலும் சரி, பணக்காரர்களானலும் சரி, துர் நடத்தையாலும், வேறு நோய்களாலும் உங்களுடைய ★ பாலுறுப்பு வீரியமின்மை ★ பலவீனம் ★ விரைவில் விந்து வெளியேறல் ★ பிள்ளைப்பேறு இன்மை ★ ஆகியவற்றால் உங்கள் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுகிறதா? அவற்றிற்கு இடம் வைக்காதீர்கள்!

இந்தியாவில் மன்னர்கள் பாவித்து ஆயிரக்கணக்கான பெண்களின் நன்மை பெற்றது பிரஸ்தாப மருந்துகளைப் பாவித்தே. உங்களுக்கு பாலுறுப்பு வீரியமில்லாமையால் அவஸ்தைப்படுகிறீர்களா? அப்படியானல் தாமதியாமல் பெறுமதியான ஔஷதங்களைப் பாவித்து சந்தோஷத்தையும், நீண்ட குடும்ப சுகத்தையும் அனுபவியுங்கள்.

**இருபத்தைந்து வருடகாலத்திற்கும் அதிகமான பழைய புதிய பெறுமதியான ஔஷதங்களை முறைப்படி தயாரித்துள்ளோம்.**

இம்மருந்துகளைப் பாவித்த வெளிநாட்டவரும், உள்நாட்டவரும், பாவித்து பலன் பெற்று ஆயிரக்கணக்கானேர் அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்.

திருமணம் செய்ய எண்ணியுள்ளீர்களா? திருமணம் செய்யப் பயப்படுகிறீர்களா திருமணமாகியபின் மனைவியைத் திருப்திபடுத்த முடியாமல் ஆண் உறுப்பு வீரியமின்மை, வெகு சீக்கிரம் விந்து வெளியேறுதல், உணர்ச்சியின்மை முதலிய நோய்களால் கஷ்டப்படுகிறீர்களா? தாமதியாமல் உடனடியாக மருந்தை வாங்கிப் பாவித்து தாம்பத்திய வாழ்க்கையை நன்கு அமைத்து நீண்ட நேரம் பாலுணர்ச்சியில் ஈடுபட்டு சந்தோஷமடையுங்கள். இன்றே எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**செக்ஸ் விபோன் சிரப்** 14 நாட்களுக்கு ஒரு போத்தல் ரூபா 59/50.

**செக்ஸ் விபோன் ஒயில்மன்ட்** 14 நாட்களுக்கு பாவிக்க வேண்டிய குப்பி விலை ரூபா 23/50.

பாலுறுப்பு வீரியமின்மை, உறுப்புகள் வீரியமின்மை, இவற்றிற்கு வெளிப்பூச்சு மருந்து. சுகத்திற்கு கெடுதி இல்லாதது. இந்த இரண்டு மருந்துகளையும் ஒரே சமயத்தில் எடுத்துப் பாவித்தால் மிகவும் நல்ல பலன் அடைவீர்கள். வி. பி. பியில் பெற்றுக்கொள்ள ரூபா 4/-க்கு முத்திரை அனுப்புங்கள் மணி ஓடர், போஸ்டல் ஓடர்களை பதிவுத் தபாலில் அனுப்புங்கள். செக்குகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்கூறித்த இரண்டு மருந்துகளுடன், கடுமையான பெரிய வியாதிகளுக்கு எங்களிடம் அதிவிசேஷ மருந்துகள் உண்டு. நேரில் வந்து பரிசோதித்துப் பெற்றுக்கொள்ளலாம். சிரப் ஒயில்மன்ட் இரண்டிற்கும் வி. பி. பி. சார்ஜ் ரூபா 5/- முத்திரைகள்.

வேறு மருந்துகளை பாவித்து பலன் இல்லாமல் இட்டமிட்ட சுகவாழ்க்கையையும் உதறித் தள்ளி விட்டு தற்கொலை செய்ய எண்ணி இருந்தோர் பலர் என்னை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பிட்ட தினத்திற்குள் நோய்களை சுகப்படுத்தி பரிசில்களையும் வழங்கி உள்ளனர்

அனபடியால் உடனடியாக என்னை சந்தியுங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்.

விவாகம் செய்வதற்கு வயது வந்த இளைஞர்களும், யுவதிகளும், தமக்குள்ள இரகசிய நோய்களை பெற்றோர்களுக்கு கூற வெட்கப்பட்டு, தமது திருமண வாழ்க்கையை தள்ளிப் போட வேண்டியதில்லை. தங்களுடைய நோய்களைப் பற்றி கவலைப்படாது, என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். அதற்கேற்ற மருந்துகள் என்னிடம் தயாராக உள்ளது. நேரில் விஜயம் செய்து பாருங்கள். உண்மை விளங்கும். வி. பி. பியில் மருந்துகளுக்கு எழுதும் போது ரூபா 5/-க்கு முத்திரை சேர்த்து அனுப்ப வேண்டும். கடிதங்களுக்குப் பதில் வேண்டுமானல் -/50 சத முத்திரையுடன் அனுப்ப வேண்டும்.

**பெண்களுக்கு**

காமதமான மாதவிடாய்க்கு நீங்கள் எடுத்த சிகிச்சை பலனளிக்காவிட்டால் உடனடியாக ஆபத்தற்ற, விஷமற்ற "சாந்தி வில்லைகள்" வாங்குங்கள். விலை 27 ரூபா 50 சதம். வி. பி. பி மூலம் ரூபா 4/00க்கு முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும். பின்னும் நேரில் சந்திக்கால் பரிசோதித்து விசேஷ மருந்து கொடுக்கப்படும். கெர்ப்பப் பை கோளாறுகளுக்குத் திறமான மருந்துகள் உண்டு. நேரில் வரவும்.

நோயாளர்கள் பரிசோதிக்கும் நேரம் காலை 8-30 மணி முதல் 1-30 மணிவரை.. பிற்பகல் 4 மணி முதல் 8 மணிவரை. போயா தினத்தில் மூடப்பட்டிருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் பி.ப. 1-30 மணிவரை சிகிச்சை அளிக்கப்படும். சனிக்கிழமைகளில் சிகிச்சை அளிக்கப்பட மாட்டாது.

**பெண்களைப் பற்றி**

மயில் முடியை ஒத்த முடியை உடையவர்கள் என்றும், பிறைச் சந்திரனை ஒத்த நெற்றி என்றும் கவிஞர்கள் கவிகளில் பாடி உள்ளனர். அப்படியான பெருமையைப் பெற்ற பெண் வர்க்கத்தினருக்கு விந்து வெளியேறல், முடி உதிர்தல், முக பருக்கள், மயக்கம், உடம்பு மெலிதல், நிற்ற இடத்தில் விழுதல், அமைதியின்மை அவையவற்றை பாதுகாக்க ஜீவக சிரப் பாவியுங்கள். போத்தல் ஒன்றின் விலை 80/- ரூபா.

வி. பி. பியில் பெற்றுக்கொள்ள ரூபா 5/- முத்திரை அனுப்புங்கள் பெண்களுக்கு உண்டாகிய சகல நோய்களுக்கும் வெவ்வேறு சிகிச்சைகளுடன் மருந்துகளும் உண்டு. உடம்பு முழுவதற்கும் பூரண சுகம் தருவது. நேரில் சந்திக்கவும்.

**பிள்ளைகள் இல்லாத கணவன் மனைவிக்கு**

இரண்டு பேரும் நேரில் வந்து பரிசோதனை செய்து, விசேஷ மருந்து உட்கொண்டு, விரும்பியபடி நல்ல பலனைப்பெறலாம் வேறு டாக்டர்களிடமிருந்து பரிசோதித்த துண்டுகள் இருந்தால் அவற்றையும் கொண்டு வந்தால் நல்லது.

**டாக்டர் வில்ப்ரட் அபயவர்த்தன தொலைபேசி: 32446**

**(DR. WILFRED ABEYWARDENA) Neuro and Skin Specialist L.A.M.P. (India) L.M.P. (Sri Lanka).**

இல. 77, பஞ்சிகாவத்தை றேட் (டவர் ஹோல் அருகில்) மருதானை, கொழும்பு—10.

**77, Panchikawatte Road (near Tower Hall), Maradana.**



பிலடெல்பியாவில் உள்ள பழைய தெரு கிறிஸ்தவ தேவாலயத்தில் குருவானவர் வண. வில்லியம் பிண்டர் ஆஸ்பத்திரிகளுக்கு அடிக்கடி சென்று அங்குள்ள நோயாளிகளைக் கண்டு கலந்துரையாடி அவர்களை மகிழ்ச்சியிலாழ்த்துவது வழக்கம். புற்றுநோய் வார்டுகள், மனோ வியாதியாளர் வார்டுகள், சிறைச்சாலைகள், வயோதிபர் விடுதி சிறுவர் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கெல்லாம் அவர் போய் வருவார். இவ்வாறு போகும் போது நோயாளிகளை குதூகலப்படுத்துவதற்காக அவர் கோமாளி வேடம் புனைவது வழக்கம். பிலடெல்பியாவிலுள்ள பென்சில்வேனியா ஆஸ்பத்திரியில் புற்று நோயாளி ஒருவரை அவருடைய நோயை மறந்து சிரிக்கச் செய்வதில் வெற்றி கண்டார், வண. வில்லியம் பிண்டர். இந்தக் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள். (ர)

பலரசத் திரட்டு

# பயங்கர ஆட்சியின் 50 ஆவது நினைவு தினம்

ஜெர்மனியில் பாசிஸ ஆட்சியை ஏற்படுத்தி, உலக நாடுகளை ஒரு கலக்குக் கலக்கிய, சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் ஆட்சிக் கால பயங்கர சம்பவங்கள் மீண்டும் நினைவு கூரப்பட்டன.

1933 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஹிட்லரின் ஆட்சி ஏற்பட்டது.

சென்ற 30ஆம் திகதி 50 ஆவது ஆண்டு நினைவு தினம்.

அன்றைய தினம் ஹிட்லரின் பயங்கர ஆட்சியை, முக்கியமாக மூன்று நாடுகள் நினைவு கூர்ந்தன.

இஸ்ரவேல், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி ஆகியவையே அந்த நாடுகளாகும்.

இஸ்ரவேலில் நடைபெற்ற நினைவு தினத்தன்று, அநேகர் தேம்பித் தேம்பி அழுதனர்.

ஹிட்லரால் கொடூரமாகக் கொல்லப்பட்ட தமது மூதாதையர்களை நினைந்தே அவர்கள் கண்ணீர் விட்டனர்.

60 லட்சத்துக்கும் மேற்பட்ட யூதர்கள், மிகப் பயங்கரமான முறையில், ஹிட்லரால் அழிக்கப்பட்டனர் என்ற விவரம், இன்னும் உலகோரை திகைக்க வைக்கிறது.

பாசிஸ ஆட்சிக்குப் பலியான யூதர்களின் ஞாபகமாக, இஸ்ரவேலில் ஒரு ஞாபக ஸ்தூபி நிறுவப்பட்டிருக்கிறது.

சென்ற வாரம் அங்கு நடைபெற்ற ஒரு பிரார்த்தனையின் போதே, இஸ்ரவேலியர்கள் விம்மி, விம்மி அழுது கண்ணீர் விட்டனர்.

ஹிட்லரின் பயங்கர ஆட்சியை ஞாபகப்படுத்தும் வைபவங்கள் மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, ஆகிய நாடுகளிலும் நடைபெற்றன.

அங்கு நடைபெற்ற வைபவங்களிலும் பலர் கண்ணீர் விட்டு அழுதனர். படுகொலை செய்யப்பட்ட தமது மூதாதையரை நினைவு கூர்ந்தனர்.

இது போன்ற ஒரு பயங்கரம் இனிமேலும் எந்த ஒரு நாட்டிலும் இடம் பெற அனுமதிக்கக் கூடாது. ஜனநாயக வழியை மக்கள் பின்பற்றி, ஜனநாயக ரீதியான அரசாங்கங்களையே ஏற்படுத்த வேண்டும் என இன்றைய ஆரிய தலைவர்கள், மேற்படி வைபவங்களில் உரையாற்றுகையில், வேண்டுகோள் விடுத்தனர். (ர)



மனைவி: என்னங்க கன்னத்தில லிப்ஸ்டிக் அடையாளம் மாதிரி...?

கணவன்: ஆபீசில என் சீற்றுக்குப் பக்கத்துக்காறி வஞ்சகமில்லாம எல்லாரோடையும் நெருங்கிப் பழகுவா, எப்ப பட்டுதோ நான் கவனிக்க இல்லையே...



மனைவி: என்னுல அப்பிடி என்ன மனக் கசப்பு உங்களுக்கு வந்திடிச்சு...?

கணவன்: உன்ர நச்சரிப்பும் தொண தொணப்பாலேயும் தானே இந்த ஜென்மத்தில இனிக் கல்யாணமே கட்டுறதில்லே எண்ட முடிவுக்கு வந்திருக்கேன்.

## நிலக்கரி பாவிப்புக்கு ஊக்கம்

எண்ணெய்க்குப் பதிலாக, தொழிற்சாலைகளில் நிலக் கரியைப் பாவிக்கும் திட்டத்துக்கு பிரெஞ்சு அரசாங்கம் ஊக்கம் அளித்து வருகிறது.

நிலக்கரியைப் பாவிக்கத் தொடங்கிய ஒரு தொழிற்சாலை, அதன் வழமையான செலவில் 1 லட்சத்து 50 ஆயிரம் டாலரை மீதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## 1 மேசையின் விலை 6,87,000 டாலர்

தேக்கினாலான பழங்கால மேசை ஒன்று நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஒரு ஏல விற்பனையின் போது 687.000 டாலர்களுக்கு விற்கப்பட்டது.

அமெரிக்க தளபாடம் ஒன்றுக்கு, இவ்வளவு பெருந்தொகை கொடுக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

18 ஆம் நூற்றாண்டில், ஷீப் பெண்டேல் என்னும் தச்சு விற்பன்னர் வாழ்ந்தார். அவரால் உருவாக்கப்பட்ட, சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தளபாடங்களுக்கு, அக்காலத்தில் பெரும் கிராக்கி நிலவியது.

அவரது காலத்தில் உருவாக்கப்பட்டது போன்ற மேற்படி மேசைதான், அவ்வளவு பெருந்தொகைக்கு விற்பனையானது.

இதுபோன்ற 20 தளவாடங்கள் இப்பொழுதும் அமெரிக்காவின் பல இடங்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

1765 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட இத் தளவாடங்கள், ரோட் தீவிலுள்ள கிப்ஸ் குடும்பத்தாரிடம் இருக்கின்றதாம்.

1964 ஆம் ஆண்டில் 640 டாலருக்கு வாங்கப்பட்ட மற்றுமொரு ஷிப்பெண்டேல் பாணியிலான மேசை, 242,000 டாலருக்கு, இதே ஏல விற்பனையின் போது விற்கப்பட்டது. (க)

## ஆமையின் பெருமை

உலகின் மிகப் பழமைவாய்ந்த ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஜந்து எதுவென்று தெரியுமா?

"ஆமை" என்று புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆமை இனம், 20 கோடி வருடங்களுக்கு முன், உலகில் தோன்றியிருக்கலாம் என்பதற்கான ஆதாரங்களை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

15 கோடி வருடங்களுக்கு முன்பு இருந்ததாகக் கருதப்படும் ஒரு இராட்சத ஆமையின் எலும்புக் கூடு, அண்மையில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆதிகாலத்தில், ஆமை இனம், சீனாவில் பெருமளவில் இருந்திருக்கலாம் என புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். (க)



நண்பன்: நீ ஏன்டா இப்ப சினிமா பார்க்கப் போறதேயில்லை...?

மற்றவன்: என் மாஜிக் காதலிகளெல்லாம் தங்கட கணவன்மாரோட சினிமாவுக்கு வாறதைப் பார்க்க என் மனம் வேதனைப்படுமேன்றுதான்...

SWISS ROSES·ORCHIDS
THRIFT HOUSE WIVES PLAN YOUR BUDGET
Swiss Roses O'chids Sheets

| | | |
|---|---|---|
| ஒற்றைப் படுக்கை | ரு. | 97/50 |
| இரட்டைப் படுக்கை | ரு. | 129/50 |
| தலையணை உறைகள் (பொருத்தமானவை) | ரு. | 27/50 |
| டவல் செட்டு (பொருத்தமானவை) | ரு. | 129/50 |
| PILLOWS | | 39/50 |

NO PARKING PROBLEM
S-H-O-B-H-A-S
463. GALLE ROAD-COLOMBO-3
DIAL-81888
ALSO MOSQUITO NETS
TOWELS-PILLOW CASES
SHEETS · BED SPREADS

## ஒரு கிலோ சீனியின் விலை 15 சதம்

ஒரு கிலோ சீனியின் விலை 15 சதம்.

ஆகா, என்ன இனிப்பான செய்தி.

எங்கே, எங்கே. இடத்தைச் சொல்லுங்கள், ஓடிப்போய் வாங்குவோம் என பலர் அவசரப்படுவது தெரிகிறது.

ஆனால், ஒரு கிலோ சீனியை 15 சதம் கொடுத்து வாங்கும் பாக்கியம் எமக்குக் கிடைக்காது. காரணம், வெகு தூரத்தில் உள்ள கியூபா தேசத்தில்தான் இவ்வாறு சீனி மலிவாகக் கிடைக்கிறது.

சீனி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு கியூபா. இந்த நாட்டின் 80 சதவீதமான வருமானமே சீனி ஏற்றுமதியில் தான் தங்கியிருக்கிறது.

இப்பொழுது ஏற்றுமதி குறைந்து விட்டதால், நாட்டின் வருமானமும் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது.

மூன்று வருடங்களுக்கு முன் ஒரு கிலோ சீனியை 55 சதமாக கியூபா விற்றது. ஆனால் ஏற்றுமதி குறைந்ததால், மேலதிக சீனி அங்கு தேங்கிக் கிடக்கிறது.

அதனால்தான் ஒரு கிலோ சீனி இப்பொழுது 15 சதத்துக்கு விற்கப்படுகிறது என, அந்நாட்டின் மத்திய திட்டமிடல் சபையின் தலைவர் ஹூம் போர்ட்டோ பெரெஸ் தெரிவிக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளில் சீனி உற்பத்தி அதிகரித்திருப்பதால்தான், கியூபாவின் சீனி ஏற்றுமதி பாதிக்கப்பட்டு, சீனி விலையும் குறைந்து விட்டது என அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து என்றாலும், எமது நாட்டினர் அங்கிருந்து சீனியைப் பெற்று, கையிருப்பில் வைத்தால், சீனித் தட்டுப்பாடு ஏற்படாது அல்லவா என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் யாரும் செவிமடுப்பார்களா? (க)

## மிருகங்களுக்காகவே உயிர் வாழ்கிறேன்
### — பிரிஜட் பாடோ



"மிருகங்கள்தான் என் உயிர். மிருகங்களைப் பாதுகாப்பது தான் என் ஒரே குறிக்கோள். மிருகங்களுக்காகவே நான் உயிர் வாழ்கிறேன்."

லட்சக் கணக்கான ஆங்கிலத் திரையுலக ரசிகர்களின் கனவுக் கன்னியாக ஒரு காலத்தில் விளங்கிய கவர்ச்சிக் கன்னி பிரிஜட் பாடோ இப்படிச் சொல்கிறார்.

நடக்கும் போது ஒயிலாகத் துவளும் இடையும், ஆழமான நீல நிறக் கண்களின் பிரகாசமும், மலர்ந்த முகமும் ஒரு காலத்தில் காண்போரை பைத்தியமாக்கின. அதனால்தானோ என்னவோ அவர் காமத்தின் சின்னம் என்று வர்ணிக்கப்பட்டார்.

"எல்லாப் பெண்களும் ஒரு காலத்தில் என்னை வெறுத்தார்கள். நான் அவர்களுடைய கணவன்மார்களைத் திருடிக் கொண்டேனாம்." இப்படிச் சொல்கிறார் பாடோ.

"என்னிடம் வராத எந்த ஒரு ஆடவனையும் நான் திருடிக் கொள்ளவில்லை" என்பது அவர் வாதம்.

பாடோ உலகில் புகழ்பெற்ற பெரிய மனிதர்களை எல்லாம் சந்தித்திருக்கிறார். 30 ஆவது வயதில் எலிஸபெத் மகாராணியைச் சந்தித்தார். முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி குருஷேவ் அவருக்கு முத்தம் கூட கொடுத்திருக்கிறார் என்றால் பாருங்களேன்.

மும்முறை திருமணம் புரிந்தவர் பாடோ. ரொஜர் வாடிம் என்பவரை முதலில் மணந்தார். ஜக்கியுஸ் சாரட்டர் என்ற பிரெஞ்சு நடிகரை இரண்டாவதாக மணந்தார். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான்.

மகன் நிக்கலஸ் இப்போது தொலைக்காட்சி இசையமைப்பாளராக இருக்கிறார்.

ஜெர்மனைச் சேர்ந்த கோடீஸ்வர இளைஞர் ஒருவரை பாடோ மூன்றாவதாக மணம் புரிந்தார். அவர் பாடோவுக்கு ரோல்ஸ் — ரோய்ஸ் கார் ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

குன்தர் சாச் என்ற இந்த ஜெர்மன் கோடீஸ்வரர் தினமும் ஹெலிகொப்டரில் வந்து இவருக்கு ஒரு சிவப்பு ரோஜா கொடுத்துச் செல்வது வழக்கமாம்.

"இன்று நான் அனைவரிடமிருந்தும் ஒதுங்கி விட்டேன். இதை நான் முன்னரே செய்ய நினைத்திருந்தேன்" என்று பாடோ இப்போது சொல்கிறார்.

பாடோவுக்குக் கிடைத்த அன்பளிப்புகள் ஏராளம். பத்து வருடங்களாக தான் எந்த ஆடையையும் விலை கொடுத்து வாங்கியது கிடையாதென்று பெருமைப்படுகிறார் பாடோ.

பாடோவுக்கு இப்போது என்ன வயதென்று நினைக்கிறீர்கள்? ஐம்பது ஆகிறதாம், அவர் சொல்கிறார். இந்த அவரக் கிழட்டுப் பருவத்தில் கூட அவர் பாதையில் செல்லும் போது பலர் அப்படியே நின்று விடுகின்றனர்.

அவரின் கவர்ச்சி இன்னும் குன்றாமலேயே இருக்கிறது. சில நேரங்களில் பாதையில் வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்படுவதும் உண்டு.

வெள்ளிக்கிழமை மாத்திரம் தான் பாடோ வெளியே வருகிறார். அதுவும் வழக்கு ஒன்றுக்காகவே வருகிறார். ஒரு பெண்ணை இவர் ஏசினாராம். அதனால் இவர்மீது அவர் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

பாடோ இவ்வளவு புகழ் பெறுவதற்கு முழுக் காரணமாக இருந்தவர் ஒரு படப்பிடிப்பாளரே.

பாடோ "டீனேஜ்" குமரியாக இருந்த போது ஒருநாள் பெற்றோருடன் பாரிஸ் நகரத்தில் சென்று கொண்டிருந்தார். அபோது மேற்படி படப்பிடிப்பாளர் பாடோவைப் படம் பிடித்து "எல்லே" என்ற சஞ்சிகையின் முதல் பக்கத்தில் பிரசுரிக்கச் செய்தார். அதுவே இவருக்கு இவ்வளவு அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொடுத்தது.

இன்று பாடோவின் பாதுகாவலராக இருப்பவர் அலென் பார்க்ரேன் டுபர்க் என்பவராவார். மிருகங்களை வைத்து தொலைக்காட்சிப் படம் தயாரிப்பவர் அவர். அவருடைய மிருகங்களைப் பராமரிப்பதுதான் பாடோவின் வேலை.

நான் மீண்டும் திரையுலகில் புகுவதற்காக தந்திரம் செய்வதாகச் சிலர் சொல்கிறார்கள். ஆனால் பத்து வருடங்களுக்கு முன்பே திரையுலகைத் தலை முழுகி விட்டேன். திரையுலகம் என்னை ஒதுக்குமுன் நானே ஒதுங்கிக் கொண்டேன். நான் நடிப்பதை ஒருபோதும் விரும்பியது கிடையாது. "செக்ஸ்" காட்சிகள் எம்மைச் சலிப்படையச் செய்து விட்டன.

எனக்கு உண்மையான திருப்தியைக் கொடுக்கும் வாழ்க்கை தான் நான் இப்போது மிருகங்களுடன் நடத்தும் வாழ்க்கை. மிருகங்களுக்காகவே நான் வாழ்கிறேன் என்கிறார் பாடோ. (ரு- 16)

ஹவுஸ் மேட்ஸ்
(முஸ்லிம்களுக்கு முதலிடம்)

சவுதி அரேபியா:–
வயது 30 — 38 வரை ஆங்கில அறிவு அவசியம். ஆனால் முஸ்லிம்களுக்கு விலக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவோர் இரு வாரங்களில் பயணம் மேற்கொள்ளலாம்.

குவைட், அபுதாபி, டுபாய், பாரேன்:
வயது 18 — 38 வரை ஆங்கில அறிவு அவசியம். ஆனால் முஸ்லிம்களுக்கு விலக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு மாதத்தில் பயணம் மேற்கொள்ளலாம்.

எமது சேவை இலவசம். விரும்பியோர் தங்கள் பாஸ்போர்ட் 6 புகைப்படங்களுடன் சமுகம் தரவும்

கல்ப் மேன்பவர் சிலோன் ஏஜன்சி,
முதலாவது மாடி, அப்பாஸ் கட்டடம்,
197, கொழும்பு வீதி,
கண்டி.
லைசென்ஸ் இல: 20 FEA/6/FEA/213/3100.

உடல் வலிக்கு பரிபூரண முதல்-உதவி







மூட்டு வலியா?
உடலுக்கு இதம் சூடான குளியல்
இந்தியாவின் மிகவும் வேகமாக வலி நீக்கும் நிவாரணி
ஜாந்து பாம்
Approved by SPECIAL ORGANISING COMMITTEE IX ASIAN GAMES DELHI 1982
ஜண்டு பார்மசூடிகல் வேர்க்ஸ் லிட்.
ஸ்டாக்கிஸ்டுகள்
மெ/ஸ். கபாடியா லிமிடெட்,
104, செட்டி தெரு,
கொழும்பு-11.
3 BROTHERS/ZB/4082

அரசியல்

# மாவட்ட அபி. சபை

# மூக்(குடைபட்ட கதை

## கூட்டணியின் நிலை கேள்விக்குறி

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை மூக்குடைபட்டு இருக்கிறது.

சிலாவத்துறை முத்துக் குளிப்பு விஷயத்தில் இது நடந்தது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதி சிலாவத்துறை.

இங்கே கூடத் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முடியாமல் மௌனி விட்டது மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை.

சிலாவத்துறையில் கடந்த மூன்றாம் திகதி முத்துக் குளிப்பை ஆரம்பிப்பது என்று கடற்றொழில் அமைச்சு முடிவு செய்தது.

இதை நடக்க விடக்கூடாது தடுத்து நிறுத்த வேண்டும் என்று இரண்டு பேர் மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை.

அபிவிருத்திச் சபையைக் கூட்டி ஆலோசிக்காமலும், அபிவிருத்திச் சபையின் அனுமதியைப் பெறாமலும் அரசாங்கம் சிலாவத்துறையில் முத்துக் குளிப்பதா என்று சபையில் கூட்டணி உறுப்பினர்கள் கொதித்து எழுந்தார்கள்.

மாவட்ட அபிவிருத்திச் சபையின் கூட்டம் ஜனவரி 29 ஆம் திகதி சனிக்கிழமை நடந்தது.

சுத்தக் குளிப்பை எதிர்க்கும் கண்டனப் பிரேரணை கொண்டு வந்தவர் மன்னாரின் கூட்டணி எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன்.

கூட்டத்தில் ஐ. தே. க. உறுப்பினர்கள் பிரசன்னமாக இருக்கவில்லை. திரு. சூசைதாசவின் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அனுமதி பெறாமல் சிலாவத்துறையில் முத்துக் குளிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கு அவசரத் தந்தி அடிக்க வேண்டும் என்றும் முடிவாகியது.

அதன்படி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா அகியோருக்குத் தந்திகள் பறந்தன.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் தந்தி அடிக்கப்பட்டது.

**என்ன பலன்?**

குறித்த தினத்தில், அதாவது கடந்த மூன்றாம் திகதி கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா சிலாவத்துறையில் திட்டமிட்டபடி முத்துக் குளிப்பை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. பி. எம். செல்லத்துரைக்கும் (கூட்டணி) மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசனுக்கும் (அவரும் கூட்டணி) அழைப்புகள் அனுப்பப்பட்டு இருந்தன.

எந்த முகத்தோடு அவர்கள் வைபவத்தில் கலந்து கொள்வார்கள்? இருவருமே அந்தப் பக்கமே தலைகாட்டவில்லை.

இது வேடிக்கைக்கு உரிய விஷயம் அல்ல.

சொந்தமான எந்த இடத்திலும் முத்துக் குளிப்பதில் தவறில்லை. ஆனால் அந்த இடம் எந்த அமைப்பின் நிர்வாகத்துக்கு உட்பட்டதோ, அந்த அமைப்புடன் தொடர்பு கொண்டு காரியம் பார்ப்பது தானே முறை.

அமைச்சு ஒன்று மாவட்ட அபிவிருத்திச் சபைப் பிரதேசத்தில் அத்துமீறி ஊடுருவல் செய்வது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்குமா?

இன்று மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபைப் பகுதியில் நடந்தது நாளை வேறு மாவட்ட அபிவிருத்திச் சபைப் பகுதிகளிலும் நடக்கலாம் அல்லவா?

அமைச்சர்கள் பலர் தமது எந்தவேயோ அதிகாரங்களை மாவட்ட அமைச்சர்களுக்குக் கையளித்து விட்டார்கள்.

மாவட்ட அமைச்சர்கள் அந்த அதிகாரங்களை மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் ஊடாகச் செயல்படுத்துகிறார்கள்.

அங்கே, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இப்போது மிகுந்த அதிகாரம் உடைய அமைப்புகள் என்று பெரிதாகப் பேசப்படுகிறது.

[illegible]

யில் தான் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இருக்கின்றன.

அவற்றால் அதிகாரம் செலுத்த முடியவில்லை.

சொந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவும் அங்கே அதிகாரம் செலுத்தவுமே மாவட்ட அபிவிருத்திச் சபைகளைத் தாம் ஏற்றதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கூறினார்கள்.

மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்கவும் இருக்கிறார்கள்.

அதற்கிடையில் அவர்களுக்கே மன்னாரில் சுசப்பான அனுபவம் ஏற்பட்டு விட்டது. இனி என்ன செய்வார்களோ?

### சிவசிதம்பரம்

### எந்தப் பதவியும்

### ஏற்க மாட்டாராம்

மாவட்ட அமைச்சர் பதவிகளைக் கூட்டணி ஏற்பது பற்றிக் கடந்த வாரம் எழுதியிருந்தோம்.

நான்கு மாவட்ட அமைச்சர் பதவிகளைக் கூட்டணிக்கு வழங்க அரசாங்கம் இணங்கியிருக்கிறது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு — இவை தான் அந்த நான்கு மாவட்டங்களும் ஆகும்.

யாழ்ப்பாணம் மாவட்ட அமைச்சர் — திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன்.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் — கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம்.

மன்னார் மாவட்ட அமைச்சர் — கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம்.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் — பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம்.

இப்படி நியமிக்குமாறு என்று கூட்டணியின் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் முக்கியஸ்தர்களில் ஒருவர் அரசுக்குச் சிபார்சு செய்திருப்பதாகவும் பேசப்படுகிறது.

இப்படிக் கடந்த வாரம் எழுதியிருந்தோம்.

### காண்டீபம்

இதைப் படித்ததும் திரு. சிவசிதம்பரம் உடனடியாகத் தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டு, தாம் மாவட்ட அமைச்சர் பதவியை ஒருபோதும் ஏற்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

அவர் அவ்வளவோடு நிறுத்திக் கொள்ளவில்லை.

"மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவிக்கு கூட்டணியின் எந்த முக்கியஸ்தர் என்னைச் சிபார்சு செய்தார் என்று தெரியவில்லை.

"நான் அறிந்த வரையில் மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை உத்தியோகபூர்வமாகத் தீர்மானிக்கவில்லை.

"தீர்மானித்தாலும் கூட நான் மாவட்ட அமைச்சர் பதவியை ஒருபோதும் ஏற்க மாட்டேன்" என்றும் திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த கருத்தைத் தினபதி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

மாவட்ட அமைச்சர் பதவிகளுக்குச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் குறிப்பிட்ட நால்வரில் திரு. சிவசிதம்பரம் மட்டும், தாம் அந்தப் பதவியை ஏற்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகவும், உறுதியாகவும் தெரிவித்திருக்கிறார்.

### அமிரின்

### நிலை பற்றி

### ஆச்சரியம்

திரு. சிவசிதம்பரம் தன்னுடைய நிலையை உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போதும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இலகடியில் இராசலிங்கம் சனசமூக நிலையத் திறப்பு விழாவை யொட்டி திரு. ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்ற கூட்டம் அது.

அந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கமும், மற்றும் சில கூட்டணி எம். பிக்களும் கலந்து கொண்டனர்.

அவர்கள் எல்லோர் முன்னிலையிலும் திரு. சிவசிதம்பரம், "மாவட்ட அமைச்சர் பதவியையோ அல்லது வேறு எந்த அரசாங்கப் பதவியையோ நான் ஏற்கப் போவதில்லை" என்று அழுத்தமாகக் கூறினார்.

கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் இப்படிப் பேசிய கூட்டத்தில் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமும் பேசினார்.

அவர் கல்வியின் சிறப்பையும், கல்வியைக் கற்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி அருமையாகப் பேசினார். ஆனால் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவி விவகாரத்துள் இறங்காமல் நழுவிக் கொண்டார்.

ஆனால் சமீபத்தில் வேறு பல இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் மாவட்ட அமைச்சர் பதவிகளைப் பற்றித் தவறாமல் பேசியிருக்கிறார்.

உதாரணமாக காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தின் 34 ஆவது ஆண்டு விழாவையும், சித்தன்கேணி மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தொகுதிக் கூட்டணிக் கிளையின் புனரமைப்புக் கூட்டத்தையும் குறிப்பிடலாம்.

கிளைகள் புனரமைப்புக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், "மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்குப் போதியளவு அதிகாரங்களை அரசாங்கம் வழங்க வேண்டும். வேண்டியளவு நிதியும் ஒதுக்க வேண்டும். இரண்டையும் அரசாங்கம் செய்த பின்னர் மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்பது பற்றி ஆலோசிப்போம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதைக்கூடத் திரு. அமிர்தலிங்கம், "மாவட்ட அமைச்சர் பதவியையோ, அல்லது வேறு எந்த அரசாங்கப் பதவியையோ நான் ஏற்கப் போவதில்லை" என்று திரு. சிவசிதம்பரம் பேசிய இலகடிக் கூட்டத்தில் கூறவில்லை.

இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மாவட்ட அமைச்சர் பதவி விஷயத்தில் கூட்டணிக்குள் இப்போதே கருத்து வேறுபாடு.

எம். பிக்களின் பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. தர்மலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன் போன்றவர்கள் மாவட்ட அமைச்சர் பதவிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்பதற்கு எதிர்ப்பு என்று கடந்த வாரமே குறிப்பிட்டிருந்தோம்.

எதிர்ப்புக் குழுவில் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரமும் இப்போது சேர்ந்து கொண்டார். இன்னும் எத்தனை பேர் சேருவார்களோ!

நீதிமன்றங்களில் மிகவும் பிஸியாக இருக்கும் சட்டத்தரணிகள் மாவட்ட அமைச்சர் பதவிக்குப் பின்னால் போவது அர்சனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாகி விடுமே என்று அஞ்சுகிறார்கள்.

### சுதந்திர தினமும்

### துக்க தினமும்

மாவட்ட அமைச்சர் பதவி விவகாரத்தில் மட்டுமன்றி எல்லா விஷயங்களிலுமே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் இப்போது "ஹைட் அண்ட் சீக்" (Hide and seek) முறையை ஆரம்பித்திருக்கிறது. அதாவது ஒளித்து விளையாடத் தொடங்கியிருக்கிறதென்று தமிழ் மக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள்.

நேற்று முன்தினம் 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் அல்லவா? அந்தத் தினத்தை ஒட்டி நடைபெற்ற சம்பவத்தைப் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

சுதந்திர தினத்தைத் தமிழ் மக்கள் கொண்டாட வேண்டுமா அல்லது துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமா என்ற ஆராய்ச்சி தேவையில்லை.

சரியோ, பிழையோ தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்கத் தீர்மானித்து, அந்தத் தீர்மானப்படி வருடம் தோறும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து அந்தத் தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டித்து வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தாய்க் கட்சியான தமிழரசுக் கட்சியும் சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டித்து வந்தது.

தமிழ் மக்களையும் அப்படியே அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்தும் வந்தது.

துக்க தின அனுஷ்டானம் காரணமாக உயிர் இழப்புகள் நேர்ந்ததும் உண்டு.

திருமலை நடராஜனின் சோக வரலாறு துக்க தின அனுஷ்டானத்தோடு இரண்டறக் கலந்து விட்ட ஒன்று.

இந்தப் பாரம்பரியத்துக்கு உரிய தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பழைய தீர்மானத்தை மாற்றவில்லை.

எனினும் இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்கவில்லை.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ள வேண்டாம் என்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்ளவுமில்லை.

தேசிய ஐக்கியத்தில் நாட்டம் உள்ள அனைத்து மக்களுக்கும் இதுபற்றி மிக்க மகிழ்ச்சி.

கூட்டணித் தலைமைப்பீடத்துக்கு இப்போது அனுபவம் முதிர முதிரப் புத்தி பிடிபடுகிறது என்று பலரும் பெருமைப்படுகிறார்கள்.

அதே வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் இளைஞர் பேரவையின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. மாவை சேனாதிராஜா விட்ட அறிக்கை அனைவருக்கும் சிறிது சந்தேகத்தை அளித்திருக்கிறது.

கூட்டணியிலிருந்து விலக்கப்பட்ட கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலை முன்னணி பெப்ரவரி 3 ஆம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும், 4 ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து, அன்று துக்க தினம் அனுஷ்டிக்குமாறும் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

இதை அடுத்தே திரு. மாவை சேனாதிராஜாவும் அறிக்கை விட்டார். துக்க தினம் அனுஷ்டிக்குமாறு அவரும் தனது அறிக்கையில் தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தன்னுடைய சொல் தமிழ் மக்கள் மத்தியில் சரியாக எடுபடாதென்பது மாவை சேனாதிராஜாவுக்குத் தெரியும்.

அப்படியிருந்தும் அவர் துக்க தினம் அனுஷ்டிக்குமாறு கோரி அறிக்கை விட்டார் என்றால் அதற்கு யார் பின்னணியில் தூண்டுகோலாக இருந்திருப்பார்கள்?

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்துக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றித் தெரிந்தவர்கள் விஷயத்தை ஊகித்துக் கொள்ளுகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம், தான் நேரடியாகச் செய்ய விரும்பாத காரியத்தை தனக்கு வேண்டிய பிறரைக் கொண்டு செய்விக்கிறது.

கூட்டணி நேரடியாகத் துக்க தின அனுஷ்டானக் கோரிக்கை விடாமல் இருந்தால் அதுபற்றி அரசாங்கம் மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும். மாவட்ட அமைச்சர் பதவிப் பேரம் அபாரமாக நடக்கும்.

அதேவேளையில் எடுபிடிகளைக் கொண்டு துக்கதின அனுஷ்டானக் கோரிக்கை விடுத்தால் தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தலாம்.

அரசாங்கம் கேட்டாலும் அந்தக் கோரிக்கைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று கையை விரித்து விடலாம். இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்தின் எண்ணம் என்று தலைமைப் பீடத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

துக்க தின அனுஷ்டானத்தைப் பொறுத்த வரையில் இம்முறை திருகோணமலை "விஷ"வமும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கட்டுப் போட்டுவிட்டது என்று கூறப்படுகிறது.

### திருகோணமலை

### விவகாரம்

இலவச பாட நூல் விநியோகத்தின் மூன்று ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடுவதற்கும் திருகோணமலை மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாண்டு தமது கையால் பாட நூல்களை விநியோகிப்பதற்கும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த ஜனவரி 31ஆம் திகதி திருகோணமலை சென்றார் அல்லவா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்டகாலத் தீர்மானத்துக்கும் நடைமுறைக்கும் மாறாக திருகோணமலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் — திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை, திருகோணமலை நகரசபைத் தலைவி செல்வி சரஸ்வதி சுவாமிநாதன் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றார்கள்.

ஜனாதிபதி பேசிய கூட்ட மேடையில் மூவரும் இருந்தார்கள்.

திரு. சம்பந்தன் எம். பி. கூட்டத்தில் உரை நிகழ்த்தவும் செய்தார்.

இவர்கள் மூவரும் ஜனாதிபதியுடன் திறந்த ஜீப்பில் பவனி செல்லவும் இருந்தார்கள்.

இதுபற்றி 24.1.83 திங்கட்கிழமை காலை திருகோணமலை மாவட்ட அமைச்சு அலுவலகத்தில் ஜனாதிபதி வரவேற்பு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டபோது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சு செயலாளர் திரு. சந்திரா டி. சொய்சா, சேருவில எம். பி. திரு. எச். டி. எல். லீலாரத்ன, மூதூர் எம். பி. ஜனாப் ஏ. எல். எச். மஹ்ரூப், திருகோணமலை மாவட்ட அமைச்சர் திரு. எச். ஜி. பி. நெல்சன், திருமலை ஐ. தே. க. அமைப்பாளர் திரு. வ. இ. நவரத்தினராஜா, திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பொன்னம்பெரோ, மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பத்மநாதன் முதலானோருடன் இவ்வாணர்கள் சம்பந்தனும்

(7 ஆம் பக்கம் பார்க்க)

சிந்தாமணி

# இலக்கியபீடம்

### இலக்கியம்

### என்ற சொல்

### படும்பாடு

இலக்கியம் என்ற சொல் எல்லார் வாயிலும் இக்காலத்திற் பயிலப்பட்டு வருகின்றது. இலக்கியம் என்ற சொல் படும்பாடு பெரும்பாடு. அறிந்தோ அறியாமலோ இச் சொல்லினைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

இலட்சியம் என்ற வடசொல்லே திரிந்து இலக்கியம் ஆயிற்று என்பார் பலர். தனித் தமிழ் வாதிகளாகிய சிலர் இலக்கு † இயம் என்று பிரித்துக் காட்டித் தனித் தமிழ்ச் சொல்லென்று நிலைநாட்டுவர்.

அகத்தியம் என்பதனையும் எடுத்துக் காட்டி அகத்து † இயம் என்று பிரிபடுவது போல இலக்கு † இயம் என்று பிரிபடுமாம் என்பர்.

அகத்தியர் செய்த நூலே அகத்தியம் எனப்படுகின்றது. அம் சுற்றினையுடையது. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம் எல்லாம் அம் சுற்றினை உடையவை. இவ்வாறு வருவனவற்றைத் தத்திதாந்தம் என்பர். ஆகவே அகத்தியம் என்பது இயம் என்ற சுற்றினை உடையதல்ல.

இலக்கியம் என்பதிலும் இயம் விகுதியல்ல. அம் என்பதே விகுதி. எது எவ்வாறிருப்பினும் இலக்கியம் என்ற சொல்லின் பொருள் யாது?

இலக்கணம் அமைந்ததே இலக்கியம். அஃதாவது இலட்சணம் உடையதே இலக்கியம் என்பர். செம்மை, அழகு, உண்மை என்ற முக்குணங்களும் அமைந்ததே இலக்கியம்.

இலக்கியம் வேறு; நூல்கள் வேறு. எழுதப்பட்டவை எல்லாம் நூல்கள். நூல்கள் எல்லாம் இலக்கியமல்ல. சான்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களே இலக்கியங்கள் ஆகும். அஃதாவது எல்லோராலும் எங்கும் எப்பொழுதும் நிலைபேறுடைய நூல்களே இலக்கியம் எனப்படும்.

எந்த வகை நூலினையும் எழுதி அரங்கேற்றினவுடன் அது இலக்கியமாகாது. ஆங்கிலத்தில் இவற்றை Classics என்பர். அதாவது தரப்படுத்தப்பட்டவை என்பது அதன் பொருள்.

தமிழகத்திலும் இலங்கையிலும் நாளொரு மேனி நூல்கள் வெளி வருகின்றன. இவற்றை எல்லாம் நாம் இலக்கியம் என்று சொன்னாற் பொருந்துமா?

கணித மாணாக்கன் ஒருவன் நூறுக்கு நூறு புள்ளி பெற்றவுடன் கணித மேதையாக மாட்டான். கட்டுரையிற் பரிசு பெற்றான் ஒருவனின் கட்டுரை இலக்கியமாகாது. கதையொன்று ஞாயிறு வாரப் பத்திரிகையில் வெளிவந்ததும் அது இலக்கியமாகாது. காலம் எடுக்கும்.

பாரதமும் இ ரா மா ய ண மும் போன்றவையே இலக்கியம் என்றும், இலக்கணத்தற்காரியப்படுவது இலக்கியம் என்றும் விளக்கம் கூறுகின்றார், நச்சினார்க்கினியர்.

இலக்கியம் என்றால் Classics என்றும் Classics என்றால் இலக்கியம் என்றும் அகராதிகள் கூறுகின்றன.

உயர்ந்த பொருளில் வழங்கிய சொற்கள் இழிந்த பொருளை அடைதலுமுண்டு. இதனைப் பொருட் இழிபு என்பர். ஆண்டி, தேவடியாள் இதற்கு உதாரணம்.

சங்க நூல்கள், பஞ்ச காவியங்கள், சிற்றிலக்கியங்களாகிய கோவை, பரணி, பள்ளு, பிள்ளைப்பாட்டு என்பன போன்றவை இலக்கியம் என்று தமிழில் வழங்கும்.

வசன நூல்களின் பாடு என்ன என்ற கேள்வி எழுகின்றது. அவையும் ஆன்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் இலக்கியமாகும்.

உ. வே. சாமிநாதையரின் என் சரித்திரம், மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், கல்கியின் நாவல்கள், வீரமாமுனிவரின் அவிவேகபூரணகுரு கதை, நடேச சாஸ்திரியின் நாவல்கள், அ. ப வ ண முத்துப்பிள்ளையின் சொக்கநாதர் என்ற நாவல் போன்றவை எல்லாம் சான்றோரால் மதிக்கப்பட்டவை. ஆகவே அவை போன்றவையும் இலக்கியம்.

பட்டதாரிகள் எல்லாரும் பட்டதாரிகளல்லர் என்ற மொழி வழக்குண்டு. அது போல் எழுதப்பட்ட நூல்களெல்லாம் இலக்கியமாகா.

"இலக்கியங் கண்டு அதற்கு இலக்கண இயம்பல்" என்ற பாங்கையில் மாத்திரம் இலக்கியம் என்ற சொல் பண்டை நூல்களிற் காணப்படுகின்றது. மற்றும்படி நூல்கள் என்றே கூறுகின்றன.

— இவ்வாறு இலக்கிய பீடத்துக்கு எழுதுகின்றார் வித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராசா.

### தாமரையோடு

### இலங்கை வந்த

### பாண்டியன்!

மழவைப்பர் மீசையுடனும், சினிமா டைரக்டர் பாலுமகேந்திரா தொப்பியுடனும் தமிழ் நாட்டிலிருந்து தாமரைப் பூவைக் கையில் பிடித்துக் கொண்டு ஒருவர் இலங்கைக்கு வந்திருந்தார், சமீபத்தில்!

அவர் தான் "தாமரை செந்தூர் பாண்டி" என்ற பிரபல எழுத்தாளர்.



செந்தூர் பாண்டி

உவரி இரா. செந்தூர் பாண்டி பாடசாலை ஆசிரியர். அவர் மனைவி திருமதி தாமரையும் பாடசாலை ஆசிரியரே. இருவரும் விடுமுறையைக் கழிக்க இலங்கை வந்தார்கள்.

செந்தூர் பாண்டியின் இரு நாவல்கள் ஆனந்த விகடனில் பரிசு பெற்றிருக்கின்றன. ஏனைய பத்திரிகைகளிலும் நாவல், சிறு கதை, நாடகம் என்று எழுதி வருகிறார் செந்தூர் பாண்டி.

இவருடைய "அலைகள் ஓய்வதில்லை" என்ற நாவல் "ஆனந்த ராகம்" என்ற பெயரில் சினிமாவாக வெளிவந்திருக்கிறது. "மேகலா" இதழில் வெளியான "ஒரு மெழுகுவத்தி உருகியது..." என்ற கதையும், "தேவி" இதழில் வெளியான "நெஞ்சில் நிறைந்த முகம்" என்ற கதையும் திரைப்படங்களாகிக் கொண்டிருக்கின்றனவாம்.

அமரர் ஆதித்தனார் நினைவு நாவல் போட்டியில் இவருடைய "கண் வரைந்த ஓவியம்" என்ற நாவல் முதல் பரிசைப் பெற்றிருக்கிறது.

திரு. செந்தூர் பாண்டி நல்ல பேச்சாளரும் கூட. சமய, இலக்கியப் பேச்சுக்களில் வல்லவர் இவர்.

தமது மனைவியின் பெயரையும் சேர்த்துக் கொண்டு "தாமரை செந்தூர் பாண்டி" என்ற பெயரில் எழுதி வருகின்ற திருந்தே தாமரையிடம் இவருக்கு எவ்வளவு ஈடுபாடு என்பது புலனாகிறது அல்லவா?

### சவக்காலை

### தோட்டயாக்கம்

### விளக்கம் தேவை

பின்வரும் சொற்கள் சரியான பிரயோகந்தானா என்றும் அல்லது சரியான பிரயோகம் எவை என்றும் விளக்கம் தர வேண்டுகிறேன்.

"கட்டடம், சவக்காலை, சேமக்காலை, மரக்காலை, தோட்டயாக்கம்."

"கட்டடம்" என்ற சொல் சில இடங்களில் "கட்டிடம்" என்று எழுதப்படுகிறது. எது சரி?

"சவக்காலை, சேமக்காலை" என்றே வாடுறவியில் ஒலிக்கிறது. இவை இரு சொற்கள் புணர்ச்சியாயின் எவ்வகைப் புணர்ச்சி? சொற்கள் எவை?

"மரம் சக ஆலை சமன் மரவாலை" என்பது தானே சரி. மரக்காலை எப்படிப் பொருந்தும்? தமிழ்ப் பிரதேசங்களில் கூட "மரக்காலை" என்றே எழுதியுள்ளார்கள் பழக்கமாயிருக்கிறது.

தோட்டம், ஆக்கம் தோட்டவாக்கம் என்று தானே அமைய வேண்டும்? தோட்டத்து வாகனங்களில் "ஸ்ரீலங்கா பெருந் தோட்டயாக்கம் என்றே எல்லாப் பகுதிகளிலும் எழுதப்பட்டிருக்கிறதே.

இவற்றுக்கெல்லாம் பூரண விளக்கத்தை சிந்தாமணி இலக்கிய பீடத்தின் மூலம் அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு எழுதுகிறார் பண்டாரவளை, டயரபா தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மனோரஞ்சிதம்.

இலக்கிய பீட வாசகர்கள் யாராவது விளக்கம் தருவார்களா?

### பாரதி விழாவும்

### கண்காட்சியும்

பாரதி நூற்றாண்டு விழாக் காலம், கடந்த டிசம்பரோடு முடிந்து விட்டது.

எனினும் பாரதி நூற்றாண்டு விழாக் காலத்தில் நடத்துவது என்று திட்டமிட்டிருந்த மூன்று காரியங்களை அடுத்த வாரம், அதாவது பெப்ரவரி 12, 13ஆம் திகதிகளில் நிறைவேற்றவிருக்கிறார்கள், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர்.

1. பாரதி நூல்களின் கண்காட்சி.

2. இலங்கை எழுத்தாளர்களின் புகைப்படக் கண்காட்சி.

3. பாரதி நூற்றாண்டு விழாவின் இறுதி நிறைவுப் பொதுக் கூட்டம் என்பனவே அந்த மூன்று காரியங்களுமாகும்.

முற்போக்காளர்கள், கொஞ்சம் காலங் கடந்து பிற்போக்காக வேனும் போட்ட திட்டத்தை செயல்படுத்துவது வரவேற்கத்தக்கது. அவர்களைப் பாராட்டுகிறோம்.

பாரதி நூல் கண்காட்சிக்கு பாரதியார் நூல்களும், பாரதியார் பற்றிய நூல்களும் ஓரளவு தான் கிடைத்துள்ளனவாம். காலஞ்சென்ற கலாநிதி கைலாசபதியிடமிருந்த "பாரதி கலெக்ஷனை" வைத்தே பெரும்பாலும் இடத்தை நிரப்பிவிடலாம் என்று முயன்று வருகிறார்கள்.

இலங்கை எழுத்தாளர்களின் புகைப்படங்கள் போதிய அளவு கிடைக்கவில்லையாம். எழுத்தாளர்கள் ஒத்துழைப்பு நல்காமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. எப்படியும் ஒரு நூறு படங்களையாவது வைத்து கண்காட்சி நடத்தலாம். கூடக் கிடைத்தால் மிகவும் நல்லது. இது ஓர் அரிய சந்தர்ப்பம். முற்போக்காளர்களின் முகங்களை எல்லாம் கண்காட்சியில் பார்த்து விடலாம் அல்லவா?

இந்தியாவிலிருந்து நான்கு அரசியல் இலக்கியப் பிரமுகர்கள் வந்து கலந்து கொள்ளவிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவர்களில் பிரபல எழுத்தாளர் சிலர், பிரபல பேச்சாளர் சிலர். அவர்களின் பெயர்கள்:—

1. இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்.

2. பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன்.

3. கவிஞர் சிதம்பர ரகுநாதன்.

4. திருமதி ராஜம் கிருஷ்ணன்.

விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனியும், ஞாயிறும் ஜாம், ஜாம் என்று புரிமளிப்பாக விழா அமையும் என்று நம்பலாம். பொதுமக்கள் பெருந்திரளாகச் சென்று பாரதியைக் கௌரவிக்க வேண்டும் என்று இலக்கிய பீடம் கேட்டுக் கொள்கின்றது.

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி RUPAVAHINI

## காதம்பரி

"காதம்பரி" என்ற பெயரில் ஒரு பல்சுவை நிகழ்ச்சி கடந்த ஞாயிறு இரவு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது. நான்கு அம்சங்கள் இதில் இடம்பெற்றன. இரு பாட்டுகள், ஒரு குட்டி "நாடகம்", ஒரு நடனம்.

"மார்கழிப் பெண்ணுக்கு விடை கொடுத்து தைமகள் வந்தாள் நடைபோட்டு" என்ற பாடலை மார்கழி விடை கொடுத்து சுமார் 20 தினங்களுக்குப் பின் பாடித் தீர்த்தார் ஜெயதேவி விக்னேஸ்வரன்.

இந்தப் பாடல் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை வானொலியில் அடிக்கடி கேட்டுப் புளித்துப் போன பாடல். காதம்பரியிலும் கேட்டுக் காது அம்பாரித்துப் போயிற்று.

ஆயினும், ஜெயதேவி மலர்ந்த



குட்டி நாடகத்தில் ராம்தாஸ் — ஈஸ்வரன்

முகத்தோடு நின்று பாடிய "ஸ்டைல்" நன்றாக இருந்தது. அழகாகப் பாடக் கூடிய அவருக்கு ஒரு நல்ல புதுப் பாடலை அல்லது காலக்கட்ட நிர்ணயம் இல்லாத பாடலைத் தேர்ந்து கொடுத்திருக்கக் கூடாதா?

குட்டி நாடகமும் பழைய சரக்குத்தான்.

இதில் ராம்தாஸ், செல்வசேகரன், ராஜகோபால், ஈஸ்வரன்

## தயாரிப்பு: சஞ்ஜயன்

ஆகியோர் நடித்திருந்தார்கள். ராம்தாஸ் தமது ஆதிக்கத்தால் டெலிவிஷன் ஸ்கிரீன் முழுவதையும் நிரப்பி விடுகிறார். மற்றவர்களுக்கு உள்ளே நுழையக் கூட இடம் இல்லை.

செல்வசேகரனும் ராஜகோபாலும் தங்கள் பாகங்களைப் பாராட்டும்படி செய்தார்கள்.

நல்ல கற்பனை வளம் உள்ள "மரிக்கார் பாபா" பாணபடுகாரன "உனக்கும் பெப்பே, உன் பாட்டனுக்கும் பெப்பே" என்ற கருவைத்தான் கையாள வேண்டுமா?

"புது ரோஜா மலரே" என்று எம். பாக்கியராஜா பாடினார். நன்றாகவே பாடினார்.

கண்ணன் – நேசன் இசையும் கச்சிதமாக அமைந்தது. இவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

புது ரோஜா மலரை எழுதியவர் ஷெல்லிதாஸன் என்று அறிவிக்கப்பட்டது. யார் இந்த ஷெல்லிதாஸன்? ஷெல்லிதாஸன் என்பது வரகவி பாரதியார் சூட்டிக் கொண்ட புனைபெயர் அல்லவா?

இறுதி அம்சம், சுவர்ணமுகியின் நடனம். இது ஏற்கனவே டி. வியில் கண்டு களித்த நிகழ்ச்சிதான். வழக்கம் போலவில்லாமல் வளைந்து, புழுவாக நெளிந்தார் சுவர்ணமுகி!

"காதம்பரி" என்று ஒரு பல்சுவை நிகழ்ச்சியை ஆரம்பித்தது வரவேற்கத்தக்கது. இப்படி ஒரு நிகழ்ச்சி வேண்டும் என்று "ஒலி – ஒளி – உருவம்" கேட்டிருந்தது. நிகழ்ச்சி வாரா வாரம் தொடரட்டும்.



சுவர்ணமுகியின் நடனத் தோற்றம்.

## நவப் புதல்வனின் நடவகலுக்கு காரணம் என்ன?

கடந்த புதன்கிழமை இரவு தமிழ்த் திரைப் படத்தைப் பார்க்க டீவியின் முன்னே ஆவலோடு அமர்ந்திருந்த ரூபவா ஹினி ரசிகர்களுக்குக் கிடைத்ததோ பெரும் ஏமாற்றமே.

இப்படியொரு ஏமாற்றத்தைப் படம் ஆரம்பிக்கும் நேரத்தில், "இன்று தமிழ்த் திரைப்படம் காட்டப்பட மாட்டாது" என்ற அறிவித்தலுடன் தெரிவித்தது, ரூபவாஹினியின் பொறுப்புணர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பதே அநேகரின் அபிப்பிராயமாகும்.

முதல் நாள் இரவு கூட மறுநாளைய நிகழ்ச்சி நிரலின் ஒளிபரப்பில் 9.00 மணிக்குத் தமிழ்த் திரைப்படம் என்று எழுத்தில் காட்டப்பட்டது. பின்னர் ஏமாற்றம் அளிக்கப்பட்டது. ஏன் இந்த நிலை?

ஒளிபரப்பப்பட இருக்கும் தமிழ்த் திரைப் படத்தின் பெயரை ரூபவாஹினியினர் கடைசி வரை குறிப்பிடாமலே இருந்த வேளையில், வர்த்தக விளம்பரப் பொறுப்பாளர்கள் "தவப் புதல்வன்" எனப் பத்திரிகையொன்றின் மூலமாக விளம்பரப்படுத்தும் அளவுக்கு, அன்றைய இரவு அத் திரைப் படம் காட்டப்படும் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்ததையே ரூபவாஹினி ரசிகர்களும் நம்பினர்கள். நம்பி ஏமாந்தார்கள்.

அப்படியானால் குறிப்பிட்ட நாளில் அதே நேரத்தில் "தவப் புதல்வன்" படம் காட்டப் படாததன் காரணம் திரைப்பட "டேப்" தமிழ் நாட்டிலிருந்து உரிய நேரத்தில் வந்து சேரவில்லை என்பதாலா?

அக் காரணத்தை அன்றிரவே ரசிகர்களுக்கு ரூபவாஹினி மூலமாகத் தெரிவித்திருக்கலாமே, இதில் தவறொன்றுமில்லையே?



பாக்கியராஜா பாடுகிறார்.

அல்லது ஒளிபரப்பப்பட விருந்த "தவப் புதல்வன்" படமும் முக்தாவின் படந்தானே? அப்படியானால் "சம்திங் கொடுத்தால் பெரும் புகழும்", "அருள்ஜோதயமும் அதை ஓரளவு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது", "முக்தாவுக்கு ரூபவாஹினி குத்தகையா?" என்ற ஒலி – ஒளி – உருவக் கருத்துக்களால் ஏற்பட்ட தாக்கமா? "தவப் புதல்வ"னின் தடங்கலுக்கு இப்படியும் எண்ண இடமேற்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட தயாரிப்பாளரின், டைரக்டரின் "முக்தா யூனிட்" படமே தொடர்ந்து ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படுகிறதென்றால், அதை அனுப்பும் தமிழகத் தரகரின் "திருவிளையாடலோ" அல்லது இறக்குமதி செய்பவர்களின் பின்னணியை ஆராய்வது அவசியம்.

## விளையாட்டும் வேதனையும்

ரூபவாஹினியில் அவ்வப்போது பிரிஸ்டல் விளையாட்டுப் பிரிவின் அனுசரணையுடன் உலக விளையாட்டுப் போட்டிகள் ஒளிபரப்பப்படுவதுண்டு.

உலக கிண்ணப் போட்டிக்கான உதைபந்தாட்டப் போட்டியைத் தவிர ஒளிபரப்பப்பட்ட மற்றைய உலக விளையாட்டுப் போட்டிகள் யாவும், குறைந்தது 6 மாதம் கழிந்துதான் ஒளிபரப்பப்படுகின்றன.

உடனடியாக பார்க்கும் போது ஏற்படுகின்ற "த்ரில்" இவற்றைப் பார்க்கும் போது இல்லை.

எனினும் விளையாட்டுப் பிரியர்களும், விளையாட்டு ரசிகர்களும் இதனை விரும்பிப் பார்க்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்காக ஒளிபரப்பப்படுகின்ற இந்த விளையாட்டுப் பிரிவு ஒளிபரப்பு பற்றி சில வேதனையான கருத்துக்கள்:

1. சில வேளைகளில் கிரமமாக ஒளிபரப்பப் படுகின்ற — வாராந்த நிகழ்ச்சிகளை — விளையாட்டுப் பிரியர்களை விட, கூடுதலான ரசிகர்களைக் கொண்ட ஜனரஞ்சக தொடர் நிகழ்ச்சிகளைத் திடீரென ரத்துச் செய்துவிட்டு — இந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவது விரும்பத்தக்கதல்ல.

உதாரணமாக கடந்த வெள்ளியும், சனியும் (21.1.1983, 22.1.1983) ஒளிபரப்பப்பட இருந்த ஸ்டார்ஸ்கி அண்ட் ஹட்ச் நிகழ்ச்சி, சட்டர்டே நைட் மூவி நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டு டென்னிஸ் டேவிஸ் கப் பந்தயம் ஒளிபரப்பானதைக் குறிப்பிடலாம்.

டேவிஸ் கப் டென்னிஸ் பந்தயத்தில் இலங்கை முதலிடம் பெற்ற நிகழ்ச்சி பெருமைப்படத்தக்கதுதான். அது ஒளிபரப்பப் பட வேண்டிய நிகழ்ச்சிதான் என்று எடுத்துக் கொண்டாலும், அதனை விசேஷமாக நாளாந்த ஒளிபரப்பின் பின்னர் ஒளிபரப்பியிருக்கலாம். அதைக் காண விரும்பிய ரசிகர்கள் முழித்திருந்து கட்டாயம் பார்த்திருப்பார். மற்றைய ரசிகர்கள் வழமையாகப் பார்க்கக் காத்திருக்கும் நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு சயனித்திருப்பார் அல்லவா?

2. ரூபவாஹினி ஒரு தேசிய ஸ்தாபனம். இன்று குடிசைகளிலும், கிராமப் புறங்களிலும் ரூபவாஹினியைப் பலர் ரசிக்கின்றனர். படித்தவர்களிலும் பார்க்க பாமர மக்கள் பார்க்கும் ரூபவாஹினியில் பாமர நெஞ்சங்களுக்குப் புரியாத, புரிந்தும் பிரயோசனம் இல்லாத டென்னிஸ் பந்தயங்கள், "கால்ப்" பந்தயங்கள் என்பவற்றைப் பல மணி நேரம் போட்டு பொது மக்கள் பணத்தை விரயடிக்கலாமா?

இலங்கை டென்னிஸ் பந்தயத்தில் வெற்றி பெற்றவரை ஒரு சில ஷொட்டுகளுடன் மூன்று மொழி செய்திகளிலும் சொன்னது போதாதா?

பல மணி நேரம் பல ஆயிரம் ரூபாக்களை செலவழித்து ஒளி பரப்பப்பட்ட இந்த டென்னிஸ் பந்தயத்தை எத்தனை ஆயிரம் மக்கள் பார்த்தார்களோ என்னவோ?

பந்தயத்தை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த பல நூறு வெறும் கதிரைகளை, பந்தய நேரத்திலேயே டெலிவிஷன் கமரா அடிக்கடி குளோசப்பிலும், லைட் ஷொட்டிலும் காட்டியது. இதன் மூலம் எந்தனை முக்கியத்துவம் வாய்ந்த டென்னிஸ் பந்தயத்தைக் காட்ட பொதுமக்கள் பணத்தை ரூபவாஹினி விரயடிக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லியது மெச்சத்தக்கதுதான்.

பார்வையாளர்களே இல்லாத பந்தயத்தை எம் தலைமீது கட்டியடிக்கும் ரூபவாஹினியினருக்கு ஒரு சபாஷ் போடுவோமா?

3. விளையாட்டுப் பிரிவினர் அளிக்கும் விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏன் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மாத்திரம்தான் ஒளிபரப்பப்படுகின்றன. தமிழ் மக்களிடம் விளையாட்டுப் பற்றி அறிய ஆவல் இல்லையா? ரூபவாஹினி விழுந்தடித்து மீசையில் மண் படாமல் காட்டிய இலங்கைக்குப் புகழ் தந்த டென்னிஸ் ஆட்ட வீரன் செபரத்தினம் தமிழ் மகன் அல்லவா? எனவே தமிழிலும் வாரம் ஒரு தடவை விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சி தர ரூபவாஹினி முயற்சி எடுக்க வேண்டும்.

— டெலிவிஷன் டாக்டர்



கடந்த செவ்வாய்க்கிழமை (1. 2. 83) இரவு 7.30 மணிக்கு ரூபவாஹினி கலையரங்கத்தில் இடம் பெற்ற பிரேமினாவின் இசைக் கச்சேரி பற்றி "பிரமீளா இசை பிரமாதம்" என்னும் தலைப்பில் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதியே இப் பகுதியில் விமர்சனம் எழுதியிருந்தோம். ஆம், இவ் இசைக் கச்சேரி மறு ஒளிபரப்பானாலும் கேட்டானந்திக்கத் தக்கதான இசை விருந்தாகவே அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

## மாவட்ட அபி....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கத்துரையும் பிரசன்னமாக இருந்தார்கள்.

இந்தக் கூட்ட ஏற்பாட்டின்படி திரு. சம்பந்தன் ஜனாதிபதியை வரவேற்றுப் பேசுவார் என்பதையும் —

திருவாளர்கள் சம்பந்தனும், தங்கத்துரையும், செல்வி சாவித்திரி சுவாமிநாதனும் ஜனாதிபதியுடன் ஜீப்பில் பவனி வருவார்கள் என்பதையும் —

கடந்த வாரம் "நாளை திருமலையில் தேசிய ஐக்கியம், கூட்டணி பக்கபலம், ஜனாதிபதியை வரவேற்று அவருடன் ஜீப்பில் பவனி" என்ற தலைப்பில் எழுதியிருந்தோம்.

இவர்கள் செல்வது கூட்டணித் தீர்மானத்துக்கு முரண். நடைமுறைக்கு மாறு என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

சிந்தாமணி வெளிவந்த அடுத்த நாள் ஜனாதிபதி திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

பவனி செல்வதற்கு ஜனாதிபதி ஜீப்பில் ஏறினார். ஏற்கனவே தீர்மானித்தபடி மற்றவர்களும் ஜீப்பில் ஏறினார்கள். ஆனால் திரு. சம்பந்தன் மட்டும் ஜீப்பில் ஏறவில்லை. ஜனாதிபதி அழைத்தும் திரு. சம்பந்தன் நழுவி விட்டார்.

திரு. தங்கத்துரை அந்தப் பக்கமே வரவில்லை.

பின்னர் அவர் கூட்ட மேடைக்குச் சென்று அங்கே வீற்றிருந்தார். திரு. சம்பந்தனும் செல்வி சாவித்திரி சுவாமிநாதனும் தம் பாட்டில் கூட்ட மேடைக்குச் சென்றார்கள்.

ஜனாதிபதியுடன் ஜீப்பில் பவனி செல்லாவிட்டாலும் அவருடைய கூட்டத்தில் திருகோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து கொண்டதால் தேசிய ஐக்கியத்துக்கு அவர்கள் ஓரளவிலேனும் கால்கோள் நட்டு விட்டார்கள்.

அரசாங்கத்துக்கும் கூட்டணிக்குமிடையே மிகுந்த நல்லெண்ணத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

இந்த நல்லெண்ணத்தைக் கெடுக்கும் வகையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ் மக்களுக்குக் கூட்டணி வேண்டுகோள் விடுக்கலாமா?

இது கூட்டணித் தலைமைப் பீடத்தின் சிந்தனை.

ஆனால் திருகோணமலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் ஜனாதிபதியின் திருமலை விஜயம் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் —

அவரை வரவேற்பதற்கும் —

அவருடைய கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் —

அவரோடு ஜீப்பில் பவனி வர இணக்கம் தெரிவிப்பதற்கும் கூட்டணித் தலைமைப் பீடத்தின் அனுமதியைப் பெற்றார்களா?

கூட்டணியின் எந்த ஒரு தீர்மான அமைப்பையேனும் கூட்டி முடிவு செய்யாமல் அனுமதி வழங்கியவர் யார்?

அனுமதி வழங்கப்படவில்லையானால் இராசதுரை மீது நடவடிக்கை எடுத்த மாதிரி சம்பந்தப்பட்ட மூவர் மீதும் கூட்டணி ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமா?

நிவிரவாதத் தமிழர் இளைஞர்கள் இந்தக் கேள்விகளை எழுப்புகிறார்கள்.

## வாசகர் எதிரொலி-எதிரொளி

ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் "வளர்பிறை" இஸ்லாமிய நிகழ்ச்சி பல நேயர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 15 நிமிஷங்களிலிருந்து 30 நிமிஷங்களாக அதிகரிக்கப்பட்டதற்கு வழிகோலிய சிந்தாமணிக்கு, எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். — ஹிதாயா அகமட், மதுபாஹ தாஹா, நஸ்ஸா அக்பர், நவீனு சாகிப், கதீஜா, யாழ்ப்பாணம்.

★

"வளர்பிறை" நிகழ்ச்சியில் சிறந்த இஸ்லாமிய நிகழ்ச்சிகள் இடம் பெறுவதையிட்டும், 15 நிமிஷங்களை அரைமணி நேரமாக அதிகரிக்கப்பட்டதையிட்டும் அக மகிழ்கிறோம். — இர்பானு, மஹீரு, இம்ரான், சராம்பால், மஹ்ரூஸ், அபூபக்கர், யாழ்ப்பாணம்.

★

"வளர்பிறை" அரைமணி நேரமாக வளர்ந்ததையிட்டு மட்டுமல்ல; மாதமிருமுறை பிரகாசிக்கப் போவதையிட்டும் பெருமகிழ்வெய்தினேன். — எம். ஐ. கலீல், கல்முனை — 5.

★

ரூபவாஹினியில் சிவாஜி கணேசன் நடித்த படங்களே ஒளிபரப்பப்படுகின்றன. இது ஏன்? தமிழ்ப் படங்கள் பார்ப்போர் அத்தனை பேரும் சிவாஜி ரசிகர்கள் என்ற எண்ணமா? ரசிகர்கள் பலவிதம் என்பதை ரூபவாஹினியினர் உணர வேண்டும். — எம். எச். எம். ஜவ்பர், கஹத்துறை.

★

வாசகர்களின் எண்ணக் குவியல்களுக்கு இடமளிக்கும் இப் பகுதி மிகுந்த வரவேற்பைப் பெற்று விட்டது. சஞ்ஜயனின் கருத்துகள் ஆக்கபூர்வமானவை. வாஹினி மீது மட்டுமே அதிக நோட்டமிடும் சஞ்ஜயன் வானொலிப் பக்கமும் தன் பார்வையைத் திருப்பினால் நல்லது. — நாகமணி மகேந்திரலிங்கம், சங்கானை.

# வெள்ளித் திரைகளில்


**2-வது வாரம்!**

கெயிட்டி
10-30, 2-00, 6-00, 9-30.

நவா
10-00, 2-00, 6-00, 9-30.

நிருமலகாந்த்
(திருமலை)
தினசரி 6-00, 9-30
சனி 2-30.
ஞாயிறு 10-30, 2-30

ராணி
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30.

பஞ்ச பாண்டவர்களின் கதையை மையமாக வைத்து பின்னப்பட்ட திரைக்காவியம்.

என். டி. ராமராவ், ரங்கராவ், ஜெமினி கணேசன் – சாவித்திரி நடித்த

**மாயா பஜார்**

ரசிகர்களின் வேண்டுகோளின் பேரில் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கொப்பி
என். எப். சீ./717

35 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 25 வருடங்களுக்கு முன் வெளி வந்து வெற்றிக் கொடி நாட்டிய காதல் காவியம்

கெப்பிட்டல்
10-30, 2.00, 6.00, 9.30

கொன்கோட்
10-30, 2-30, 6.00, 9.30

மஜெஸ்ரா
(யாழ் நகர்)
10-30, 2-30, 6.00, 9.30

ஆந்திராவின் முதலமைச்சர் என். டி. ராமராவ் – ரங்கராவ், சாவித்திரி மற்றும் பலர் நடித்த விஜயாவின்

**பாதாள பைரவி**

(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கொப்பி)
என். எப். சி./733

**3-வது வாரம்!**

ஜெஸிமா
10-30, 2-00, 6-00, 9-30.

கல்பனா
(இருவப்பளை)
10.30, 2-00, 6-00, 9-30.

ஹரன்
(யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-00, 9-30.

சுபராஜ்
(மட்டுநகர்)
2.00, 6.00, 9.30

விஜித்தா
(ஹட்டன்)
2.30, 6.30 9.30

சுதாகர் — ராதிகா நடித்த

**கிழக்கே போகும் இரயில்**

(கலர்)

**4 வதுவாரம்!**

சமந்தா
2.00, 6.00, 9.30

ரீகல்
(யாழ். நகர்)
10-00, 2-00, 6-30, 9-30.

அன்ரூ
(திருமலை)
2-00, 6-00, 9-30.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். (இரட்டை வேடம்) சரோஜாதேவி ரத்னு — நம்பியார் ரங்கராவ் நடித்த

**எங்க வீட்டுப் பிள்ளை**

(ஈஸ்ட்மன் கலர்)

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கொப்பி.

**7 வதுவாரம்!**

முருகன்
(இன்று மட்டும்)
10-30, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30, 9-30

சிதாரா
(திருமலை)
6.00, 9.30

ஆனந் (சிவாஜிகணேசன்) தன்னுடையகாதலிக்காக (வாணிஸ்ரீ) கட்டிய மாளிகை உங்கள் குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்

**வசந்த மாளிகை**

(ஈஸ்மன் கலர்)

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கொப்பி

**4 வதுவாரம்!**

தமிழகத்தில் வெற்றிக்கொடி நாட்டிய புதுமைப் படைப்பு

கமலஹாசன் – ஸ்ரீதேவி நடித்த வண்ணப் படம்

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
10.30, 2.00, 6.00, 9.30

சபையர்
வெள்ளவத்தை
2.00, 6.00, 9.30

லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-00, 9-30

நெல்சன்
(திருமலை)
2-00, 6-00, 9-30.

**16 வயதினிலே**

(கலர்)

விளம்பரமின்றி வியாபாரமில்லை

**4 வதுவாரம்!**

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா நம்பியார் நடித்த

**நம் நாடு**



இங்கிலீ...
கொழும்பு
2.00, 6.00, 9.30

ஸ்ரீதர்
யாழ்நகர்
10-30, 2-30, 6-30, 9-30.

விஜயா
(மட்டுநகர்)
2-00, 6-00, 9-30.

அன்று பார்க்கத் தவறியவர்கள் மீண்டும் பார்ப்பதற்கான அரிய சந்தர்ப்பம்.

(ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய கொப்பி)





## பறக்கும் விமானத்தில் பிறந்த குழந்தை

பறக்கும் விமானத்தில் பெண்மணி ஒருவர் தமது 12 ஆவது குழந்தையைப் பெற்றெடுத்தார்.

மல்மூன் கான் என்னும் இந்தப் பெண்மணி வங்காள தேசத்தின் தலைநகரான டாக்காவிலிருந்து கராச்சிக்கு வங்காள தேச விமானம் ஒன்றில் பிரயாணம் செய்தார்.

விமான மலசல கூடத்துக்குச் சென்ற அவர் அங்கு உதவி கோரி சத்தமிட்டார். விமானப் பணிப் பெண்கள் உதவிக்கு ஓடினார்கள், சம்பந்தப்பட்ட பெண்மணி அழகான ஆண் குழந்தை பெற்றெடுத்த விபரத்தை அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தியாவிலுள்ள ராஜஸ்தானுக்கு மேலாக 37,000 அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்த போதுதான் பிரசவம் நடந்தது.

குழந்தைக்கு விமானத்தில் வைத்து ஒக்சிஜன் கொடுக்கப்பட்டது. கராச்சியில் விமானம் தரையிறங்கியதும் முதல் வேலையாகத் தாயும், சேயும் அம்புலன்ஸ் ஒன்றில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

வங்காளதேச போக்குவரத்துக் கம்பெனி ஒன்றின் ஊழியரது மனைவியான மல்மூன்கான், விமானத்தில் ஏறியபோது அவர் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார் என்ற சந்தேகமே எழவில்லை என்று விமானத்தின் விமானிகள் தெரிவித்தார்கள். (ர)






# அமைச்சரவை மாற்றமும் ராஜீவின் பிரவேசமும்

ஆந்திரா, கர்நாடகம், திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களிலும் அண்மையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் இந்தியாவின் ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் தோல்வி அடைந்தது. இதன் அடுத்து சில வாரங்களின் பின் பிரதமர் இந்திரா ஓர் அதிர்ச்சிக் குண்டை தூக்கிப் போட்டார்.

அதுதான் இந்திய அமைச்சரவை மாற்றம்.

இந்த மாற்றத்துக்கு முதல் நாள் மத்திய அரசு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், கட்சியின் பொதுச் செயலாளர்கள் அனைவரிடம் இருந்தும் இராஜினாமாக் கடிதங்கள் கேட்டு வாங்கப்பட்டன.

அடுத்த நாள் இடம் பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது ஒரு சிரேஷ்ட அமைச்சரும், 4 இராஜாங்க அமைச்சர்களும் 3 பிரதி அமைச்சர்களும் பதவி இழந்தனர்.

ஒரு இராஜாங்க அமைச்சர் அமைச்சராகப் பதவி உயர்வு பெற்றார். முன்னாள் மாநில முதலமைச்சர்கள் இருவர் அமைச்சர்களாக்கப்பட்டனர். 5 இராஜாங்க அமைச்சர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

### ★ ஒருநாள் கழித்து ஸ்டீபன் இராஜினாமா

ஒருநாள் கழித்து கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. சி. எம். ஸ்டீபனின் இராஜினாமா வும் அறிவிக்கப்பட்டது. கட்சியின் பொதுச் செயலாளர் பதவி ஏற்பதற்காக திரு. சி. எம். ஸ்டீபன் இராஜினாமாச் செய்வதாக அப்பொழுது தெரிவிக்கப்பட்டது.

அதன்படி கட்சியின் 5 பொதுச் செயலாளர்களில் ஒருவராக திரு. சி. எம். ஸ்டீபன் புதிதாக நியமிக்கப்பட்டார். அவருடன் பிரதமர் இந்திராவின் மூத்த புதல்வர் திரு. ராஜீவ் காந்தியும் ஒரு பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவரது பிரவேசத்துடன் இந்திய அமைச்சரவை மாற்றம் முற்றுக்கு வந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதவில்லை.

எனினும் மாநில காங்கிரஸ் முதலமைச்சர்கள், காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள், மத்திய நாடாளுமன்ற போர்ட் உறுப்பினர்கள் ஆகியோரில் சிலரின் தலைகள் உருளலாமென்றும் நம்பப்படுகிறது.

காங்கிரஸுக்குள் ஏற்பட்ட உட் கட்சிப் போராட்டத்தினால் இந்திரா காங்கிரஸ் மாநிலங்கள் சில பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளன.

### ★ மூப்பனர் தப்பிப் பிழைத்தார்

இந்திரா காங்கிரஸின் 5 பொதுச் செயலாளர்களில் கே. மூப்பனர், சந்துலால் சந்திராகர், வசந்தராவ் பட்டீல், எம். சத்ய நாராயணராவ் ஆகிய நால்வரும் ஏனைய அமைச்சர்களோடு தமது இராஜினாமாக் கடிதங்களைக் கொடுத்திருந்தனர். 5 ஆவது பொதுச் செயலாளரான திருமதி ராஜேந்திர குமாரி வாஜ்பாய், அச்சமயம் அஸ்ஸாமில் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் அவரிடம் இருந்து இராஜினாமாக் கடிதம் பெறப்படவில்லை.

பூலோக சஞ்சாரம்

தற்பொழுது சத்ய நாராயணராவ், வசந்தராவ் பட்டீல் ஆகியோரின் இடங்களுக்கே ஸ்டீபனும், ராஜீவ் காந்தியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்ற மூவரின் இடங்களுக்கு புதிதாக மூவர் நியமிக்கப்படுவார்களா அல்லது இந்தக் கவிழ்ப்பில் அவர்கள் தப்பிப் பிழைப்பார்களா என்பது தொடர்ந்து சந்தேகத்துக்கு இடமானதாகவே இருக்கிறது.



ராஜீவ்



இந்திரா



வெங்கட்ராமன்

அமைச்சரவை மாற்றத்தின் போது பதவி இழந்த 4 இராஜாங்க அமைச்சர்களில் தமிழரான ஆர். வி. சுவாமிநாதனும் (விவசாயம்) ஒருவர். ஆனபடியால் திரு. கே. மூப்பனரின் பொதுச் செயலாளர் பதவி பறிபோக மாட்டாதென்று அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

### ★ பொறுப்பு வாய்ந்த பொதுச் செயலாளர் பதவி

இந்தியாவைப் பொறுத்த வரை ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி அமைச்சர் பதவியை விட பொறுப்பு வாய்ந்தது.

இதற்கு திரு. ராஜீவ் காந்தியும் நியமிக்கப்பட்டது மூலம் இந்திய அரசியலில் முதலாவது உத்தியோகபூர்வ பதவி ஒன்றை அவர் ஏற்றுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவின் அவசரக் கூட்டத்தின் பின்னர் முன்னாள் விமானியான ராஜீவ் காந்தியின் நியமனம் அறிவிக்கப்பட்டது.

### ★ எதிர்ப்பு இருந்திருக்காது

கட்சியில் பிரச்சினைக்குள்ளானவர்கள் பலர் அமைச்சரவை மாற்றம் மூலம் வெளியேற்றப் பட்டதால் ராஜீவின் பிரவேசத்துக்கு கட்சிக்குள் பெரும் எதிர்ப்பு எதுவும் இருந்திருக்க மாட்டாது என்று நம்பப்படுகிறது.

38 வயதான ராஜீவ் காந்தி 1980 இல் சஞ்சேயின் மரணத்தின் பின்னர் அரசியலுக்கு இழுக்கப்பட்டார். கடந்த இரண்டு வருடகாலமாக அவர் இந்திராவின் ஆலோசகராக இருந்து வந்தார். தற்பொழுது பொதுச் செயலாளர்களில் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டிருப்பதால் காங்கிரஸின் சிரேஷ்ட தலைவரும், காங்கிரஸின் நிர்வாகத் தலைவருமான திரு. கமலபதி திரிபாதியின் கீழ் வேலை செய்யும் வாய்ப்பு ராஜீவுக்குக் கிடைத்துள்ளது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாமிலும், மேகாலயாவிலும் தேர்தல்கள் இம்மாதம் நடைபெற இருப்பதால் கட்சியின் பொதுச் செயலாளர்களிடம் பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

### ★ அரசியல் வட்டாரங்களில் பலதரப்பட்ட கருத்து

ராஜீவ் காந்திக்கு பொதுச் செயலாளர் பதவி வழங்கும் அறிவிப்பு வெளிவந்ததை அடுத்து இந்திய அமைச்சரவை மாற்றத்தின் உள்நோக்கம் குறித்து இந்திய அரசியல் வட்டாரங்களில் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

தமது புதல்வர் ராஜீவ் காந்தியை கட்சிக்குள் கொண்டு வருவதற்காக இந்திராவால் இந்த அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்பட்டதா?

8 அல்லது 9 பேரை நீக்கி விட்டு அதே அளவு பேரை புதிதாக நியமிப்பதற்காக முழு அமைச்சர்களிடமும் (61 பேர்) பொதுச் செயலாளர்களிடமும் இருந்து இராஜினாமாக் கடிதங்கள் பெறப்பட வேண்டியது அவசியமா?

சஞ்சே காந்தியின் அரசியல் பிரவேசத்தையும், இந்திராவின் குடும்ப ஆதிக்கத்தையும் கட்சியின் கீழ் மட்டத்தில் இருந்து எதிர்த்து வந்த கோஷ்டிகள் தற்போது மீண்டும் சுறுசுறுப்பு அடைந்து வருகின்றன.

ராஜீவ் காந்தி, காங்கிரஸ் தலைவர் பதவியையும் பிரதமர் பதவியையும் பெறுவதற்கு இந்த பொதுச் செயலாளர் பதவி அடிகோலி இருப்பதாக கூறப்படுகிறது.



பதவியிழந்த சிரேஷ்ட மந்திரி பாண்டே

### ★ பதவி இழந்த கெடார் பாண்டே

அமைச்சரவை மாற்றம் மூலம் பதவி இழந்த சிரேஷ்ட அமைச்சர் திரு. கெடார் பாண்டே

(14 ஆம் பக்கம் பார்க்க)

## டெலிவிஷனில் தோன்றிய பெண்ணுக்கு பொல்லடி

லண்டனில் மைக்கல் வால்ஷ் என்னும் 60 வயது முதியவர் கடந்த வாரம் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்தார்.

சீரழிந்த வாழ்க்கை வாழ்ந்து வரும் பெண்களைப் பற்றிய சித்திரம் ஒன்று டெலிவிஷனில் காட்டப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் ஒரு பெண்மணி தோன்றினார். தமது பழைய வாழ்க்கையைப் பற்றி புட்டு புட்டு வைத்தார். மண வாழ்வு, விவாகரத்து போன்ற விஷயங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்.

அவர் சொல்வதைக் கேட்கக் கேட்க மைக்கலுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

உடனே டெலிவிஷனை மூடி விட்டு பெரிய இரும்புக் கம்பி ஒன்றை எடுத்துக் கொண்டு அந்தப் பெண்மணியின் வீடு நோக்கி ஆவேசமாக ஓடினார்.

டெலிவிஷனில் தோன்றிய அதே பெண்மணி அப்போது வீட்டில் இருந்தார். இரும்புப் பொல்லால் ஓங்கித் தலையில் அடித்தார் மைக்கல். பெண்மணி மயங்கி விழுந்தார்.

நல்ல வேளையாக உயிராபத்து ஏற்படவில்லை. விஷயம் நீதிமன்றத்துக்கு வந்தது. குற்றத்தை ஒப்புக் கொண்டார் மைக்கல்.

மூன்று வருட ஒத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை நீதிமன்றம் அவருக்கு விதித்தது.

இந்த மனிதர் போய் எதற்காக யாரோ ஒரு பெண்மணியின் தலையில் இரும்புப் பொல்லால் அடிக்க வேண்டும் என்று மலைக்கிறீர்களா?

அந்தப் பெண்மணி வேறு யாருமல்லர். மைக்கலின் மாஜி மனைவியேயாவார். (ர)


## வளரும் பருவத்தில் தவறாது பருகவேண்டிய நெஸ்பிறே.






உலகெங்கிலும் தமது அன்புக் குழந்தைகளின் நலனில் அக்கறையுள்ள தாய்மார் நெஸ்பிறே பாலையே அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். நெஸ்பிறே உலகின் வளம் மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான, சத்துமிக்க பாலில் தயாரிக்கப்படுகின்றது. நெஸ்பிறே சர்வதேச தராதரங்களுக்கேற்ப மிகச் சுகாதாரமான முறையில் பொதிசெய்யப்படுகின்றது. பாலின் புரதச் சத்துகளும் விற்றமின்களும் அதில் நிறைந்துள்ளன.

உங்கள் பிள்ளையை நெஸ்பிறேயில் வளருங்கள். காலை, மாலை, பகல்... எவ்வேளையும்... பசியோ தாகமோ ஏற்படும் எல்லா நேரத்திலும் அவர்கள் நெஸ்பிறே பருகட்டும். நித்திரைகொள்ளும் முன்பும் நெஸ்பிறே கொடுங்கள். தினமும் ஓடியாடிச் சுறுசுறுப்பாக வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே சக்தியை வழங்குகின்றது. உங்கள் பிள்ளைகள் ஆசையோடு பருகி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்வதைக் கண்டு மகிழுங்கள். இன்றே உங்கள் பிள்ளைக்கு நெஸ்பிறே கொடுங்கள்.

400 கிராம் ரூ. 26/90 900 கிராம் ரூ. 98/25

Nestlé® ஒரு நெஸ்லே தயாரிப்பு

# நெஸ்பிறே

வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

Grant K & E 4790

அழகுக்கு மெருகூட்டும் அலங்கார நகைகளுக்கு
தொலைபேசி: 93435
ஆராதனைஸ்
ஜுவல்லர்ஸ்
459, 2 வது டிவிஷன்,
மருதானை, கொழும்பு — 10.

# சிந்தாமணி ஆரம்

இல. 690 CHINTAMANI MAGAZINE SECTION 6 — 2 — 1983

நவீன டிசைன்களில் தங்கப் பவுண் நகைகளுக்கு ஆராதனாஸ்
aradhanas
JEWELLERS
459, 2nd DIVISION MARADANA,
COLOMBO-10. DIAL: 93435.

## எலிகளை ஒழிப்பதற்கு வழியுண்டா?

வெளிநாடுகளில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் வருடம் தோறும் கோடிக் கணக்கான ரூபாவைச் செலவிட்டு வருகிறது. நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதி இதற்காக பயன்படுத்தப்படுகிறது.

இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கமாக நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பெரும் தொகை வெளிநாட்டுப் பணம் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு காண வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே இவ்வளவு பெரிய முயற்சிகளும்.

இப்படியான நேரத்தில் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி ஒன்று பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

கடந்த இரண்டு வருட காலத்தில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை எலிகள் தின்று தீர்த்து விட்டன என்பதே அச் செய்தி ஆகும்.

அதுவும் அரசாங்க களஞ்சியங்களிலேயே இந்த இழப்பு ஏற்பட்டிருப்பதாக அரசாங்க கணக்காய்வாளர் திணைக்களம் நடத்திய கணக்கெடுப்பில் இருந்து தெரிய வந்திருக்கிறது.

இப் பெரும் இழப்புக்கு எலிகள்தான் முற்றாகக் காரணம் என்ற தகவல் சரியாக இருக்கலாம் அல்லது தவறாகவும் இருக்கலாம்.

அரசாங்க களஞ்சியங்களிலும் கூட்டுறவுக் கடைகளிலும் உணவுப் பொருள்களை மோசடி செய்துவிட்டு எலிகள் மீது பழியைப் போடும் இரண்டு கால் எலிகளும் இல்லாமலில்லை.

எது எப்படி இருந்த போதிலும் நமது அன்றாட உணவில் பெரும் பகுதியை எலிகள் தீர்த்துக் கட்டி விடுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது.

எலிகளினால் பல்வேறு நோய்களும் ஏற்படுகின்றன. இதில் பிரதானமானது பிளேக் நோய் ஆகும்.

இந்த நோய் இன்று உலகத்தில் இருந்து ஓரளவுக்கு ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும் இதன் ஆபத்து முற்றாக நீங்கி விட்டது என்று கூற முடியாது.

அது மட்டும் அல்ல நோய்களை ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு காவிச் செல்லும் சாதனங்களாகவும் எலிகள் விளங்குகின்றன. ஆகவே மனிதனின் எதிரிகளின் பட்டியலில் எலிகளுக்கும் முக்கிய இடம் உண்டு.

இலங்கையில் மட்டும் அன்றி வெளிநாடுகளிலும் எலிகளின் தொல்லை இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால் அந்த நாடுகள் எலிகளை ஒழிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றன.

சில நாடுகளில் எலி ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. எலிகளை ஒழிப்பதற்காக விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. ஒரு தொகை எலிகளைப் பிடிப்போருக்கு இவ்வளவு பணம் என்ற திட்டமும் அமுல் செய்யப்படுகிறது.

ஆனால் இலங்கையைப் பொறுத்த அளவில் எலி ஒழிப்பில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

நுளம்பை ஒழிக்க அரசாங்கம் வருடா வருடம் லட்சக் கணக்கான ரூபாவை செலவிடுகிறது. அதே போன்று எலிகளை ஒழிக்கவும் அரசாங்கம் செலவைப் பொருட்படுத்தாமல் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எலி ஒழிப்பு மூலம் அரசாங்கம் இரு காரியங்களைச் சாதிக்க முடியும். ஒன்று உணவுப் பொருள் வீண் போவதைத் தவிர்க்கலாம். மற்றது அரசாங்க களஞ்சியங்களிலும் கூட்டுறவுக் கடைகளிலும் நிலவும் ஊழல்களை ஒழிக்கலாம்.

# பிறர் துன்பம் களைந்தால் பேரின்ப வாழ்வு கிட்டும்

## அல்லற்பட்டு அழுத மங்கை

## ஆனந்தமுற்ற சம்பவம்

— திருமுருக கிருபானந்த வாரியார் —

உலகத்திலே மக்கள் பல வகைகளிலும் பலப்பல கருத்து டையவர்களாகவே இருக்கிறார்கள். ஒருவர் விரும்புகின்ற உணவை மற்றொருவர் விரும்புவதில்லை. ஒருவர் விரும்புகின்ற பொருளை மற்றொருவர் விரும்புவதில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளில் அளவு கடந்த விருப்பம். இப்படியாக ஒருவர் மனம்போல் மற்றொருவர் இருப்பதில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் கூட, கருத்து வேற்றுமைகளுண்டு.

ஆனால் ஒரே ஒரு வகையில் மட்டும் யாருக்கும், எந்நாட்டவருக்கும், எக்குலத்தவருக்கும், எத்தகுதியினருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. எல்லோருக்கும் அந்த ஒன்றில் மட்டும் ஒற்றுமைப்பட்ட எண்ணமுண்டு. அது எது?

துன்பமின்றி இன்பமாக இருக்க வேண்டுமென்பது. இதில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. பறவைகளும், விலங்குகளும் இப்படியே எண்ணுகின்றன.

ஆனால், துன்பத்தைத் தொலைத்தவர்களும், இன்பத்தையடைந்தவர்களும் எங்கும் காண்பது அரிதாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் துன்பத்தை நீக்கவும், இன்பத்தையாக்கவும் வழிவகையின்னதென்று திட்டவட்டமாக அறிந்து கொள்ளாததே.

நாம் வயலில் என்ன விதை விதைக்கின்றோமோ, அதுவே விளைந்து வந்து நாம் உண்ணக் கூடியதாக அமைகின்றது. அது போல், மனதாலும், வாக்காலும், காயத்தாலும் பிற உயிர்களுக்கு நன்மை செய்வோமாயின், நாமும் துன்பமின்றி இன்பமாக வாழ முடியும்.

அங்ஙனமின்றிப் பிற உயிர்கட்கு மன, வாக்கு, காயங்களால் துன்பமே செய்வோமாயின், அவை அத்தனையும் நமக்கே வந்து சேரும்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்."
"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்"

என்பார் திருவள்ளுவர்.

நோயென்பதற்குத் துன்பமென்பது பொருள். ஆகவே, நாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்வோமாயின், நமக்கே துன்பத்தைச் செய்து கொண்டவர்களாக ஆகின்றோம். எனவே துன்பமின்றி வாழ விரும்புவோமாயின், நாம் பிற உயிர்கட்கு நிச்சயமாகத் துன்பஞ் செய்யக் கூடாது.

இனி உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமல் இருப்பதோடு அமைந்து விடக் கூடாது. இன்பமும் செய்ய வேண்டும். பிற உயிர்கட்கு இன்பஞ் செய்வோமாயின், அது நமக்கே இன்பமாக அமையும்.

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை"

என்கிறார் திருவள்ளுவர்.

ஆகவே எக்காலத்தும், தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணி அவைகளுக்கு வரும் இடையூற்றை நீக்கி நன்மைபுரிய வேண்டும்.

நம்முடன் பழகும் பசு, எருது, எருமை, ஆடு, கோழி முதலிய உயிர்கள் நமக்குப் பல வகையிலும் உதவி புரிகின்றன. எருது உழுவதற்கும், பசு பாலும், சாணமும் கொடுத்தும் பயன்படுகின்றன. ஆடுகள் கம்பளத்திற்கு ரோமமும் வயலுக்கு எருவும் தருகின்றது. கோழி மணிக் கூண்டில் அலாரம் வைத்தது போல் வைகறையில் நம்மைத் துயில் உணர்த்துகின்றது.

இங்ஙனமாக இந்தப் பிராணிகள் நமக்கு உதவி புரிகின்ற போது, அவைகளுக்கு நாம் செய்கின்ற உதவி என்ன என்பதைச் சிந்திக்கின்றோமா? உபகாரம் செய்யவில்லையானாலும், அபகாரமாவது செய்யாமலிருக்கின்றோமா?

கழுத்தில் புண் உள்ள மாட்டை, வண்டியில் கட்டி ஓட்டுவதும், ஓடுகின்ற மாட்டை, மேலும் வேகமாக ஓடவேண்டுமென்று இரும்பு முள்ளால் குத்துவதும், அளவுக்கு மேற்பட்ட சுமையை வண்டியில் இட்டு எருதுகளை இழுக்குமாறு இம்சிப்பதும், மாடுகளுக்குப் போதுமான புல்லும் தண்ணீரும் உணவுகளைக் கொடாமல் பட்டினி போடுவதும், எல்லையின்றி அவைகளுக்குத் தொல்லை கொடுத்து வேலை வாங்குவதும், கோழிகளைத் தலைகீழாகக் கொண்டு போவதும் கொடுமையிலும் கொடுமை.

இவைகளை நினைத்தால் கல்லும் கரையுமே! சிலர் மனம், கல்லினும் வலியதாக இக்கொடுமைகளை எவ்வாறு செய்யத் துணிகின்றதோ?

உயிர்களுக்கு நாம் செய்யும் துன்பம், செய்த அளவே நம்மை வந்து சாருமென்று எண்ணக் கூடாது. நாம் செய்யும் துன்பம் பன்மடங்காக அதிகரித்து வந்து சாரும். இச்சை போல் திரியும் பசுங்கிளியைப் பன்னிரண்டு நாள் கூட்டில் அடைத்த பாவத்தினால் மறு பிறப்பில் பன்னிரண்டாண்டு சிறைச் சாலையிலிருந்து, கோபன்ன (ராமதாஸர்) வேதனைக் கடலில் வீழ்ந்து துன்புற்றனர். இங்ஙனம் கருணையின்றிப் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தவர்கள் பலர், ஒன்றுக்குப் பன்மடங்காகத் துன்புற்றனர்.

அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்புசெயல் வேண்டும்
— இராமலிங்கர்.



திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்தார்கள். அப்போது வான்மழை சுருங்கி எங்கும் உணவுப் பொருள் அருகிப் பஞ்சம் பெருகியது. அதனைக் கண்ட இரு தவ சீலர்களும் இறைவனிடம் படிக்காசு பெற்று, பெரிய அளவில் உணவு தயாரித்து, பறைசாற்றி வறியார்க்கு முப்போதுந் தப்பாது உணவு அளித்தார்கள்.

திருமருகல் என்ற திருத்தலத்துக்கு ஞானப்பாலுண்ட ஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளினார். விடியற்காலை திருக்கோயிலுக்குச் செல்லுகின்றார். அங்கு ஒரு இளம் பெண் அழுது கொண்டிருந்தாள்.

தாலிப் படரக் கொழு கொம்பில்லாத தனிக் கொடி போல், அம்மடவரல் "ஓ" என்று வாய்விட்டுக் கதறிப் பதறிக் கண்ணீர் வடித்து, துடித்து, துன்னி அழுவதைக் கண்டார் ஞானசம்பந்தர். அவர், அறிவுடன் தொடர்பு கொண்டவர். ஞானம் என்றால் அறிவு. சம்பந்தம் – தொடர்பு கொள்வது. அறிவின் பயன் எது? பிற உயிர் படும் துன்பத்தைக் கண்டு கருணை செய்வது தான் அறிவினால் ஆகும் பயன்.

"அறிவினா னாகுவ துண்டோ, பிறிதின்நோய் தன்நோய்போல் போற்றாக் கடை"

என்கிறார் திருவள்ளுவர்.

ஆதரவு இன்றித் தன்னந்தனியாக ஒரு பெண்மணி அழுவதைக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இமயத்தின் சிகரத்தை எட்டுவதில்

## மனிதனின் தணியாத் தாகம்

— அ. ச. அருணாசலம் —

இமயமலை என்பது உலகிலேயே அதிக உயரமான மலை, ஹிமாலயம் என்று வட மொழியில் இதற்குப் பெயர். பிரிட்டிஷ் ஆட்சியின் பின்னர் எவரெஸ்ட் மலை என்று வழங்கப்படுகிறது.

இந்தியாவை பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் அங்கு நில அளவைப் பகுதி அதிபராயிருந்த சேர் ஜியார்ஜ் எவரெஸ்ட் என்பவர் இம்மலைச் சிகரத்தின் இருப்பை நிதானித்துக் குறிப்பிட்டார்.

அம்மலைச்சியின் உயரம் 29,0002 அடி எனவும் அவர் கணக்கிட்டுக் கூறினார். அதன் பின்புதான் இமயமலைக்கு எவரெஸ்ட் என்று அவர் பெயரை இட்டு அதுவே நிலைத்து விட்டது.

இம்மலையின் மேல் பகுதி பனிக் கட்டியினாலும், பனிக் குழம்பினாலும் ஆண்டு முழுவதும் சூழப்பட்டிருக்கும்.

ஆயினும் இந்திய யோகிகளுக்கும், முனிவர்களும் தமது யோக சக்தியினால் இமய மலையின் உச்சி வரை சென்று கைலாசத்தில் சிவபெருமானைத் தரிசித்து வந்தார்கள் என்று புராணேதிகாசங்களில் இருந்து தெரிய வருகிறது.

ஆனால் அவர்களுடைய புகைப்படக் கருவி பழுதடைந்து விட்டதால் படமெடுப்பது முற்றுப் பெறவில்லை. ஆயினும் மறுபடியும் பறந்து சென்று படமெடுப்பதற்கு அரசினிடம் அநுமதி கோரப்பட்டது. ஆனால் அநுமதி மறுக்கப்பட்டு விட்டது.

சிறிது நாட்களுக்குப் பின் கிளேட்ஸ் டேல் பிரபு தம் நண்பர்கள் மூவருடன் இரகசியமாகப் பறந்து போய் வியக்கத்தக்க பல அரிய காட்சிகளைப் படமெடுத்து வந்தார்.

பல்லாயிரம் ஆண்டு காலமாக ஒருவராலும் ஏறிச் செல்ல முடியாதிருந்ததெனினும், டைந்தனர். என்று சோவியத் செய்தி வாயிலாய்த் தெரிய வருகிறது. அப்போது அங்கு மூன்று கொடிகள் பறக்க விடப்பட்டன. அவை சோவியத் ஒன்றியம், நேபாளம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் கொடிகளாகும்.

உலகின் மூன்றாவது துருவம் எனப்படும் இம் மலைச்சிகரத்தில் சோவியத் மலையேறிகள் 112 பேர் மே மாதம் 4 ஆம் திகதி வரை சென்றார்கள். இவர்களில் 57 பேர் இடையிலேயே தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனினும் அவர்களில் மே மாதம் 9 ஆம் திகதி வரை 11 பேர் சேர்ந்து தொடர்ந்து ஆறு நாட்கள் தங்கியிருந்தனர். அவர்கள் பனிப் புலிகள் என்று அழைக்கப்பட்டனர்.

இந்த மலையேறிக் குழுவினர் தென் மேற்குப் பகுதியிலுள்ள கடினமான பாதையில், குறுகிய காலத்தில் சிகரத்தைச் சென்றடைந்தார்கள்.

ஒரே இரவில் இரு தடவைகள் எவரெஸ்ட் சிகரத்தில் புயல் வீசியடித்தது. இதற்கு இவர்கள் எதிர் நோக்கிய இன்னொரு வகையான சிக்கல் எவரெஸ்ட் பகுதியில் வழமைக்கு மாறாக இருந்த கடுமையான கால நிலையாகும்.

உறை பனி 40 பாகையிலிருந்தது, கடுமையான பனி வீழ்ச்சிகளும், புயல் காற்றும் இப் பிரதேசத்தில் அநுபவம் வாய்ந்த நேபாளிய மலையேறிகளுக்கே

(16 ஆம் பக்கம் பார்க்க)



இமயமலைத் தொடர்பின் அழகிய தோற்றம்

இது பனிக்குப் பாறை போன்ற தோற்றத்தையுடையது. அதன் குளிர் கடுமையானதாயிருந்த தால் மலையேறிகள் எவ்வளவு முயன்றும் எவராலும் அதன் மீது ஏறி வெற்றி பெற முடியவில்லை.

அதனால், 1933 ஆம் ஆண்டில் கிளேட்ஸ் டேல் பிரபுவின் தலைமையில் மூவர் அடங்கிய வான ஆராய்ச்சிக் குழு ஒன்று நிறுவப்பட்டு விமான மூலமாக ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அக்குழு ஏப்ரல் மாதத்தில் விமானத்தில் பறந்து சென்று அம்மலை உச்சியை நோட்டமிட்டது.

இது எல்லாமுயினும், பிற்காலத்தில் 1953 ஆம் ஆண்டில் தான் முதன் முதலாக மனிதர் இச் சிகரத்தைச் சென்றடைந்தனர் என்பது வரலாற்றில் பதிவாகி விட்டது.

நியூசீலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியும், நேபாளத்தைச் சேர்ந்த நோர்கே டென்சிங்கும் தான் அந்த முதலாவது மனிதர்கள். அதன்பின் 23 தரம் மலையேறும் குழுவினர் இச் சிகரத்தை அடைய முயன்றதாகத் தெரிய வருகிறது.

1982 மே மாதம் ரஷ்ய மலையேறும் குழுவினர் இச்சிகரத்தை வெற்றிகரமாகச் சென்று

முன்னர் சோவியத் மலையேறிகள் 7,600 மீட்டர் உயரத்திற்கு மேல் ஏறியதில்லை. எவரெஸ்ட் சிகரமோ 8,484 மீட்டர் உயரமானது.

இக்குழுவினர் சென்ற பாதையிலுள்ள சிக்கல்களுடன் மேலும் பல சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. எவ்விதமெனின் நேபாளிய சுமை தூக்கிகள் அடி வாரத்திலுள்ள முகாம் வரைக்கும் மட்டுமே 12 தொன் நிறையுள்ள சுமைகளைத் தூக்கி வந்தார்கள்.

இம்முகாம் 5,340 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

புது வருடத்தில் புது வகை!
மோல்டோவா
உங்கள் அபிமான சொக்கலேட் சுகபானம்
200 கிறும்ஸ் போத்தலில்.




அறிமுக விசேட விலை
ரூ.20/-
500 கிறும்ஸ் போத்தலிலும் கிடைக்கிறது.
ரூபா 41/-
மோல்டோவா
மொண்டே (உலக) தெரிவில் இரு வருடங்க ளுக்குத் தொடர்பாகத் தங்கப் பதக்கம் வென்றது.
அம்ஸ்ரடாம் 1981
லண்டன் 1982
இறக்குமதி, விநியோகம்
டார்லி பட்லர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
db
MASTERS DB 40/82

# ஒரு சேலை கைமாறுகிறது



மதிய வெயில். உடலெல்லாம் வியர்வை, படலையைத் திறக்கின்றேன். உள்ளம் "பகீர்" என்று பரிதவிக்கின்றது. எனக்காகக் காத்திருந்து என் தாகத்தை, ஓடி வந்து, தட்டிக் கொள்ளும் கமலினியைக் காணவில்லை. வழக்கமான அவளின் வரவேற்பு இல்லை. நெஞ்சை ஏதோ அமுக்குகின்றது. கண்கள் கலங்க வீட்டுக்குள் நுழைகின்றேன்.

வெறும் நிலத்தில் படுத்திருக்கிறாள் என் மனைவி. இந்த வெக்கைக்கு இதுதான் போதுமான படுக்கை. அவள் உள்ளத்தைச் சாந்தமாக்கும்... அந்த வெக்கைக்கு...?

அவளின் விழி ஓரங்களில் கண்ணீர் முத்துகள். கன்றிய முகமுடையவளே படுத்திருக்கின்றாள், நான் வந்ததை அவள் அவதானிக்கவில்லை.

"கவி!" என் அடிமனதிலிருந்து எழுந்த உயிர் வார்த்தை ஓசை எழுப்பாமலே பெரு மூச்சாகின்றது. அவளை எழுப்பாமலேயே வெளி விறாந்தையில் அமர்ந்து கொள்கின்றேன். மனைவிட்டகலாத அந்த உரையாடலை மீண்டும் உள்ளம் அசை போடுகின்றது.

"இந்தாங்க... நீங்க நம்ம கமலினியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

பிறக்க இருந்த எல்லாக் குழந்தைகளின் சக்தியையும் சேர்த்துத்தான்... ஒரே குழந்தையா கமலினி பிறந்திருக்காள். அதாலதான் அவள் இப்படியே சாமர்த்தியசாலியா இருக்காள்......"

"நான் அப்படி நினைக்கல்ல..."

"பின்ன எப்படி நினைக்கிறா?"

"இவள் மாதிரி ஒரு குழந்தை இதுக்கு முதலும் இந்த உலகத்தில பிறக்கல்ல... இனிமேலும் இப்பிடி ஒரு குழந்தை பிறக்காது"

"எதைக் கொண்டு இப்பிடி சொல்றே?"

"கமலினின்ர வடிவைக் கொண்டு தான் சொல்றன்..."

"உன்னை விடவா...?" என்று கேட்டபடியே அவளின் மடியில் சாய்கின்றேன். கவி வெட்கத்தால் நெளிந்து, எனக்கு இடமளிக்காமல் இயல்பான நாணம் காட்டுகின்றாள். நானும் அவளை விடுவதாக இல்லை.

"அப்பா..., சரியான குளப்படி, தக்கா பிள்ளை..." – வாசலில் விளையாடிக் கொண்டிருந்த கமலினி ஓடிவந்து, மழலையில் கூறுகின்றாள்.

"சரியா சொன்னடி ராசாத்தி. கொப்பர் சொன்னமாதிரி நீ சாமர்த்தியசாலியே தான் ..." ஓடி வந்தவளை ஒய்யாரமாக வாரியணைத்து, அவளுக்கு "இச்"

**– ரவிப்ரியா –**

"உன்னைப்போல் சாது இல்லை சாமர்த்தியசாலி......"

"இந்த ரண்டு வயசிலேயே உங்கு மதன் சாமர்த்தியசாலியா?"

"இனிமேல் நமக்கு குழந்தைப் பாக்கியம் இல்லேண்டு டாக்டர் சொன்ன ஞாபகம் இருக்கா...?"

"அதுக்கென்ன இப்ப...?"

"ஏன் சிணுங்கிற... நமக்கு

பதிக்கின்றாள் கவி. நான் [illegible] நிற்கின்றேன்.

கவியின் பிடியிலிருந்து நழுவி என்னிடம் நாசுக்காக வருகின்றாள் கமலினி. "அப்பா கோபமா?" – என்று கேட்டபடி என் முகத்தை நோட்டமிடுகின்றாள். நான் முறுவலிக்கிறேன். அவளே எனக்கு முத்திரை பதிக்கின்றாள்.

அந்த கலகலப்பான தனிவான காலங்கள் என் நெஞ்சை நெருடுகின்றன. கவியைத் திரும்பிப் பார்க்கின்றேன். அவள் இன்னும் எழவில்லை.

குசினிக்குள் செல்கின்றேன். காலையில் நான் கறியொன்றும் வாங்கிக் கொடுக்கவில்லை. நண்டு வாங்கிச் சமைத்து வைத்திருக்கின்றாள். தெருவில் வந்த சைக்கிள் வியாபாரியிடம் வாங்கியிருக்கின்றாள் போலும்.

கமலினிக்கு நண்டென்றால் உயிர். அந்த நினைவால் நிலை தடுமாறித்தான் நித்திரை செய்கின்றாளா கவி? நண்டுக்கறியென்றால் கமலினி என் மடியில் வந்து இருந்து விடுவாள். நண்டுக்காலை உடைத்து, கட்டிச் சதையாய், அவளுக்கு கொடுக்கக் கொடுக்க சாப்பிட்டுக் கொண்டே இருப்பாள். மூவரும் சாப்பிட்டு முடிய ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகும்.

சட்டிக்குள் தெரிந்த நண்டுக்கால் திடீரென உயிர் பெற்றது. என் குரல்வளையை நெருக்குவது போன்ற உணர்வு எனக்கு. மீண்டும் ஒரு வித விரக்தியோடு விறாந்தையில் அமர்கின்றேன்.

கவி இன்னும் விழிக்கவே இல்லை. விழியோரக் கண்ணீரும் காயவில்லை. இந்த புழுக்கமான நேரத்தில் இப்படி நித்திரை வருமா? ஒரு வேளை தலை தாங்காது......?

கவியை நெருங்கி நின்று நிதானிக்கின்றேன். தாழாத சோகத்தில் சங்கமத்தில்தான் அவள். ஏதும் [illegible]... நித்திரை குளிசை... எனக்குள் ஒரு சந்தேகம். அவள் முகத்தை குனிந்து முகர்கின்றேன். வித்தியாசமான மணமொன்றுமில்லை. அவளுடைய உஷ்ணமான மூச்சு... என் முகத்தோடு உறவாடுகின்றது. வீண் சந்தேகம் விடுபடுகின்றது. இப்பவும் அவள் எழுவதாக இல்லை.

இப்போது எனக்கு அதிருப்தி இல்லை. மீண்டும் விறாந்தையில் அமைதியாக அமர்கின்றேன்.

"சுகி? – நான் ஜீ. சி. ஈ ...பால் பண்ணின மேசன். அதாலதா ஏ லெவலுக்கு படிச்ச மேசன் எண்டு வெச்சுக் கொள்ளன். என்ர கமலினி "ஆர்க்கிடெக்ராக"த்தான் வரவேணும். அப்பிடி அவள் வந்தாத்தான் எனக்கு பெருமை..."

"இதில மட்டும் வாராதங்க. கமலினி ஒரு டாக்டராகத்தான் வர வேணும். அதுதான் என்ர ஆசை. நம்மட பகுதியில லேடி டாக்டர்மார் குறைவு. என்ரயின்ர பெறுவுக்கு... நான் வேணை... வேணை எண்டு சொல்ல நீங்க தானே அந்த "அப்போதிக்கரிய" கூட்டித்து வந்தீங்க. அதுவும் ஒரு இளம் பொடியன்.

"எனக்கு அந்த தாங்கொலாத பிரசவ வேதனையிலும் கூட வெட்கம்தான் என்னைப் பிடுங்கித் தின்று போட்டு, உங்களுக்கென்ன தெரியும் நான் பட்ட அவஸ்தை. அன்னைக்கே நினைச்சன் கடவுள் புண்ணியத்தால எனக்கு பிறக்கிறது பெட்டையா இருந்தா... டாக்டருக்குத்தான் படிப்பிக்கிற என்டு..."

"சரி தாயே உன் இஷ்டம். நான் குறுக்க வரல்ல..."

ஆனால் எங்களின் ஆசையில் விதி குறுக்கிட்டு விட்டது. அதால என் கவிகூட குற்றவாளியாகிக் கொண்டுதான் இருக்கின்றாள். சோர்ந்து கிடக்கும் அவளை அனுதாபத்தோடு அணுகுகின்றேன்.

"சுகி...!," — உருக்கமாக அவளருகே அமர்ந்து அழைக்கின்றேன்.

திடுக்கிட்டு விழித்து விட்டாள் கவி. கண்களை முந்தானையால் துடைத்தபடி எழுந்து நிற்கின்றாள். என்னைச் சந்தோஷப்படுத்துவதற்காக கஷ்டப்பட்டு புன்னகைக்கின்றாள். அது இயற்கையாக இல்லையே...

"வந்திற்றீங்களா? கன நேரமாவந்து? ..." — ஒருவித குற்ற உணர்வுக்கு முற்றாக ஆளானவள்போல் கேட்கின்றாள் கவி.

"இப்பதான் வந்த நான்..."

"சாப்பாடு எடுக்கட்டா?"

"சரி... முதல்ல முகத்தை கழுவித்து வா..." — கூறியபடி நானே அவளை கிணற்றடிக்கு அழைத்துச் செல்கின்றேன். முகம் கழுவி விட்டு இருவரும் குசினிக்குள் நுழைகின்றோம்.

ஏற்கனவே நான் குசினியைத் திறந்தபோது பூட்ட மறந்து விட்டேன் போலும். குசினிக்குள் நான் அமர்கின்றேன். கோப்பை கழுவி, அகப்பை எந்திவிட்டாள் கவி. "அளவா போடு போதும்" — அகப்பையைப் பிடித்து தடுக்கும்வரை சோற்றைப் போட்டுக் கொண்டே இருந்தாள்.

மரக்கறியை வைத்து விட்டு... சற்று தள்ளி இருந்த நண்டுக் கறிச் சட்டியை இழுக்கின்றாள் கவி. வெறும் சட்டிதான் இருந்த கலக்கத்தோடு என்னைப் பார்க்கின்றாள்

"முன்னரும் ஒரு நாள் இப்பிடித்தானே கவி... மத்தியானம் நாம சாப்பிட்டிற்று வைச்ச மிச்ச நண்டுக் கறியை ரகசியமா கமலினி சாப்பிட்டிற்று. அண்டு ராத்திரி நமக்கு கறி தந்தாள்...? இன்னைக்கு பகலிலயே விளையாட்டு விட்டிற்றாள்... கமலினியை இன்னைக்கு பிடிச்சு..." – நாக்கைக் கடித்துக் கொள்கிறேன்.

"இப்ப நம்மட கமலினி நம்மோடை இல்ல அத்தான்... இது பூனை..." — கவி ஒப்பாரியே வைத்து விட்டாள். அதற்கு நேரம் சாப்பிடத்தான் நேரமா? தண்ணீரால் வயிற்றை நிரப்பி... நானே ஒரு தாயாகி அவளை, வெளியே அழைத்து வருகின்றேன்.

நான் அவளுக்கு ஆறுதல் வழங்குகின்றேன். அதற்குள் கலங்கி கொட்டும் என் கண்களையும் கண்டுவிடக் கூடாதென்ற கவனம். என் அரவணைப்புக் கூட அவளுக்கு அனுசரணையாக இல்லை. கமலினியின் அரவணைப்பில் தான் எல்லாம் என்றிருந்தவள் அவள். அவளால் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடவே முடியவில்லை.

என் மடியில் அவளைத் தூங்க வைக்கின்றேன். அதற்குள் நானே தூங்கிவிட்டேன் போலும்.

"அத்தான்! இந்தாங்க தேத்தண்ணி குடியுங்க..." – என் மடியில் இருந்தவள் தேநீரோடை எப்படி வந்தாள்? தூங்க

## சிறுகதை

வைக்காமலே, தூங்கியதன் விளைவா இது. என்னும் கவியின் முகத்தில் அமைதி கொஞ்சம் தெரியுதே? முருகா...! இந்த அமைதியை நிலை பெறச் செய்வேன்.

"நீ குடிச்ச நீயா...?"

"நீங்க குடியுங்க... நானும் குடிப்பன்..."

"நீயும் எடுத்து வா..."

இருவரும் தேநீரைப் பருகுகின்றோம். கிளாசை கழுவி வைத்து விட்டு, அரிசி கழுவ ஆயத்தமாகின்றாள் கவி. "இப்ப என்ன அவசரம் கவி...!" வா கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருப்பம்"

பெண்மைக்கே உரிய அடக்கம் இலவிட்டு அடைக்கலம். அரிசியை வைத்து விட்டு வருகின்றாள். நானும் அறையுள் சென்று சேட் பொக்கற்றுக்குள் இருந்த காசை எடுத்து வருகின்றேன்.

"இந்தா கவி... இத எண்ணிப் பார்..."

"என்ன காசத்தான் இது?"

"வெள்ளைக்காசு!"

"எழுநூற்றைம்பது இருக்கு..." எண்ணி முடித்தபடி கூறுகின்றாள் கவி.

"வெள்ளம் வடிஞ்சி. வானமும் வெளிச்சி... எல்லாம் வழக்கத்துக்கு வந்திற்று... இனி நாமளும் எல்லாரையும் போல சந்தோஷமா இருக்க வேணும்..." அவளின் தலையை வருடியபடி கூறுகின்றேன்.

கவியின் முகபாவம் எனது கூற்றோடு ஒத்துப் போவதாகத் தெரியவில்லை. மௌனம் சாதிக்கின்றாள். நானே மீண்டும் தொடர்கிறேன்.

"இந்த காசில உனக்கொரு நல்ல சாறி எடுக்க வேணும். நாளைக்கு கல்முனைக்குப் போய் எடுப்பம்" என் ஆசையை வெளிப்படுத்துகின்றேன்.

"எனக்கு சாறி வேணும்... இருக்கிறது போதும்..."

"அப்ப... என்ன வேணும்"

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மந்திர அப்பிள் பழங்கள்

**மாஸ்டர் சிவலிங்கம்**

மூன்றாவது காலத்திலே இங்கிலாந்து நாட்டை மன்னர் ஒருவர் ஆண்டு வந்தார். அவ-



ருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர்.

ஒருநாள் அந்த அரசர் கடும் நோய் காரணமாக படுக்கையிலே விழுந்து விட்டார்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்த வைத்தியர்கள் பல வித வைத்தியங்களைச் செய்தனர். ஆனால் பலன் ஏற்படவில்லை.

"ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கடலின் மத்தியிலிருக்கும் தீவில் உள்ள பயங்கர இராட்சதன் மெல்லனாவின் அரண்மனைத் தோட்டத்திலுள்ள தங்க அப்பிள் பழங்களைப் பறித்து வந்தால் அரசரின் நோயைக் குணமாக்க முடியும்" என்று கூறினார் வயோதிப வைத்தியர் ஒருவர்.

அந்த அதிசய அப்பிள் பழங்களைக் கொண்டு வருவதற்கு

## சிறுவர் சிந்தாமணி

யாரை அனுப்புவது என்று புரியாது அமைச்சர்கள் திணறிக் கொண்டிருந்தனர். அப்போது......!

"நாங்கள் மூவரும் சென்று அந்த அதிசய அப்பிள் பழங்களைக் கொண்டு வருகிறோம்" என்று கூறிவிட்டு தங்கள் குதிரைகளில் புறப்பட்டுச் சென்றனர் அரசரின் புதல்வர்களான மெல்லைடன், ஒலிவர், ஜாக் ஆகியோர்.

மூவரும் அந்த நாட்டின் எல்லையை அடைந்த போது பிரதான பாதை மூன்றாகப் பிரிந்து மூன்று திசைகளில் செல்வதைக் கண்டு திகைப்புற்றனர்.

சிறிது நேர சிந்தனையின் பின்பு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாதை மூலம் பயணத்தை மேற்கொள்வது என்றும், சரியாக ஒரு மாதத்தின் பின்பு மூவரும் நாட்டின் எல்லையில் சந்தித்த பின்பு நாடு திரும்புவது என்றும் முடிவு கட்டினர்.

அதன்படி மூத்த இளவரசனை மெல்லைடன் வடக்குப் பாதையிலும், இரண்டாவது இளவரசனை ஒலிவர் தெற்குப் பாதையிலும், மூன்றாவது இளவரசனை ஜாக் கிழக்குப் பாதையிலும் பயணத்தை மேற்கொண்டனர்.

சற்றும் ஓய்வெடுத்துக் கொள்ளாது தொடர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்த ஜாக், மாலை வேளையில் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த ஒரு குடிசையை அடைந்தான்.

குடிசை வாசலிலே பயங்கரத் தோற்றமுடைய கிழவர் ஒருவர் குந்திக் கொண்டிருந்தார்.

"தாத்தா! இரவைக்கு நான் இங்கு தங்கிச் செல்லலாமா?," என்று கேட்டான் ஜாக்.

"இளவரசே! தாராளமாக நீ தங்கிச் செல்லலாம் - ஆனால் இரவைக்குத் தூங்கும் போது பயங்கரப் பாம்பு ஒன்று அடிக்கடி கட்டலில் ஏறி பயமுறுத்தும்.

"நீ பயந்து கத்தி விடக் கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். பயந்து கத்தினால் நீயும் அந்தப் பாம்பைப் போல உருமாறிவிடுவாய்" என்றார் அந்த மர்மக் கிழவர்.

"தாத்தா! நான் பாம்பைக் கண்டு அஞ்சி அலற மாட்டேன், தைரியமாக இருப்பேன்" என்றான் இளவரசன் ஜாக்.

"சரி, சரி...... உள்ளே வந்து சாப்பிட்டு விட்டு அந்தக் கட்டிலிலே படுத்துத் தூங்கு, உனது குதிரையை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றார் கிழவர்.

கிழவர் அளித்த உணவைச் சாப்பிட்டு விட்டு, உடையை மாற்றிக் கொண்டு அங்கு காணப்பட்ட கட்டிலிலே படுத்துக் கொண்டான் ஜாக். சிறிது நேரத்தில்...!

பயங்கரமாகச் சீறியபடி மலைப்பாம்பு ஒன்று ஜாக் படுத்திருந்த கட்டிலிலே ஏறிக் கொண்டிருந்தது.

ஜாக்கை இனந் தெரியாத ஒரு வித பயம் பற்றிக் கொண்டது. என்றாலும் கண்களை மூடியபடி அசையாது படுத்தான்.

அப்படி அவன் படுத்திருந்த போது அந்த மலைப்பாம்பு கட்டிலைச் சுற்றியபடி அவனையே பார்த்தபடியிருந்தது. ஜாக் கடவுளைப் பிரார்த்தித்தபடியே யிருந்தான்.

அதிகாலை வேளையில் அந்தப் பாம்பு எங்கோ சென்று மறைந்து விட்டது. அதன் பின்பு தான் ஜாக் நிம்மதியாக மூச்சு விட்டான்.

"இளவரசே! நீ உண்மையில் மகா வீரன்தான். பயங்கரப் பாம்பை பக்கத்திலே கண்டும் சத்தமிடாமல் இருந்து விட்டாயே... உனக்கு எனது பாராட்டுக்கள்.

"இங்கிருந்து சுமார் இரு நூறு மைல் தொலைவில் எனது அண்ணன் இருக்கிறார். அங்கு சென்றால் தங்க மாம்பழம் பெறு-



வதற்குரிய வழிவகைகளைச் சொல்லித் தருவார். உனது குதிரையை இங்கு விட்டுவிட்டு, எனது குதிரையில் ஏறிச் செல். அது உன்னை எனது அண்ணனின் குடிசைக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடும்" என்றார் கிழவர்.

ஜாக் காலைக் கடன்களை முடித்து, உணவருந்திய பின் கிழவரின் குதிரையிலே புறப்பட்டான். அன்று மாலை......!

காட்டின் மத்தியிலே காணப்பட்ட குடிசை ஒன்றின் முன்

## இங்கிலாந்து நாட்டுக் கதை

போய் நின்றது ஜாக் சவாரி செய்த குதிரை.

"அடடே! எனது தம்பி அனுப்பி வைத்தானா...? வா! வா!!" என்று ஜாக்கை வரவேற்றார், கோர உருவமுடைய கிழவர் ஒருவர்.

அந்தக் கிழவரைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அந்தக் கிழவருடைய கோரப்பற்கள் வாய்க்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தன.

"இளவரசனே! இரவைக்கு இங்கு நீ தூங்கும் போது உன் மீது பாம்புகளும், தேள்களும், குளவிகளும் மற்றும் பலவிதப் பயங்கர ஜந்துக்களும் நடமாடிக் கொண்டேயிருக்கும். நீ தைரியமாகப் படுக்க வேண்டும். பயந்து சத்தமிட்டால் உடனடியாக ஒரு பாம்பாகவோ தேளாகவோ மாறிவிடுவாய். ஜாக்கிரதை!" என்று எச்சரித்தார் அந்தக் கிழவர்.

கிழவர் சுட்டிக் காட்டிய கட்டிலிலே படுத்துக் கொண்டான் ஜாக்.

சற்று நேரத்தில் பலவித விஷ ஜந்துக்கள் ஜாக் படுத்திருந்த கட்டிலில் அங்குமிங்கும் ஊர்ந்து கொண்டிருந்தன.

கண்களை இறுக்கி மூடியபடி படுத்திருந்தான் ஜாக். நடு இரவு வேளையில் வித்திரமான ஒலி கேட்டு மெதுவாகக் கண்களைத் திறந்தான் ஜாக். அடுத்த கணம்......!

அவனுடைய உடல் "கிடுகிடு" என நடுங்க ஆரம்பித்து விட்டது. அவன் கண்ட பயங்கரக் காட்சி என்ன தெரியுமா?

(தொடரும்)

# பொழுது போக்கு



தம்பி, தங்கைகளே! மேலே உள்ள இரு படங்களுக்கும் இடையில் சில வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



தோளில் இதழ் பதித்து தன் அன்பை வெளியிடத் துடிக்கும் கார்த்திக் மீது ராதாவுக்கு என்ன கோபம்? படம்: "ஒரு கை பார்ப்போம்!" (ஜ—10)



உடல் பருத்து விட்டால் பட உலகில் சான்ஸ் படுத்துவிடும் என்று மனேசித்ராவுக்கு அறிவுரை கூறுகிறாரா ரகுவரன்? படம்: "ஒரு ஓடை நதியாகிறது." (ஜ-10)

# என்னை ஏமாற்றிய சுதாகரை சும்மா விட மாட்டேன்

## ஜெயசித்திரா பேட்டி

"நடிகர் சுதாகர் என்னை காதலித்தார். இப்போது என்னை கைவிட்டுவிட்டு வேறு மணம் செய்து கொண்டார். அவரை நான் சும்மா விடப்போவது இல்லை" என்று நடிகை ஜெயசித்ரா கூறினர்.

நடிகர் சுதாகரும் நடிகை ஜெயசித்ராவும் காதலித்து வருவதாகவும் இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி வந்தன.

இப்போது சுதாகர் "திடீர்" என்று வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார். மணப் பெண்ணின் பெயர் ஜெயந்தி.

ஆந்திர மாநிலம் நெல்லூரைச் சேர்ந்த ஜெயந்தி, பி. ஏ. இறுதி ஆண்டு படிக்கும் மாணவி. 19 வயதான இவருக்கும் சுதாகருக்கும் கடந்த 9 ஆந் திகதி இரவு விஜயவாடாவில் உள்ள கனக துர்க்கா கோவிலில் திருமணம் நடைபெற்றது.

சுதாகருடன் தனக்குள்ள தொடர்பு பற்றி நடிகை ஜெயசித்ரா விவரித்து உள்ளார். அவர் கூறி இருப்பதாவது:—

முதன் முதலில் ஒரு தெலுங்கு பட செட்டில் ஒரு ரோஜாப் பூவுடன் சுதாகர் என்னைச் சந்தித்தார். "நான் உங்கள் ரசிகன்" என்று சொல்லிக் கொண்டு என்னிடம் அறிமுகமானர்.

அன்றில் இருந்து நான் எங்கு இருந்தாலும் வந்து அவர் ரோஜாப்பூ கொடுப்பார்.

அப்படியே வளர்ந்த எங்கள் நட்பு காதலாயிற்று. தாம்பத்ய சம்பந்தமாயிற்று.

ஆனல் "திடீர்" என்று அவர் என்னை தட்டிக் கழிக்க எண்ணினர். அவரோடு நான் வாழ வேண்டுமானல் அவருக்கு நான் ரூ. 2½ லட்சம் தர வேண்டும் என்று அவர் கேட்டார்.

என்னுடன் நீங்கள் வாழ்வதாக இருந்தால் என் சொத்துக்கள் அனைத்தும் உங்களுக்குத்தானே? 2½ லட்சம் என்ன பெரிய தொகையா? என் வீட்டில் உள்ள பர்னிச்சர்களே 5 லட்சம் ரூபாய் பெறுமே என்று நான் சொன்னேன்.

எங்கள் உறவு விட்டுப் போகக் கூடியது அல்ல. என்னை சந்திக்க அவர் மறுத்தாலும் என்னைப் பிரிந்து அவரால் இருக்க முடியாது.

நானும் அவரை விடப் போவதில்லை. என்னை ஏமாற்ற முடியாது. இரண்டில் ஒன்று பார்க்காமல் விடமாட்டேன்.

இவ்வாறு ஜெயசித்ரா கூறியுள்ளார்.

சமீபத்தில் சுதாகர் தனது காரை ஜெயசித்ரா கடத்திச் சென்று விட்டதாக பொலீஸில் புகார் செய்திருந்தார். அந்தக் காரை சுதாகருக்கு நான்தான் வாங்கிக் கொடுத்தேன் என்று பொலீசில் ஜெயசித்ரா விளக்கமளித்திருந்தார்.

இந்த விவகாரம், வெளிப்படையாக அடிபடத் தொடங்கியதும் சுதாகர் குடும்பத்தினர் இரவோடு இரவாக தி. நகர் மூசாகேட் தெருவில் உள்ள வீட்டை காலி செய்துவிட்டு. அபிபுல்லா சாலையில் உள்ள ஒரு வீட்டுக்கு குடி போய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இப்போது சுதாகர், கல்லூரி மாணவியை திடீர் திருமணம் செய்து கொண்டு தேன் நிலவுக்கு காஷ்மீர் போய் இருக்கிறார். 10 நாட்கள் அங்கு தேன் நிலவு அனுபவிக்கப் போவதாக சுதாகர் அறிவித்துள்ளார்.

சுதாகர் பி. ஏ. பட்டம் பெற்றவர். இவரது சொந்த ஊர் ஆந்திர மாநிலம் சித்தூர். தந்தை பெயர் ஜி. ஜே. ராஜு. தாய் பெயர் கிருஷ்ணவேணி.

இவரது தந்தை ராஜு, ஆந்திராவில் டெப்டி கலெக்டராக பணி புரிந்து ஓய்வு பெற்றவர். சுதாகருடன் பிறந்தவர்கள் 6 சகோதரர்கள். சுதாகர்தான் கடைசி மகன். (ஜ-10)



ராஜலட்சுமியின் கயல் விழிப் பார்வையில் மதிமயங்கி தன் அருமை மனைவியையே மறந்து விடும் தில் ஜெகுமாருக்கு! படம்: "என் அருமை மனைவி". (ஜ-10)

# கதை எழுதிய சிவசந்திரனுக்கு சான்ஸ் இல்லை

ஏ. என். மூவிஸ் தயாரிக்கும் படம் "தொட்டால் பூ மலரும்" அஜந்தா நவீன்சந்தர், கே. அரிபுத்திரன் தயாரிக்கும் இந்த படத்தின் பூஜையும், பாடல் பதிவும் சமீபத்தில் நடந்தது. மணிவண்ணன் டைரக்ட் செய்கிறர்.

இளையராஜா இசையமைப்பில் ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டது.

"தொட்டால் பூ மலரும்" நடிகர் சிவசந்திரன் எழுதிய கதை. படத்தின் பூஜை அழைப்பிதழில் கதை: சிவசந்திரன் என்றும் குறிப்பிடவில்லை.

இந்த படத்தில் சிவசந்திரன் நடிக்க விரும்பினர். அந்த "சான்சும்" கிடைக்கவில்லை.

மோகன் கதாநாயகனை நடிக்கும் இந்த படத்தில் சிவசந்திரன் நடிக்க ஆசைப்பட்ட கதாபாத்திரத்தில் சந்திரசேகர் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறர்.

இது சிவசந்திரனுக்கு ஆத்திரமூட்டி உள்ளது. "நான் நடிப்பதாக இருந்தால்தான் கதையை தரமுடியும் என்று முன்பே திட்டவட்டமாக கூறி இருந்தேன். கடைசியில் நான் ஏமாற்றப்பட்டு இருக்கிறேன். கதை என்னுடையது என்றும் விளம்பரத்தில் குறிப்பிடவில்லை.

அதனல் இந்த விஷயத்தை சும்மா விடப் போவதில்லை. விவகாரமாக்கப் போகிறேன் என்று சிவசந்திரன் கூறினர்.

அவர் என்ன செய்யப் போகிறர் என்று பொறுத்திருந்து பார்ப்போம். (ஜ—10)



என்ன இங்கே தகராறு? வம்பு செய்ய வந்த ராதா – லலிதா, ரஜனியிடம் சரணடைந்த காரணம் என்ன? தகராறைத் தீர்க்க உதவ வேண்டிய ஜெய் மௌனமாக நிற்பது ஏன்? இத்தனை விஞக்களுக்கும் விடை காண "துடிக்கும் கரங்கள்!," வரும்வரை காத்திருங்கள். (ஜ—10)

## கந்தன் பெருமையை விளக்கும் மற்றுமொரு படம்

திருத்தணி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை ஆகிய இடங்களில் உள்ள முருகனின் ஆலயங்களை அறுபடை வீடு என அழைப்பது உண்டு.

இந்த அறுபடை வீடுகளில் புராண வரலாறு பற்றி விளக்கும் சினிமா படங்கள் பல வந்தன. வந்து கொண்டும் இருக்கின்றன.

கந்தனின் அருமை பெருமைகளை விளக்கும் படம் ஒன்று உருவாகிறது. மகேஸ்வரி பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தின் பெயர், "கந்தனைக் காணவா".

ஜெய்சங்கர், ராஜேஷ், ராஜீவ், பிரபு, ரகுவரன், சக்கரவர்த்தி, வி. எஸ். ராகவன், செந்தாமரை, ஆர். எஸ். மனேகர், சங்கிலி முருகன், நீ. சீனிவாசன், கவுண்டமணி, கே. ஆர். விஜயா, லலிதா, சத்தியகலா, மனேரமா, எம். என். ராஜம், மிஸ் சுமித்ரா, ஜெயமாலினி, சுவர்ணமுகி, அனுராதா ஆகியோர் நடிக்கிறர்கள்.

திரைக்கதை, வசனம், பாடல் இரா. பழனிசாமி எழுத, வி. தட்சிணமூர்த்தி இசை அமைக்க, எச். எஸ். வேணு ஒளிப்பதிவு செய்ய, கே. எம். சுப்பையா டைரக்ட் செய்கிறர்.

படத் தொடக்க விழா பரணி படப்பிடிப்பு நிலைய ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது. (ஜ-10)

# கோடம்பாக்கம் டயரி

வசூலில் பெரும் வெற்றிபெற்று சாதனை புரிந்து கொண்டிருக்கிறுள், "சகலகலாவல்லவன்" இதை டைரக்ட் செய்த எஸ். பி. முத்துராமனே அதுபற்றி வாயே திறப்பதில்லை. ஒரு படம் ஏதோ 4 வாரம் ஓடினல் போதும் அதை டைரக்ட் செய்தவர் ஆகா... ஓகோ... என்று அலட்டிக் கொள்ளும் போது அடக்கமாகவே இருக்கிறர், முத்துராமன். இன்றைய சினிமா உலகில் இது அபூர்வ விஷயமே!

★

"இளமகள்" படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட சுமலதா அந்தப் படத் தயாரிப்பாளருக்கு தேவைக்கு ஏற்ப நடக்கவில்லையாம். அதனல் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இப்போது ராஜலட்சுமியை கதாநாயகியாகப் போட்டுள்ளனர். இவர் எல்லாவற்றுக்கும் இசைந்து போவரோ? (ஜ-10)

## சிலுக்குக்கு போட்டியாக நடிகை ராணி

சிலுக்குக்கு போட்டியாக ஒரு நடிகை தோன்றியிருக்கிறர். அவர் பெயர் ராணி. ஆந்திராவில் நடனமாடிவரும் இவர் வேறு யாருமல்ல.

"சபாஷ் மீன" கதாநாயகி மாலினியின் சொந்த அக்கா மகள்தான்.

மேஜர் சுந்தரராஜன், தான் இயக்கி வரும் "அம்மா இருக்கா" படத்தில் கவர்ச்சி வேடத்தில் இவரை அறிமுகப்படுத்தப் போகிறர்.

இப்படத்தின் படப்பிடிப்பு தர்சமயம் மேட்டுப் பாளையத்திற்கு அருகில் உள்ள பாலவாக்கத்தில் நடைபெற்று வருகிறது. (ஜ-10)

# தேவர் படத்தில் கமல், ரஜனிக்கு கௌரவ வேடம்

அதிசயப் பிறவிகள் வெற்றிப் படத்தை தயாரித்த தேவர் பிலிம்ஸ் இப்போது "தாய் வீடு" என்னும் படத்தை தயாரித்து வருகிறது.

இதில் ரஜனிகாந்துடன் இந்தி நடிகை அனிதா ராஜ் நடிக்கிறர்.

அடுத்து "சஷ்டி விரதம்" என்னும் பக்திப் படத்தை தேவர் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

இதில் கதாநாயகனக சிவகுமார் நடிக்கிறர். கதாநாயகி பூர்ணிமா ஜெயராம். மற்றும் தேங்காய் சீனிவாசன், சூர்த்தி, மனேரமா, சிலுக்கு சுமித்ரா ஆகியோர் நடிக்கிறர்கள்.

இந்தப் படத்தில் ரஜனிகாந்த் கௌரவ வேடத்தில் நடிக்கிறர்.

கமலஹாசனையும் கௌரவ வேடத்தில் நடிக்கும்படி தேவர் பிலிம்ஸ் கேட்டிருக்கிறது. அதற்கு கமல் சம்மதம் தெரிவித்துள்ளார்.

சஷ்டி விரதம் கதை வசனத்தை தூயவன் எழுதுகிறர். சங்கர்-கணேஷ் இசையமைக்கிறர்கள், ராமமூர்த்தி ஒளிப்பதிவு செய்ய, ஆர். தியாகராஜன் டைரக்ட் செய்கிறர். (ஜ-10)

# சினி வாசகர் கருத்துகள்

### சிலுக்கு சீஸன்

சிலுக்கு சீஸன் தமிழ்ப்பட வுலகில் மட்டுமல்ல; சிந்தாமணி சினிமாவிலும் கொடிகட்டிப் பறக்கிறது என்பதை ஒவ்வொரு வாரச் சிந்தாமணியும் சித்திரிக்கிறது. (செல்வி கே. அஞ்சனி, மாத்தளை.)

### தாங்காதே

சுமிதா, நீயோ சிலுக்கு. ஏறு தெம்மா தூணில். வழுக்கி விழுந்தால் உன் தள தள உடல் தாங்காதம்மா. (என். ஜெய்கன், திருமலை.)

### தவிக்கிறதே

படரக் கொம்பின்றித் தவிக்கும் சிலுக்குக் கொடி, பளிங்குத் தூணில் படர முற்பட்டும் முடியாத நிலையில் காட்சியளிக்கும் கவர்ச்சியிலும், ஒரு மகிழ்ச்சி தெரியத்தான் செய்கிறது. (ஜி. ரகு, யாழ்ப்பாணம்.)

### நடிக்கட்டும்

துள்ளாட்டம் போடும் சிலுக்கெனும் புள்ளிமான் தள்ளாட்டம் போடும் காலமொன்றும் வரத்தான் போகிறது. அதுவரை துடிக்கும் வாலிபத்தை ஜாலியாகக் காட்டி நடிக்கட்டுமே. (எஸ். பரஞ்சோதி, கிளிநொச்சி.)

### பரமானந்தம்

சிலுக்கின் அங்கங்களின் அழகும் ஆடத் தொடங்கி விட்டால் பார்க்கும் ரசிகர்களுக்குப் பரமானந்தம்தான். (சி. விஜே, சாவகச்சேரி.)

### சிங்காரம்

துடிக்கும் வாலிபம் எப்படி இருக்கும் என்பதை சிலுக்கின் சிங்காரத் தோற்றம் கண்டாலே போதுமே. போதை தலைக்கேறி விடுமே. (ஜி. ரமேஷ், கண்டி.)

### நிர்வாணமா

இரவு நேரம் உடற் பயிற்சிக்காக ஓடும் கமலஹாசனை, நிர்வாணமாக ஓடினர் என்று வதந்தி பரப்பியவர்களை ஓட ஓட விரட்ட வேண்டும். (எம். எம். ரனைத், பாணந்துறை.)

### இது தகுமா?

"கமல் நிர்வாணமாக ஓடினரா?" என்று கொச்சை மொழியில் பச்சையாக எழுதி தரம் தாழ்ந்து விட்டீர்களே. இது தகுமா? (ம. நகுலன், யாழ்ப்பாணம்).

### இன்பத் தேன்

குள்ளக்குடியின் இசையமைப்பில் தோடி ராகம் பாடல் வடிவம் பெற்று விட்டால் பிறகு கேட்கவா வேண்டும். இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே யாகத்தானிருக்க முடியும். (ந. செல்லையா, கன்னுகம்.)

### நடிகரின் ஆவி

"டைரக்டர் ஐ. வி. சசியின் வீட்டில் நடிகரின் ஆவி நடமாட்டம்" நிஜமுள் நல்ல சுவையாகத்தானிருந்தது. நல்லதொரு சஸ்பென்ஸ் தகவலில் சினிமாச் செய்தி தர சிந்தாமணி சினிமாவால் மட்டுமே முடியும். (என். எச். மொகட், புதுக்கோட்டை.)

### எதிர் – புதிர்

ரஜனி — ராதா அணைப்பும், சிவகுமார் — சரிதா அணைப்பும் எதிரும் புதிருமாக அல்லவா இருந்தது. (எம். ஏ. கிருஷ்ணன், தலவாக்கொல்லை).

### நல்ல போஸ்

பாயும் புலி ரஜனியிடம் பெண் மான் ஒன்று அகப்பட்ட கோலத்திலல்லவா ராதாவின் போஸ் இருந்தது. ரஜனி பாடு நல்ல வேட்டைதான். (கா. சுதர்ஸன், பூண்டுலோயா.)

### சபாஷ் சரிதா

நடிப்பில் தனிக்கொடி நாட்டி வரும் சரிதாவின் நடிப்பு, தமிழ் சினிமா ரசிகர்களை எல்லாம் ஆட்கொண்டு வருகிறதென்பதற்கு அவரது துடிப்பான நடிப்பே சான்றுகும். (செல்வி. ப. பிரமீளா, இரத்தினபுரி.)

### பாராட்டு

பெண் ரசிகைகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற தன்மை தெரிந்த சிவகுமாரின் செயல் உண்மையிலேயே பாராட்டத்தக்கது தான். (க. ஜெமீல், கம்பளை)

### "பரு"வம்!

பெண்களுக்கு முகத்தில் பரு வருவதற்குப் பருவம் தான் காரணம் என்பதை விஜயசாந்தியின் கட்டழகுத் தோற்றமே வெட்ட வெளிச்சமாக்கியது. (தீ. ரங்கா, மாளிகாவத்தை.)



இது என்ன புதுமையான போட்டி? யார் முதலில் கப் அண்ட் சாஸரை கீழே போட்டு உடைப்பது என்பது தான் போட்டியோ? அப்படியானால் ஜெயிப்பவர் யார்? "என்னைப் பார் என் அழகைப் பார்" என்று "போஸ்" தருபவர்கள்: சிலுக்கு ஸ்மிதா, ஜெயமாலினி, ஜோதிலட்சுமி. (ஐ—10)

## "நீதிபதி"யை அடுத்து "சட்டம்"

பாலாஜி அளிக்க சுஜாதா சினி ஆர்ட்ஸ் பட நிறுவனம் தயாரிக்கும் படத்துக்கு "சட்டம்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாலாஜி அளிக்க சுரேஷ் ஆர்ட்ஸ் இப்போது சிவாஜி கணேசன் நடிக்க "நீதிபதி" என்ற படத்தை உருவாக்கி உள்ளது.

இதனை அடுத்து "நீதிபதி" திரைக்கு வந்த கையோடு பாலாஜி அளிக்க சுஜாதா சினி ஆர்ட்ஸ் படநிறுவனம் கமலஹாசன் நடிக்க, "சட்டம்" என்ற படத்தைத் தயாரிக்கிறது.

ஜெய்சங்கர், விஜயகுமார், பாலாஜி, சரத்பாபு, ஒய் ஜி. மகேந்திரன், மாதவி, மனோரமா, சத்யகலா நடிக்கிறார்கள். பிரமாண்டமான படைப்பாக இது உருவாகும்.

"சட்டம்" படத்தின் இசையை கங்கை அமரன் அமைக்கிறார். வசனம் ஏ. எல். நாராயணன். டைரக்ஷன் ஆர். கிருஷ்ண மூர்த்தி. (ஐ—10)

## "இன்று முதல்" தயாராகிறது

பொன்னியம்மா பிலிம்ஸார் "இன்று முதல்" என்னும் புதிய படத்தை தயாரிக்கவிருக்கிறார்கள்.

ஜெயராஜ், அர்ஜுன், அசோக், பம்பாய்பாபு, ஜகீர், முனீர், விஜி, ராக்கட் ராமநாதன், மணி, ஜெயமாலா, சூரியா, சுரேகா, தேவி ஆகிய புதுமுகங்கள் நடிக்கும் இப்படத்தின் கதையை சுப்பிரமணியம் எழுதித் தயாரிக்கிறார்.

தேவி பிரசாத் ஒளிப்பதிவு செய்ய, ஜோதி மௌனசீலவரய்யா டைரக்ட் செய்கிறார். (ஐ—10)

# பழைய நாயக-நாயகி பெயரில் ஸ்ரீதர் புதியபடம்

டைரக்டர் ஸ்ரீதர் வழங்கும் சித்ராலயாவின் "ஒரு ஓடை நதியாகிறது" வேகமாக வளர்ந்து வருகிறது.

வெள்ளி விழா படமான கல்யாணப் பரிசு கதாநாயகன் – கதாநாயகி பெயர்களையே "ஒரு ஓடை நதியாகிறது" படக் கதாநாயகன், கதாநாயகிக்கும் ஸ்ரீதர் சூட்டியுள்ளார். பாஸ்கர் — வசந்தி ஆகியவையே அந்த அதிர்ஷ்டப் பெயர்கள்.

புதுமுகம், அறிமுகம் இல்லாத ஸ்ரீதர் படமா? "ஒரு ஓடை நதியாகிறது" மூலம், ஏழாவது படிக்கும் சிறுவன் ரமேஷை, பட உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறார், ஸ்ரீதர். பள்ளியில் பாரதியார் வேடத்தில் நடித்த மறுநாளே படத்தில் நடிக்க அழைப்பு.

பணக்கார வீட்டு பேரப்பிள்ளையாக நடிக்க சுட்டிகையான சிறுவனை ஸ்ரீதர் தேடி அலைந்த போது கண்டு பிடிக்கப்பட்டவன்தான் மாஸ்டர் ரமேஷ்.

பாடல் காட்சியைப் படமாக்குவதும், பஞ்சாமிர்தம் சாப்பிடுவதும் ஸ்ரீதருக்கு ஒன்றே. "என் தேகம் அமுதம் மார்கழி ராத்திரி பிறவது பாவம்" பாடலுக்கான காட்சி முழுவதையும் சிருங்கார ரசம் சொட்ட சொட்ட படுக்கை அறையிலே படமாக்கி முடித்தார் ஸ்ரீதர்.

இந்த படுக்கை அறை காட்சியில் மனோசித்ராவின் பருவ அழகோடு பல கோணங்களில் கேமராவை விளையாட விட்டுப் படமாக்கினர், ஒளிப்பதிவாளர் திவாரி.

இளிக்கும் இளமையில் இரண்டறக் கலந்து மனோசித்ராவுடன் ஒட்டி உறவாடி கிறுகிறுப்பூட்டும் வகையில் நடித்தார் ரகுவரன்.

"தென்றல் என்னை முத்தமிட்டது" என்ற பாடல் காட்சி மகாபலிபுரத்தில் படமாக்கப்பட்டது. காலை 7 மணிக்கு அங்கே படப்பிடிப்பு குழுவினருக்கு டிபன் வழங்கப்பட்டது.

"இன்னைக்கு என்ன டிபன்" என்று ஒருவர் கேட்க "மனோசித்ராவைத் தவிர மற்ற எல்லோருக்கும் இட்லி, வடை – பொங்கல்" என்றார் ஸ்ரீதர்.

"நடிகை என்பதால் ஸ்பெஷல் டிபனு?" என்று குறுக்கிட்டார், ரகுவரன்.


"அதெல்லாம் ஒன்றும் இல்லை. மனோசித்ராவுக்கு இன்று பிலிம்தான் டிபன்" என்று ஸ்ரீதர் கூறியதும் கொல் என்ற சிரிப்பொலிகள் எதிரொலித்தன.

சென்னை தோட்டக்கலை சங்கத்தில் உள்ள பொட்டானிக்கல் கார்டனில் ரகுவரனை மனோசித்ரா சந்தித்து உரையாடும் காட்சி ஒன்று படமாக்கப்பட்ட போது மனோசித்ரா ஒரே மூச்சில் 4 வரி வசனம் பேச முடியாமல் திணறித் தவித்தார்.

"என்னங்க என்பீங்க. பெயர் என்ன என்று கேட்பீங்க; ஓட்டலுக்கு போகலாம் என்பீங்க. காபி சாப்பிடும் பொழுது கையைப் பிடித்து இது மாதிரி இருக்கே என்பீங்க, மோட்டார் பைக்கில் ஏறிக்கோ என்பீங்க."

இதுதான் மனோசித்ரா பேசி நடிக்க வேண்டிய காட்சி. ஸ்ரீதரின் உதவியாளர் கோபு பல முறை வசனம் சொல்லிக் கொடுத்தும் காட்சி ஓ. கே. ஆகவில்லை.

"இந்த காட்சி முடிய எவ்வளவு நேரமானாலும் இன்று "பிரேக்" சொல்ல மாட்டேன். யாருக்கும் சாப்பாடு கிடையாது" என்று ஸ்ரீதர் சொன்ன பிறகு மனோசித்ரா "மளமள" வென்று வசனம் பேசி நடித்து முடித்தார். காட்சியும் ஓ. கே. ஆனது. (ஐ—10)



இந்தி நடிகை கவிதாவை பாட்டில் ஜெயிப்பது என்று கங்கணம் கட்டி விட்டாரோ ரஜனி? போட்டியில் ஒருவரை ஒருவர் முகத்தை பார்க்கக் கூடாது என்று ஏதும் நிபந்தனையோ? படம்: தாய் வீடு" (ஐ—10)

## "கல்யாண மலர்கள்"

ஸ்ரீ மகாஜோதி பிலிம்சார் "கல்யாண மலர்கள்" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள்.

முன்னணி நட்சத்திரங்கள் நடிக்க இருக்கும் இதன் கதையை இதய ராஜாவும், வசனத்தை ராஜகுருவும் எழுத, சங்கர் — கணேஷ் இசை அமைக்கிறார்கள். (ஐ—10)

## உஷ்.... இது ரகசியம்

கோழி கூவுது ஒன்று அறிமுகமான "ஜிலி" நடிகை திரைக்கு வந்ததே ஒரு படம், அதற்குள் அவர் நடிக்கும் ஒன்று இரண்டு படங்களுக்கு கொடுக்கும் "கால்ஷீட்டு" தொல்லை சகிக்க முடியாதவாறு உள்ளதாம். இப்படியே போனால் ஒன்றிரண்டு படங்களுக்கு நடிகையின் "மார்க்கெட்டும்" "குளோஸ்" ஆனாலும் வியப்பு இல்லையாம்.

★

சினிமா இசை அமைப்பாளர் மெல்லிசை மன்னர், இப்போது "ஒகோ" என விளங்கும் இளைய இசை பற்றி பேசும் போது திறமைசாலிகளை நான் என்றும் குருவாகவே மதிப்பேன், அவர்களின் திறமை மேலும் மேலும் வளர வேண்டும் என்றே வாழ்த்துவேன்! என்று கூறியிருாராம். இப்படி வாழ்த்தும் மன்னர் வாழ்த்துக்கு உரியவரே!

★

"உங்கள் படத்தில் எனக்கு ஏதோ சான்ஸ்?" என படஅதிபர்களிடம் நேரில் சென்று கலகலவென்று சிரித்து கேட்கிறாராம், சத்யத்துக்கு கலாவான நடிகை, இந்த கலகல சிரிப்பும் பலன் அளித்து வருகிறதாம்.

★

அந்நி மிதித்து பார்க்கும் நட்சத்திரத்தின் பெயர் கொண்ட நடிகை, "நான் நடித்துத்தான் முன்னேற விரும்புகிறேன், ஆனால் அதற்கு முட்டுக்கட்டை விழுகிறதே! என்ன செய்வேன்! ஏது செய்வேன்!," என்று வேதனைப்படுகிறாராம்.

★

காதல்ஜோடியை எப்படியாவது "காக்கா" பிடித்து இந்திப் படங்களில் நடிக்க அக்கா – தங்கை என இரு நடிகைகள் முயற்சி செய்கிறார்களாம். இதே போல கவர்ச்சி நடிகையும் முயற்சி செய்கிறாராம்! யாருடைய முயற்சிக்கு பலன் கிடைக்கும், பலிக்கும் என்பது விரைவில் தெரியும். (ஐ—10)



நீங்கள் பெறாத வாய்ப்பை உங்கள் பிள்ளைக்கு வழங்குங்கள்!




சிக்னல் 2 மூலம் அவன் பற்களுக்கு புளோரைட் பாதுகாப்பு அளியுங்கள்!

நினைவிருக்கிறதா? நீங்கள் சிறு பிள்ளையாக இருந்த போது பற்சிதைவைத் தடுக்கச் சிறந்த வழி எதுவும் இருக்கவில்லை. பல் துலக்க நீங்கள் பாவித்த பரம்பரைப் பொருள்கள் - பற்பொடி, மற்றும் பற்பசை கூட - இந்தப் பிரச்சினையை உண்மையில் தீர்க்க முடியவில்லை. ஆனால் இப்போது, நீங்கள் பெறாத அந்த வாய்ப்பை - வாழ்நாள் முழுதும் உறுதியான, ஆரோக்கியமான பற்களைப் பெறும் வாய்ப்பை-உங்கள் பிள்ளைக்கு வழங்க முடியும். புளோரைட் கொண்ட சிக்னல் 2, பற்சிதைவைத் தடுக்கச் சிறந்த வழி என்று, பற்பல சிகிச்சைப் பரீட்சைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டது

பற்சிதைவு ஏற்படும் விதம்:



நீங்கள் ஏதாவது உண்ணும் போது, வாயில் தங்கி விடும் உணவுப் பருக்கைகளை நுண்கிருமிகள் தாக்கி, அவற்றை அமிலங்களாக மாற்றி விடுகின்றன. புளோரைட் பாதுகாப்பு இல்லாவிடின் இந்த அமிலங்கள் பற்களைத்தாக்கிச் சிதைவை ஏற்படுத்துகின்றன.

சிக்னலின் புளோரைட்,பற்சிதைவைத் தடுக்கும் விதம்:



செங்கோடுகளில் புளோரைட் அடங்கியுள்ள சிக்னல் 2, பற்களின் பளபளப்பான எனமல் மேற்பூச்சுடன் இணைந்து, பற்களை உறுதிப்படுத்தி அமிலப் பாதிப்பை மேலும் தாக்குப் பிடிக்கச் செய்கின்றது. உண்மையில் சிக்னல் 2 கொண்டு கிரமமாகப் பல் துலக்குவது, பற்சிதைவு தொடங்காமலே தடுக்க உதவும்.

பல் வைத்தியர்களின் சிபாரிசு பெற்றது.

புளோரைட் கொண்ட சிக்னல் 2, பற்சிதைவைக் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கும் என்று சிகிச்சைப் பரீட்சைகள் நிரூபித்துள்ள. அதனால்தான் பிரித்தானிய பல் ஆரோக்கிய சங்கத்தின் அங்கீகாரம் பெற்றது சிக்னல் 2. உலகெங்குமுள்ள பல் வைத்தியர்கள் அதனைச் சிபாரிசு செய்கிறார்கள்.

உங்கள் பிள்ளை பற்சிதைவுக்கும் வேதனைக்கும் உட்படாமல் காப்பாற்றுங்கள். இன்றே சிக்னல் 2 பாவித்து, அவன் பல் துலக்கத் தொடங்குங்கள்.




சிக்கன அளவு:12.75
பெரியது:8.20 நடுத்தர அளவு:5.85

TAL

புளோரைட் கொண்ட சிக்னல் 2 பற்களைக் கெட்டிப்படுத்திப் பற்சிதைவைக் கட்டுப்படுத்தும்.

# பிடிவாதக் குணமும் பிள்ளைக்குத் தேவை

எப் பொருளை எவர் — குழந்தைகளானாலும், பெரியவர்களானாலும் திருடுவதில் இரண்டு வகை உண்டு.

தனக்குத் தேவையான பொருட்களைத் திருடுவது ஒன்று. தேவையில்லாத பொருட்களைத் திருடுவது மற்றொன்று.

தேவையில்லாத பொருட்களைத் திருடுவது ஒருவித மனநோயின் பிரதிபலிப்பே.

ஒரு குழந்தையானது, தான் தின்பதற்கோ அல்லது விளையாடுவதற்கோ ஒரு பொருள் வேண்டும் என்று ஆசைப்படும் போது தன் பெற்றோரிடம் தன் விருப்பத்தை தெரிவிக்கிறது.

பெற்றோர் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதுமுண்டு; நிறைவேற்றாமல் மறுத்து விடுவதுமுண்டு.

அப்படி மறுத்து விட்டால் அநேக குழந்தைகள் அப்போதைக்கு அழுது தம் ஆற்றாமையை போக்கிவிட்டு, அதன் பின்னர் மறந்து விடும்.

ஆனால், ஒரு சில குழந்தைகள் அப்படி மறந்து விடுவதில்லை. அவர்கள் எப்படியாவது தாங்கள் விரும்பிய பொருளை அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டுவார்கள்.

இந்தப் பிடிவாதமானது, ஒரு விரும்பத் தகாத குணம் என்று பல பெற்றோர் கருதுவது உண்டு.

அது தவறு. பிடிவாதக் குணம் உள்ள குழந்தைகளே

— ஏ. கே. மெஹர்பான் —

எதிர்காலத்தில் தாங்கள் எடுத்த காரியம் எதையும் சாதிக்கக் கூடிய கர்ம வீரர்களாய் இருக்கிறார்கள்.

பிடிவாதம் இல்லாத குழந்தைகள் தாங்கள் பெரியவர்கள் ஆன பிறகும் கூட எளிதில் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுவர். கோழைகளாகியும் விடுவர்.

எனவே குழந்தைகள் பிடிவாதக்காரராய் இருப்பது அவர்களின் பிற்கால வாழ்க்கையின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் மிக மிக இன்றியமையாதது.

பெற்றோர் அதைக் கண்டு கோபப்படவே கூடாது.

எனினும் அத்தகைய பிடிவாதம் உள்ள குழந்தைகள்தான் பெரும்பாலும் திருடும் பழக்கம் உடையவர்களாய் விளங்குகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆதி மனிதனுக்கு இருந்த உடல் வலிமையோ நமக்கு இருக்கிற சூழ்ச்சித் திறமையோ, நிச்சயம் குழந்தைகளுக்குக் கிடையாது. அதனாலேயே அவை திருடுகின்றன.

குழந்தை தாம் விரும்பிய பொருளைப் பணம் கொடுத்து வாங்க முடியாது. அதற்கு வேண்டிய பணம் அவர்களிடம் இருப்பதில்லை.

பெற்றோர் தம் கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு குழந்தைகள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து விடவும் கூடாது.

அவர்கள் செய்ய வேண்டியது "நீ கேட்ட பொருளை நான் வாங்கித் தருகிறேன். ஆனால் அதற்கு முன்னதாக நீ இன்ன காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்." என்ற பாணியில் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்க வேண்டும்.

அப்படி அவர்களுக்கு என்ன வேலை கொடுப்பது?

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பெரியவர்கள் தமது அறிவுத் திறமையைப் பயன்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு அவர்கள் கொடுக்கும் வேலையானது, அக் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கோ அறிவு வளர்ச்சிக்கோ அல்லது பண்பாட்டின் வளர்ச்சிக்கோ உதவுவதாய் இருக்க வேண்டும்.

அடுத்து அந்த வேலை குழந்தையின் சக்திக்கு மீறியதாய் இருக்கவும் கூடாது. சக்திக்கு மீறிய வேலையாய் இருந்தால் அதை செய்வதில் அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட மாட்டாது. அவர்களின் உடல், உள வளர்ச்சியும் இதனால் பாதிக்கப்படக் கூடும்.

ஒவ்வொரு குழந்தையின் வயதையும், மனப் பக்குவத்தையும் கருத்திற் கொண்டு அதற்கேற்ப பணியாற்ற பெற்றோர் தூண்ட வேண்டும்.

இவ்வாறு அவர்களைத் தூண்டுவதால் எந்தப் பொருளையும் திருட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படவே மாட்டாது. அதற்கு மாறாக தமது சொந்த உழைப்பின் மூலமாகவே எந்தப் பொருளையும் தம்மால் சம்பாதித்துக் கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கையே அவர்களின் உள்ளத்தில் வளர ஆரம்பிக்கும்.

தன்னம்பிக்கை இளமைக் காலத்திலேயே வலுவடைந்து விடும்போது குழந்தை பெரியவன் ஆன பிறகும் தன் வாழ்க்கைப் பிரச்சினைகளையெல்லாம் மிக வெற்றிகரமாகச் சமாளிக்க கூடிய ஆற்றலை இயல்பிலேயே பெறுகிறான்.

நேர்மை உள்ளவனாகத் திகழ்வான். பிறரை ஏமாற்றித் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவோ, சூழ்ச்சிகளிலும், நயவஞ்சகங்களிலும் ஈடுபடவோ மாட்டான்.

இதன் மூலம் அவன் வாழ்வில் உயர்வடையவும் மேன்மையடையவும் முடியும்.

இதற்கு வழி அமைப்பவர் யார்? நிச்சயம் பெற்றோரே!



## வனிதையர் வாழ்வில் வசந்தம் வீசாதா?

கரைந்த காலங்கள் சிந்திய கண்ணீர்த் துளிகளின் கவடுகள் மறையாமல் மலர்ந்து சிரிக்கும் தைமகளின் கருணை நாடி வாழ்வில் வசந்தம் வீசாதா என்று ஏங்கித் தவித்துருகும் கன்னியரின் வேதனைக்கு விடிவு எப்போது?

நம்பிக்கை நட்சத்திரம் வருடம் தோறும் மின்னி... மின்னி... தொலைவுக்குத் தாரமாய் மேகக் கூட்டமெனும் சீதன இருளில் சூழ்ந்து முற்றாக மறைந்தே போகிறது.

னும் மகிழ்ச்சிப் பூ மலர்வதும் பின்னர் கருகி சருகாகி உதிர்ந்தே போவதும்தான் வனிதையரின் நிலையா?

மலர்ந்தும் மலராத சீதனப் புயலில் சிக்குண்டு சிறகிழந்து வாடும் கோதையரின் விழிமடல்கள் சொரிகின்ற நீர்த் துளிகள் கூட நம்மவரை கரைந்துருகச் செய்யவில்லையே?

திருமணச் சந்தையில் மங்கையரை விலைபேசி அவர்களின் பூப்போன்ற உள்ளம் முழுவதும் இரத்தத் துளிகளைக் கொப்பிட வைக்கும் காளையர் கூட்டம் புத்தாண்டிலாவது வாழ்விழந்து தவிக்கும் கன்னியர் பால் கருணை காட்ட மாட்டாதா?

— சுலைக்கிதா சிவப்பிரகாசம் —

சாதி, மத, அந்தஸ்து பேதங்கள் இள உள்ளங்களை இரத்தத் துளிகளில் தவைந்திட வைக்கின்றன.

போலியான வரட்டு வேதாந்தங்கள் பசுமையான வாழ்க்கையை வரண்ட பாலைவனமாக மாற்றி அமைக்கின்றது.

ஒவ்வொரு புத்தாண்டின் ஆரம்பத்திலும் நம்பிக்கையே

கனவில், கற்பனையில் இன்றும் பேணி வாழ்க்கை நடத்தும் மெல்லியலாரின் நினைவுகள் நிஜமாகிட மலரும், மலர்ந்து மணம் பரப்ப புத்தாண்டாவது வழி சமைக்கட்டும்.

## பிறக்கப் போகும் பிள்ளைக்கு ஏற்ற உடை



தாய்மார்களே! பிறக்கப் போகும் உங்கள் பாப்பாவை விட்டு இனிமையான கற்பனைகளில் ஆழ்ந்திருப்பீர்கள்.

அத்துடன் அதற்குத் தேவையானவற்றை திட்டமிட்டு சேகரிக்கவும் தொடங்கி விடுவீர்கள்.

— சபீனு முஹம்மட் —

அவ்வாறு சேகரிப்பதில் முக்கிய இடத்தை பெறுவது ஆடைகளே.

இவ்வாடைகளை பல மாதங்களின் முன்பே தயார் பண்ணிக் கொள்ள வேண்டும். ஏனெனில் மாதங்கள் செல்லச் செல்ல தாய்மார்களுக்கு உடலில் அலுப்பு ஏற்படும்.

இவ்வாடைகள் பல மாதங்களுக்கு பாவிக்கக் கூடிய வகையில் தயார் செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் குழந்தை பிறந்ததும் அவர்களின் வேலைகளைக் கவனிக்கவே நேரம் சரியாக இருக்கும். அவர்களுக்கு உடைகள் தயாரிக்க நேரம் கிடைக்காமல் இருக்கும்.

எனவே ஏற்கனவே தயார் செய்து கொண்டால் சிரமம் இருக்காது அல்லவா?

அவ்வாறு நீங்கள் தயார் பண்ணும்போது ஒரே அளவுகளில் தைத்து விடாமல் வெவ்வேறு அளவுகளில் தைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் குழந்தைகளின் வளர்ச்சி மிக துரிதமானது. எனவே கூடிய கெதியில் உடை சிறிதாகி விடும்.

பின்புறம் திறப்பு வைத்து இரண்டு மெல்லிய நாடாக்களால் கட்டக் கூடியதாக சிறிய சட்டைகள் அமைய வேண்டும்.

துணிகள் சருமத்தைப் பேணக் கூடியதாக இருக்க வேண்டும். மஸ்லின், மல் போன்றவை மென்மையான துணிகள்.

நம் நாட்டுச் சூழலுக்கு உகந்தவை. குளிர் காலங்களில் கம்பளி உடைகளை அணிவிக்கலாம்.

இவற்றை மனதிற் கொண்டு குழந்தையின் உடையை தயாரிப்போமானால், குழந்தை கிடைத்த பின் கஷ்டமே இருக்காது. (ஜ)

# பொருளுக்குப் பதில் பணம் வழங்கலாம்

## என்ன பரிசளிப்பது என்ற வாதம் ஏன்?

பொதுவாக எந்த விழா நடந்தாலும் அதில் பரிசு கொடுப்பது என்பது ஒரு பழக்கமாக உள்ளது. இந்தப் பரிசு மற்றவர்களின் சந்தோஷத்தில் நாமும் பங்கு கொள்கிறோம் என்பதின் அடையாளம் ஆகும்.

ஒருவருக்கு ஏற்படும் செலவை உறவினர்களும் நண்பர்களும் பங்கு போட்டுக் கொண்டு அவர்களின் சிரமத்தை குறைக்க வேண்டும் என்பதுதான் இந்தப் பரிசு கொடுப்பதின் உண்மையான பொருளாகும்.

முற் காலத்தில் எல்லாம்

— தங்கம் சந்திரமோகன் —

ஒவ்வொரு உறவினரும் இவ்வளவு செய்ய வேண்டும். இன்ன இன்ன பொருள்களாக கொடுக்க வேண்டும் அல்லது இன்ன இன்ன செலவை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஒரு கட்டுப்பாடு இருந்தது. இது உண்மையிலேயே பெருமளவில் உதவியாக இருந்தது.

காலப்போக்கில் மனிதர்கள் எல்லாம் பிரிந்து தொழில் நிமித்தம் பல இடங்களில் வாழ நேர்ந்திருக்கும் பொழுது, இந்த வழக்கங்களும் பல மாறுதல்களை பெற்று விட்டன.

தற்பொழுது எந்த விழாக்களிலுமே, பரிசுகள் வந்து குவிந்தாலும், அது எந்த அளவில் விழா நடத்துபவருக்கு உதவுகிறது என்பது சந்தேகம்தான்.

பரிசுகள் என்பது யாருக்குக் கொடுக்கிறோமோ அவர்களுடைய வாழ்க்கையை வைத்து பயன்பட உதவுவதாக இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

மிகவும் பணக்காரர்களுக்கு பரிசு கொடுப்பதாக இருந்தால் உயர்ந்த கலைப் பொருள்களை கொடுக்கலாம். அதனைப் பாதுகாத்து வைத்து, ரசிக்க, சூழ்நிலையும் இடமும் இருக்கும்.

சற்று நடுத்தரமாயின் அன்றாடத் தேவைகளுக்கு பயன்படக் கூடிய பொருள்களாகச் சிந்தித்து வாங்கிக் கொடுப்பது முறையாகும். அவர்களுடைய தேவையோ, விருப்போ, நமக்குப் புரியாதது என்றால் நம்மால் முடிந்த தொகையை நாம் பணமாகவோ பரிசு காசோலையாகவே கொடுத்து விடுவதே சிறந்தது.

சில சந்தர்ப்பங்களில் மணமகளுக்கு 6, 7 ஒப்பனை பெட்டிகளாக வந்து சேரும். மணமகனுக்கு ப்ளாஸ்க்குகளாகவும், மேசை விளக்குகளாகவும் வந்து குவியும்.

முக்கியமான நண்பர்கள், அருமையானவர்கள் கொடுத்தது தான் என்றாலும், இத்தனையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? இன்னும் சில சந்தர்ப்பங்களில் தெய்வப் படங்களாக வந்து குவியும்.

இதனால் இந்தப் பரிசுப் பொருள்களை வைக்க தனி இடத்தை தேட நிர்ப்பந்தம் ஏற்படுகிறதே தவிர, பரிசுகளின் பயன் இருப்பதாகத் தெரியவில்லை.

அதே தருணத்தில் திருமணச் செலவு செய்பவரின் பளுவை குறைக்க வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பமான இந்த பரிசளிப்பு அர்த்தமில்லாமலும் போய் விடுகிறது.

ஆகவே இந்தப் பிரச்சினையை சமாளிப்பதற்காக ஓரளவு திர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது. உழைப்பவர்கள் கௌரவமாக பரிசுகள் வேண்டாம் என பெரிய எழுத்துக்களில் போட்டிருந்தாலும் விழாவுக்கு போவோர் வெறும் கையுடன் போவது இயலாத காரியம்.

இன்றைய காலப் போக்கிற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பது நல்லது.

சிறிய அளவில் தேவையில்லாத பொருள்களை வாங்கிக் கொடுப்பதை விட எல்லோரும் இணைந்து கூட்டுறவு முறையில், கணிசமாக, பெரிய பொருளாக, வாங்கிக் கொடுத்தால், கொடுத்தவருக்கும் நிறைவாக இருக்கும். பெற்றுக் கொண்டவருக்கும் பார்க்கும் பொழுதெல்லாம் ஒரு இன்ப நிறைவு ஏற்படும்.

காலத்திற்கு ஒப்ப சில புது வழக்கங்களை இதற்காக நாம் ஏற்படுத்திக் கொண்டால் விவேகமான செயலாக இருக்கும்.

அழைப்பு பத்திரிகைகளிலேயே பரிசுகளுக்காக யாரிடம் தொடர்பு கொள்ள வேண்டும் என நம்பிக்கைக்கு உகந்த நண்பரையோ, உறவினரையோ நியமித்து அவருடைய விலாசத்தை குறிப்பிட்டால் பரிசு அளிக்க விரும்புபவர்கள், அவர்களுடன் தொடர்பு கொண்டு தங்களால் இயன்ற தொகையை அவர்களுக்கு அனுப்பலாம்.

விழாவுக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பாக எவ்வளவு தொகை சேர்ந்து விடுகிறது என்று தெரிந்து விடும். சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து, அவர்களுக்குத் தேவையான பரிசுகள் வாங்கலாம்.

இப்படி செய்வதால் கொடுப்பவர்களின் பணமும் வீணாகாது. விழா நடத்துபவருக்கும் சிறந்த உதவியாக இருக்கும். இந்த முறையை சிறிது சிந்தித்து செயலாற்ற முனையலாமே.

## சின்னச் சின்ன யோசனைகள் சில

கீரையின் வேர் மட்டும் தண்ணீரில் படும்படி ஒரு பாத்திரத்தில் வைத்திருங்கள். இரண்டு நாள் வரை வாடாமல் இருக்கும்.

★

பருப்பு வகைகளோடு சில காய்ந்த வேப்பிலைகளைப் போட்டு வையுங்கள். புழு பூச்சிகள் அண்டாது.

★

குழம்பில் காரம் அதிகமாகி விட்டதா? சிறிது எலுமிச்சம் பழச்சாறு விடுங்கள். காரம் குறைந்து விடும்.

★

ரவையை வறுத்தோ, ஆவியில் வைத்தோ எடுத்து வைத்துக் கொண்டால் புழு வராது. பூச்சிகள் அணுகாது.

★

முகம் பார்க்கும் கண்ணாடியை டிகாஷன் கழிவு தேயிலையால் துடைத்தால் அழுக்கு நீங்கி கண்ணாடி பளபளவென்று மின்னும். (ஜ)

— றசீனு மீரான் சாகிப்

## ஏற்ற உயரம் பெறுவதற்கு சத்திர சிகிச்சை

குட்டையான பெண்கள் உயரமாக வளரவும், மிகவும் நெட்டையான பெண்கள் கணவனுக்கேற்ற உயரமாக இருக்கவும் புதிய சிகிச்சை முறை ஒன்றை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

ஹார்மோன் அறுவை சிகிச்சை அளிப்பதன் மூலம் உயரங்களை மாற்ற முடியுமாம்.

இந்த சிகிச்சை மூலம் கர்ப்பப்பை கோளாறு எதுவும் நிகழாது என்றும் மேற்படி நிபுணர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். (ஜ-11)

வனிதையருக்கேற்ற பலவித வண்ண சட்டைகள்



# மாதர் மஞ்சரி

தயாரிப்பு: சுந்தரி

## பெண்களுக்கு பின்னழகும் தேவை

பின்னழகும் பெண்மையின் சிறப்பான அம்சங்களில் ஒன்று. அதை எப்படி பேண வேண்டும் என்பதற்கு இதோ சில குறிப்புகள்;

உடலின் பின்புற தசை நார்களுக்கு, நரம்புகளுக்கு வேலை கொடுக்காமல் "டன்லப்" போட்ட குஷன்களில் எப்போதும் உட்காருவதால் தசைகள் தடித்துப் போய் வயதாக ஆக மிகவும் பருமனாக தசைப் பிண்டமாக ஆகி விடுகிறது.

எனவே டி.வி. பார்க்கும் போது அல்லது புத்தகம் படிக்கும்போது வெறும் தரையில் அமருங்கள். அல்லது குஷன் போடாத மர நாற்காலியில் அமருங்கள்.

உங்களுடைய பின்புறம் பருமனாகவோ, தொள தொளவென்றோ இருக்கக் கூடாது. அதற்கு ஒரு தேகப் பயிற்சி உண்டு. அதை எப்போதும் செய்யலாம்.

உங்கள் கால்கள் இரண்டையும் தரையில் சௌகரியமாக வையுங்கள். கைகள் இரண்டையும் தொடையின் மீது இலேசாக வையுங்கள். முட்டிகளையும் தொட்டாற்போல் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது பின்புற தசைநார்களை சற்று இறுக்கி வைத்து 1, 2, 3 என்று சொல்லுங்கள். முடிந்த வரையில்தான், பிறகு விட்டு விடுங்கள். இப்படியாக ஐம்பது தடவை செய்யலாம். இதனால் பின்புற "பருமன்" (சதை) குறையும். (ஐ)

— பெ. வசந்தி

## தேநீர் குடிப்பதில் சாம்பியன்

இட்லியைச் சேர்ந்த வின்டர் என்ற பெண், ஆஸ்திரேலியாவிலேயே தேநீர் குடிப்பதில் சாம்பியனாகத் திகழ்கிறார்.

இவர் தினமும் ஐம்பது கோப்பை தேநீர் பருகுகிறாராம். (ஜ-11)

## தூக்கம் வரவில்லையா?

தூக்கமில்லாமல் தவிக்கும் பெண்களுக்கு ஒரு நற்செய்தி

தூக்கம் வரவில்லையே என துவண்டுவிழும் பெண்கள் மருதாணி மலரை தலையில் சூடிக் கொண்டால் சுலபமாக தூக்கம் வரும். (ஜ—11)

சிந்தாமணி

CHINTAMANI தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

# தேன் சுவை தரும் 'விருந்துப்பழம்'

## டின்களில் அடைத்து ஏற்றுமதி செய்ய முயற்சி

பலாப் பழங்களில் தேன் போல் இனிமையானது வேரில் பழுத்த பலாப் பழம்தான். இதனை எடுத்துக்காட்டும் முகமாகப் பாரதிதாஸன் ஒரு கவிதையே பாடியுள்ளார்.

அழகும், அருங் குணங்களும் உடைய ஒரு இளம் பெண் இளவயதிலேயே தன் கணவனை இழந்து விட்டால், அவளுக்கு மறுமணம் செய்து வைக்க வேண்டும் என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாஸனின் கொள்கை.

இதனை எடுத்துக் கூறும் போதுதான் கவிஞர் வேரில் பழுத்த பலாப் பழத்தை மிகவும் உயர்ந்த உவமையாகக் குறிப்பிட்டுள்ளார். அக் கவிதை வரிகள் இவைதாம்:–

"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே – அங்கு
வேரிற் பழுத்த பலா – மிகக்
கொடியதென் றெண்ணிடப்
பட்டதண்ணே – எழில்
கொழிக்கும் வட்ட நிலா!"

இப்படி இலக்கியத்துக்கும் தேன் சுவையூட்டிய பலாப் பழம், மனிதர்க்குப் பல்வேறு வகைகளிற் பயன் கொடுப்பதாகும் என்பதைக் கூறுகின்றது இக் கட்டுரை.

★

தமிழ் மக்கள் மங்கள காரியங்களை நடத்தும்போது மலர், மஞ்சள், முக்கனிகள் ஆகியவற்றுக்கு முதலிடம் அளிப்பார்கள். முக்கனிகள் என்பவை மா, பலா, வாழையாகும். இந்தப் பழ வர்க்கங்களில் பலாப் பழம் திறமும், சுவையும், மணமும் கொண்டது.

இப்பொழுது பலாப் பழ "ஸீசன்" ஆரம்பமாகி விட்டது. வீதிகளிலும் வீடுகளிலும் அதன் சுகந்த மணம் "கம்" என்று வீசிக் கொண்டிருக்கின்றது.

அக் காலத்தில் பலாப் பழங்களை வாழை இலை, கமுக மடல் ஆகியவற்றில் வைத்து வெட்டுவார்கள். அப்படி வெட்டும் போது, அப் பழத்தின் தேன் சுளைகளின் ரசம் கசிந்து ஒழுகும்.

இப்படி வெட்டி எடுக்கும் இந்தப் பலாப் பழச் சுளைகள், தேன் சுவையையும், தங்க நிறத்தையும், நறுமணத்தையும் கொண்டு இலங்கும்.

இப் பழத்தின் தாயகமாக விளங்குவது பாரதநாடுதான். ஆனால், பலா மரங்கள் இலங்கை, பர்மா, மலேஷியா, பிரேசில், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் பெருவாரியாக வளர்கின்றன.

முட்கள் பதிந்த ஒரு பெட்டிக்குள் பாதுகாப்பாகத் தங்கக் கட்டிகளை அடுக்கி வைத்தது போல் விளங்கும் பலாச் சுளைகளை பிரேஸில் நாட்டு மக்கள் மிக ஆவலுடன் உண்பார்கள்.

**– ஆர். ஹேலி –**

"விருந்துப் பழம்" என்று இதை அவர்கள் அழைப்பர். விருந்து மண்டப மேசைகளில் வாழைப் பழத்துடன் போட்டி போட்டுக் கொண்டு அமரும் பெருமை பலாப் பழங்களுக்கே உண்டு.

பிரேஸில் நாட்டுப் பெண்கள் மிக்க அழகு வாய்ந்தவர்கள். அந்த இளம் யுவதிகளை நேசிக்கும் இளைஞர்கள் அவர்களின் தங்க நிறத்திற்கும், இனிமையான பேச்சிற்கும் உவமையாக "பலாப்பழ அழகிகள்" என அழைப்பார்களாம். இவ்வாறு பிரேஸில் நாட்டில் பலாப்பழங்கள் பிரசித்தி பெற்றுள்ளன.

பலா மரங்கள் மனிதனுக்குப் பல்வேறு வகையிலும் பயன் தருகின்றன. பனை, தென்னை போலவே பலா மரமும் பல வகையிற் பயன்படுகின்றது. முதலில் பலாச் சுளைகள் உண்பதற்கு உதவுகின்றன. சுளைகளின் சாற்றைப் பிழிந்து எடுத்தால் அது குளிர்பானம் தயாரிக்கவும், "ஜாம்" தயாரிக்கவும் உதவுகின்றது.

சுளையை நீக்கிய பின்பு பலாப் பழத்தின் ஏனைய பகுதிகள் ஆடு மாடுகளுக்கு உணவாகின்றன. இவற்றை உண்பதால் ஆடு, மாடுகள் அதிகப் பாலைச் சுரக்கும் என்பார்கள். ஆனால், இப்பொழுது அந்தச் சக்கைகளைக் கொண்டு பலவகையான உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

பலாவின் இலைகளையும், ஆடு மாடுகள் விரும்பி உண்கின்றன. வாழை இலை கிடையாத இடங்களில் பலா இலைகளைப் பொருத்தி உணவு படைப்பர்.

பலா மரத்தின் பழுத்த இலைகளைத் தட்டுகளாக இணைத்து அதில் உணவு உண்பதால் பல நோய்கள் குணமாகின்றன. உடற் சூட்டிற்கும் இது நன்மை பயக்கின்றது.

பலா மரம் நிலை, கதவு, ஜன்னல் போன்ற பல்வேறு உபயோகத்திற்கும் சிறந்ததாகும். பலா மரத்தால் பல்வேறு தளவாடங்கள் தயாரிக்கப்படுகின்றன. பௌத்த விகாரைகள் அமைப்பதற்கும் பலா மரம் பெரிதும் உபயோகப்படுகின்றது.

இசைக் கருவிகள் செய்வதற்கும் பலா மரம் பன்னெடுங் காலமாகப் பயன்பட்டு வந்துள்ளது. வீணை செய்வதற்குப் பலா மரத்தையே தேர்ந்து எடுப்பர். அக்கால இசை அரங்குகளில் பயன்படுத்தப்பட்ட வீணைகள் பெரும்பாலும் பலா மரத்தால் செய்யப்பட்டவையாகும்.

பச்சைப் பலாக்காயில் கூட்டு, குழம்பு, பொரியல் போன்றவற்றைத் தயாரிப்பதில் கேரளப் பெண்கள் கைதேர்ந்தவர்கள்.

பழுக்காது சுளைகளில் தயாரிக்கும் வறுவல் சுவையானது. பழத்தில் பாயசமும் ஆக்குவர்.


இந்திய ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்திய ஓர் ஆராய்ச்சியில் பலாப் பழத்தை டப்பாவில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பலாம் என்று நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். பலாப்பழத்தின் மற்றொரு சிறப்பு, அது மதுவுக்குப் பகை என்பதுதான். பலாப்பழம் தின்ற பிறகு வைன் அல்லது ஏதாவது புளித்த பானம் பருகினால் ஆபத்துத்தான்.

அஸ்ஸாமில்தான் பலா மரம் அதிகம். அடுத்தபடியாகப் பீஹாரில்; அதற்கு அடுத்தபடி கேரளந்தான். மைசூரிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் மற்ற இடங்களிலும் பலா இருந்தாலும் முறையாக வளர்ப்பதில்லை.

பலாவில் இரண்டு இனம் உண்டு. பழத்தின் குணத்தை வைத்துக் கொண்டு "கூழை" என்றும் "வரிக்கை" என்றும் வகைப்படுத்துவார்கள். பலாக் கொட்டையை முளைக்க வைத்துச் செடிகள் உண்டாக்கி நட்டுத்தான் பலா மரத்தை வளர்க்கிறார்கள். இந்த முறையைக் கைக்கொள்வதால் பல தடவைகளிலும் வரிக்கைப் பலாவை பிரித்து எடுக்க முடியாமல் போய் விடுகிறது.

வரிக்கையின் பழக்காம்பு அதிகக் கனமும் மிக்க இனிப்பும் கொண்டது. நாரும் இராது; கூழையின் பழத்துக்குக் காம்பு குறைவு; இனிப்புடன் சிறிதளவு புளிப்பும் கலந்திருக்கும். இதை விரும்புவோர் குறைவு.

பழமாகத் தின்பதற்கும், வாட்டி வறள வைப்பதற்கும், பாயசம் செய்வதற்கும் "வரிக்கை"தான் ஏற்றது. ஆனால் பல தடவைகளிலும் வரிக்கையிலிருந்து விதையை எடுத்து நட்டால் அது கூழையாக மாறிவிடுகிறது. இந்த நிலை பலாப்பழ ரசிகர்களுக்கு ஏமாற்றமாக முடிகிறது. இதைப் போக்க வழி, ஒட்டுச் செடிகளை உருவாக்கி வழங்குவதுதான். வரிக்கைப் பலாவின் ஒட்டுச் செடிகளை இப்படி உருவாக்கலாம் என்று தமிழ் நாட்டில் கல்லாரத்திலும் கேரளத்தில் தளிப்பறம்பிலும் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து முன்பே தெரிய வந்தது.



பலாப் பழப் பிரியர்கள் கூடப் பலா மரத்தை வளர்க்க முன்வராமல் இருப்பதற்கு நட்டு வளர்க்கும் இனத்தை இன்ன வகையானது என்று உறுதியாகத் தேர்ந்து கொள்ள முடியாததுதான்.

இந்த நிலையில் மிகவும் நம்பிக்கையூட்டக் கூடிய சிறப்பான முறைகளை வெள்ளாணி விவசாயக் கல்லூரிப் பேராசிரியர் திரு. கே. ஸ்ரீநிவாஸன் தமது ஆராய்ச்சியின் பயனாக வெளியிட்டிருக்கிறார்.

அவருடைய சொந்த ஊரான "முட்டத்து" என்ற இடத்தில் சிறந்த வரிக்கைப் பலா ஒன்றின் ஒட்டுச் செடியை உற்பத்தி செய்தார். அதேபோல் உற்பத்தி செய்த ஒரு செடியை 1967 நவம்பர் மாதம் வெள்ளாணி விவசாயக் கல்லூரியில் நட்டார். அது 1970 மார்ச் மாதம் இலை விட்டுப் பூத்தது. இப்படிப் பூ எடுக்கப் பொதுவாக நாலு அல்லது ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

இரண்டு வருஷம் நாலே மாதத்தில் இப்படிப் பூத்த பூவிலிருந்து ஒட்டுச் செடிகளை உருவாக்கி, ஒரு தோட்டத்தையே அவர் அமைத்து விட்டார். செடிகளை மேல் நோக்கி வளர விடாமல் இவற்றின் கிளையை இழுத்துக் கட்டிப் படரத்தான் செய்கிறார்கள்.

பெண்ணில் பருமன் உள்ள கிளைகளில் ஆறு முதல் ஏழு மாதம் வரையில் வளர்த்த பலாவின் செடிகளின் மேல் தோலியை அகற்றிச் சேர்த்து ஒட்டுச் செடிகளை உண்டாக்கி வருகிறார்.

"முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை" என்ற பழமொழி பலா மரத்தைப் பொறுத்தவரை முற்றும் உண்மை; இப்படி நாம் எவ்வளவோ அசட்டை செய்தும் ஆண்டு தோறும் இன் சுளைகளை வழங்கிவரும் பலாவை இனியும் அப்படிக் கவனிக்காமல் விடுவது சரியல்ல. (22)

# இமயத்தின் சிக...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியத்தைக் கொடுத்தது. சோவியத் மலையேறிகள் எவரெஸ்டில் கழித்த 50 நாட்களில் 45 நாட்கள் மிகக் கடுமையானவையாக இருந்தன.

இதற்குச் சான்றாக எவரெஸ்ட் சிகரத்தை முதலிற் சென்றடைந்த சோடியான விளாடிமிர் பலிபேடினும், எட்வர்ட் மிஸ்லோவ்ஸ்கியும் இறுதி 348 மீட்டர் உயரத்தை ஏறி முடிப்பதற்கு எட்டு மணித்தியாலங்களும் 25 நிமிடங்களும் எடுத்தனவென்றால் சொல்ல வேண்டுமா?

இமாலயப் பிரதேசத்தில் தவறுதலாக எடுத்து வைக்கப்படும் எந்த ஓர் அடியும் மரண ஆபத்தை ஏற்படுத்துவதாகவே இருந்தன.

"உயர்ந்த மலைகளுக்கு ஏறுவது அவசியமான ஒரு ஏற்பாடுதானா?" இப்படி அவர்களிடம் சிலர் கேட்டார்கள். ஒரு முறையாவது இம் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கே இதன் அருமை பெருமைகள் தெரியும் என்று பதிலளித்தனர் அவர்கள்.

"மலைகள் இருக்கும் வரை மக்கள் அதில் ஏறவே செய்வார்கள். இது மலைகளைப் பரிசிப்பதற்கும் மலையேறிகளின் வைராக்கியத்தைப் பரீட்சிப்பதற்குமான செயற்பாடாக இருக்கும்" என்று அவர்கள் கூறினார்கள்.

கடைசியாக, கடந்த 1982 டிசம்பர் 30 ஆம் திகதி பெல்ஜியம் நாட்டு மலையேறிகளும் எவரெஸ்டுக்கு ஏறிச் சென்றார்கள் என்றும், அவர்களில் ஒருவர் உச்சியை அடைந்து திரும்பும் போது விழுந்து இறந்து பேர் என்றும் செய்திகள் வெளியாகின.

ஜீன் பேர்லியம் என்ற 44 வயதுடைய இந்த மலையேறும் வீரர் டிசம்பர் 30 ஆம் திகதி எவரெஸ்ட் சிகரத்தின் கிழக்கு முகப்புப் பகுதியில் திபெத் பக்கமாக விழுந்தார்.

அதன் பின்னர் அவரைக் காணவில்லை!

அவருடன் வந்த மலையேறும் குழுவினர் நீண்ட நேரம் தேடுதல் வேட்டை நடத்தினர். ஆனால் முயற்சி பலனளிக்கவில்லை. எனவே அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவர் குளிரால் விறைத்து இறந்து போயிருக்கலாம் என்று அவரது குழுவினர் நம்பினார்கள். அதனால் தேடுதல் வேட்டை கைவிடப்பட்டது.

என்ன ஆச்சரியம்!

இரண்டு வாரத்தின் பின்னர் அவர் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின.

சிகரத்திலிருந்து கீழே, மிக தாழ்வான பகுதியில் அவர் விழுந்த போதிலும் அவரது உடலில் காயம் ஏதும் ஏற்படவில்லை.

கீழே விழுந்த அவர், மூன்று நாட்கள் தொடர்ந்து, உண்ண உணவும், அருந்த நீரும் இன்றி பனிப்புயலுக்கு மத்தியில் இமாலயப் பிரதேசத்தில் அலைந்து திரிந்தார்.

சந்தர்ப்பவசமாக மூன்று நாட்களின் பின்னர் திபெத்திய கிராமம் ஒன்று அவரது கண்ணில் படவே, அக்கிராமத்தைச் சென்றடைந்தார்.

அங்குதான் அவருக்கு மூன்று நாட்களின் பின்னர் உண்ண உணவும், தேநீரும் கிடைத்தன.

சில நாட்களின் பின்னர், ஜீப் ஒன்றில் நேபாள எல்லையைச் சென்றடைந்தார். ஜனவரி 15 ஆம் திகதி அவர் காத்மண்டுவை வந்தடைந்தார்.




இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12. (இலங்கை) தபால் பெட்டி: 1613. வெளியிட்ட திகதி 6, பெப்ரவரி 1983.

Chintamani 5, Gunasena Mawata, Colombo 12, P. O. Box 1613.